வெகுஜன அரசியல் மாத இதழ்

Registered as a Newspaper in Sri Lanka

# புதிய நீதி

முரசம் 02
முழக்கம் 06
விலை ரூபா.30
செப்-ஒக்டோபர் 2013

පුදිය නීදි
PUTHIYA NEETHI





# அரசாங்கத்தின் அடுத்த நகர்வு?

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரர்களும் இரண்டு தடவைகளில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி எட்டு ஆண்டுகளின் நிறைவை எட்டி நிற்கிறார்கள். இக்காலப் பகுதியில் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியப்படியே பயணித்து வந்துள்ளது. இன்றும் அதே பாதையில் தான் சென்று கொண்டிருக்கிறது. அதன் விளைவுகளைப் பாரிய நெருடிக்கடிகளின் சுமைகளாக நாட்டின் அனைத்து உழைக்கும் மக்களும் சுமந்து நிற்கின்றனர். அதேவேளை முப்பது வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட பேரினவாத ராணுவ ஒடுக்குமுறை யுத்தம் சுமார் மூன்று லட்சம் வரையிலான வடக்கு கிழக்கின் மக்களைப் பலி கொண்டுவிட்டது. யுத்த அழிவுகள், இழப்புகள், அவல வேதனைகளில் இருந்து இன்னமும் மக்க்ள் மீட்கப் படவில்லை.

யுத்தம் முடிவுற்ற நான்கு ஆண்டுகள் கடந்த பின்பும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழர் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. வடமாகாணசபைத் தேர்தல் இருபத்தைந்து வருடங்களுக்குப் பின்பு நடாத்தப் பட்டிருப்பது மட்டுமே இடம்பெற்றிருக்கிறது. ஆனால் அது தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு எதனையும் கொண்டு வரமாட்டாது. அதனிடம் அதிகாரப் பகிர்வை உள்ளடக்கிய விடயங்கள் எதுவும் இல்லை.

ராஜபக்ஷ ஆட்சியின் நோக்கம் நாட்டையும் மக்களையும் சுபீட்சமான எதிர்காலத்திற்கு இட்டுச் செல்வதல்ல. சிங்கப்பூராக்குவோம் என்பது மக்களுக்கானதல்ல. ஏனெனில் சிங்கப்பூர் முதலாளிகள் பணக்காரர்களுக்குரிய நாடே தவிர மக்களின் சுபீட்ச வாழ்வுக்குரிய நாடல்ல. மகிந்த சிந்தனை அரசாங்கம் மக்கள் பக்கமா அல்லது பெரும் முதலாளிகள் பக்கமா என்னும் போது திட்டவட்டமாக அது முதலாளிகளினதும் முதலாளித்துவச் சுரண்டிலினதும் பக்கமாகவே இருந்து வருகிறது என்பது தெளிவு.



தமது கிணறுகளின் சுத்தமான நீர் அமிலத்தன்மையடைந்து மாசடையக் காரணமான ரப்பர் கையுறை தயாரிக்கும் தொழிற்சாலையை மூடி அங்கிருந்து அதனை அகற்றுமாறும் கம்பஹா மாவட்டம் வெலிவேரியாவில் சுமார் ஆறாயிரம் மக்கள் ஒன்று கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்கள் அனைவரும் சிங்கள மக்கள். ஆனால் மகிந்த சிந்தனை அரசாங்கம் தனது ராணுவம் மூலம் குடிநீர் கேட்ட மக்களுக்கு துப்பாக்கி ரவைகளை வழங்கி மூன்று உயிர்களைப் பலிகொண்டது. இன்று வரை அப் பெருமுதலாளிய தொழிற்சாலை அகற்றப்படவில்லை. சில வார இடைவெளிக்குப் பின் அத்தொழிற்சாலை அங்கு தொடர அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து சிங்கள பௌத்தம் பற்றிப் பேசும் மகிந்த சிந்தனை அரசாங்கம் யார் பக்கத்தில் இருக்கிறது என்பது மக்களுக்குத் தெளிவாகி உள்ளது.

அண்மையில் வடக்கு, வடமேல், மத்திய மாகாண சபைகளுக்குத் தேர்தல்கள் இடம்பெற்றன. இரண்டு மாகாணங்களில் அரசாங்கம் வெற்றி பெற்றுக் கொண்டது. இருப்பனும வெற்றிலைக்கான வாக்களிப்பு வீதமும், வாக்களிக்காது விட்டோரது வீதமும், முன்னாள் ராணுவத் தளபதியும் ஜனாதிபதியின் எதிராளியுமான சரத் பொன்சேகாவின் கட்சிக்கு ஐந்து ஆசனங்கள் கிடைத்தமையும் இந்த அரசாங்கத்தின் மீதான மக்களது அதிருப்தி வெறுப்பை வெளிப்படுத்திக் காட்டியிருந்தது. என்றாலும் வடக்கின் தோல்வியை ஈடுசெய்வது போன்ற வடமேல், மத்திய மாகாணசபைகளது வெற்றிகள் காட்டப்பட்டன.

அதேவேளை வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெருவெற்றி பெற்றுக் கொண்டது. அங்கு முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரை முதலமைச்சராகக் கொண்ட மாகாணசபை ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது. முன்பு முதல் தடவையாகத் திருகோணமலையை மத்தியாக வைத்து 1988ல் தமிழ் இளைஞர் இயக்கமான ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைமையில் வடக்கு கிழக்கு மாகாணசபை ஆட்சி அமைக்கப்பட்டது. அப்போது இந்திய ராணுவம் அமைதிப் படை என்ற பெயரில் வடக்குக் கிழக்கில் நிலை கொண்டிருந்தது. இருபத்தைந்து வருடங்களுக்குப் பின்பும் அதே இந்தியாவின் பின்புல அழுத்தத்தின் காரணமாகவே இரண்டாவது தடவையாக வடமாகாண சபை தனிச் சபையாக இயங்க வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது வடமாகாணசபையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்றிருந்தாலும் அதனைத் தமிழரசுக் கட்சி இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா

பக்.02>>

## இதற்காகத்தானா மக்கள் வாக்களித்தனர்

'ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை' எனக் கேட்டு தமிழீழத்திற்கு பரணி பாடிய இந்தியாவில் வாழ்ந்து வருபவர் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன். தமிழீழம் கிடைக்காதுவிட்டாலும் இப்போது மாகாணசபை கிடைத்திருக்கிறது. அதற்கு அதிகாரங்கள் எதுவும் இல்லாதுவிட்டாலும் தமிழர் ஆண்ட பரம்பரையினரிடம் 'ஆட்சி' சென்றடைந்துள்ளது. அதில் தமிழ்ப் பெரும் குடியினருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அதேவேளை தமிழ்ச் சாதாரண மக்களுக்கு குறிப்பாக யுத்த இழப்புகளையும் அவலங்களையும் அனுபவித்த மக்களுக்கு எவை எவை கிடைக்கும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. ஆனால் இரா. சம்பந்தனுக்கும், முதலமைச்சராகி நிற்கும் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் முடிகளும், வேலும், பொன்னாடைகளும் கிடைத்திருக்கின்றன. இதற்காகத்தானா தமிழ் மக்கள் தமது வாக்குகளை அள்ளிக் கொடுத்தார்கள். ஆரம்ப அடியெடுத்தல் பிழைத்தால் அடுத்தடுத்த அடியெடுப்புகளும் பிழைக்கும் என்பார்கள். தமிழர்கள் மத்தியிலான ஆண்ட பரம்பரை வழிவந்த ஆதிக்க அரசியல் சக்திகள் இன்னும் எத்தனை காலத்திற்குத் தமிழ் மக்களை ஏமாற்றப் போகிறார்கள். தமிழ்ச் சாதாரண மக்கள் எவ்வளவு காலத்திற்கு ஏமாறப் போகிறார்கள். இதுவே இப்போது எழுந்து நிற்கும் ஆழமான அரசியல் கேள்வியாகும்.

## மலையகத் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தால் மக்களுக்குக் கிடைக்கப் போவது எவை!


நடந்து முடிந்த மத்திய மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் கணிசமான செல்வாக்குக் கொண்டவை. அவற்றை எப்போதும் மலையகத் தொழிற்சங்க அரசியல் ஆதிக்கம் கொண்ட சக்திகளே பெற்று வந்தன. அந்த வாக்குகளை மக்களுக்கான அல்லது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான வாழ்வுரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்குப் பயன்பட்டதில்லை. இவ் ஆதிக்கத் தலைமைகள் தமது பதவிகள் சொத்து சுகபோக வாழ்வுக்கே அவ்வாக்குகளைப் பயன்படுத்திக்கொண்டன.

அதற்காக ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் பேரினவாத முதலாளித்துவ அரசாங்கம் எதுவானாலும் அதற்கு ஆதரவு தெரிவித்து பங்கு கொண்டு அவர்களோடு இணங்கியவாறு தமக்கும் தம்மவர்களுக்கும் சலுகை பெறும் எலும்புத்துண்டு கவ்வி நிற்கும் அரசியலும், தொழிற்சங்கமும் செய்து வந்திருக்கிறார்கள். இத்தகைய தொழிற்சங்க அரசியல் சக்தி எனப்படுவோர் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காக தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றெடுத்துப் பாதுகாப்பதே மலையகத் தமிழர்களுக்கு இன்று அவசியமானது எனப் பரப்புரை செய்து கொள்வர். இத் தமிழர் பிரதிநிதித்துவம் மலையக மக்களின் பின்தங்கிய சமூக வாழ்வில் அதிகளவிலான எந்தவொரு பிரச்சனைக்கும் தீர்வு கண்டதில்லை.

சம்பள உயர்வு, வீட்டுரிமை, நிலவுரிமை, கல்வி பண்பாட்டு வளர்ச்சி, வேலைவாய்ப்பு, தமிழ்மொழிப் பாவனை போன்றவற்றில் எதிர்நோக்கப்படும் எந்தவொரு பிரச்சினையும் தமிழர் பிரதிநிதித்துவத்தால் தீர்க்கப் பட்டதும் இல்லை, தீர்க்கப்படப் போவதும் இல்லை. மத்திய

பக்.14>>

# தனியார் பல்கலைக்கழகங்களின் நுழைவு இலவசக் கல்விக்கு இறுதிச் சடங்கு




நன்றி டேய்லி மிரர்

1978ம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்தன சர்வதேசப் பாடசாலைகள் என்ற பெயரில் தனியார் பாடசாலைகட்கு அங்கீகாரம் வழங்கினார். அதன் ரீதியான தொடர்ச்சி தனியார் பல்கலைக் கழங்களாகும். 1980 அளவில் தனியார் மருத்துவ பல்கலைக் கழகப் பீடம் ஒன்று ராகம அரசாங்க வைத்தியசாலையை மையப்படுத்தித் தொடங்கப்பட்டது. எனினும் பொதுமக்களின் எதிர்ப்பின் பயனாக அத்தனியார் பல்கலைக்கழக முயற்சி முடக்கப்பட்டது. எனினும் பல்வேறு முகாந்தரங்களில் இலங்கையில் தனியார் கட்டுப்பாட்டில் இயங்கும் உயர்கல்வி நிறுவனங்களும் அந்நியப் பல்கலைக்கழகங்களின் கிளைகளும் இயங்கி வருகின்றன. கடந்த பத்தாண்டுகட்குள் பொறியியல், மருத்துவம் ஆகிய துறைகளில் பட்டம் வழங்கக்கூடிய கல்லூரிகள் நிறுவப் பட்டுள்ளன. இத்தகைய கல்வி நிலையங்களை நாடிச் செல்லக்கூடிய பொருள் வசதியுள்ளவர்கள் போதியளவில் உள்ளமையால்.தனியாரின் உயர் கல்வி நிறுவனங்கள் பெரும் லாபமீட்டும் வணிக நிறுவனங்களாக நிலை பெற்றுள்ளன.

இலங்கையின் உயர் கல்விக்கான தேவை உயர் பதவிகட்கான தேடலுடன் தொடர்புடைய அளவுக்குத் தொழில் சார்ந்த ஆற்றல்களையோ சமூக அறிவையோ பெறும் விருப்பத்துடன் தொடர்புடையதல்ல. மருத்துவ, பொறியியல் துறைகளில் பல்கலைக்கழகங்களில் உள்ள இடங்களின் தொகை அவற்றுக்கான கோரிக்கைக்கு ஈடு கொடுக்கப் போதியதல்ல. மருத்துவத் துறையில் பட்டதாரிகட்கான பற்றாக்குறை இருந்தபோதும் பட்டதாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க மருத்துவத்துறையில் தயங்குகின்றனர்.

கல்வித் தரம் பற்றிய கவலைகள் போக, மருத்துவப் பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரிப்பது மருத்துவத்துறையினரின் தொழிற் பாதுகாப்புக்கு மிரட்டலாகும் என அவர்கள் அஞ்சுகின்றனர். பொறியியலைப் பொறுத்தவரை பட்டதாரிகளின் எண்ணிக்கையை அதிகமாக்கியதால் கல்வித் தரம் பாதிக்கப்பட்டுள்ள போதிலும் பட்டதாரிகளைப் பயனுள்ள முறையில் உள்வாங்கக் கூடிய நிலையில் நாட்டின் பொருளாதாரம் இல்லை. எனவே கணிசமானோர் வேலை தேடிப் புலம்பெயர்கின்றனர். மற்றவர்களின் தொழிலுக்கும் கல்வித் தகைமைக்குமிடையிலான உறவு மிகப் பலவீனமானது. இவ்வாறான பலவீனத்தை விவசாயப் பட்டப்படிப்பு தொடர்பாகவும் காணலாம்.

***அமெரிக்கா தவிர்ந்த முன்னேறிய முதலாளிய நாடுகள் அனைத்திலும் உயர் கல்வி ஏறத்தாழ முற்றிலும் அரசின் பொறுப்பாக இருக்கையில் ஏன் மூன்றாமுலக நாடுகளில் தனியார் பல்கலைக்கழகங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன என்பது ஆழ்ந்த கவனத்துக்குரியது.***

எவ்வாறாயினும், நவீன கல்வித்துறைப் பட்டப்படிப்பு என்ற மயக்கத்தை ஏற்படுத்தும் உயர்கல்வி நிறுவனங்களிற் பெரும்பாலானவை கணினிக் கல்வி, தகவல் தொழில்நுட்பம், வணிகம், முகாமைத்துவம் போன்றவற்றின் பட்டங்களை மிகக் குறைந்த மூலதனத்துடன் வழங்குகின்றன. அதிக மூலதனம் தேவைப்படுகிற பொறியியல் போன்ற துறைகளில் வகுப்பறைப் படிப்பை இலங்கையிலும் செயல்முறை சார்ந்த படிப்பை வெளிநாடு ஒன்றிலும் வழங்கும் முறையைச் சில அந்நியப் பல்கலைக்கழகங்கள் அறிமுகப்படுத்தின. பிள்ளைகளை மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் சோவியத் பல்கலக்கழகங்கள் போன்றவற்றுக்கு அனுப்பிப் படிப்பிப்பதைவிட உள்ளூரில் பெரும்பகுதியான காலத்தையும் வெளிநாட்டில் ஒரு ஆண்டு அல்லது ஆக மிஞ்சினால் இரண்டு ஆண்டுகளையும் செலவிடுவது பல நடுத்தர வர்க்கப் பெற்றோருக்கு வசதியாயிருந்தது.

அதைவிடவும் பல்கலைக்கழக கட்டணங்களும் பல்கலைக்கழகங்களின் நாடுகளில் அறவிடுவதைவிடக் குறைவாக இருந்தமையும் மேலும் கவர்ச்சியாக்கியது. இவ்வாறு கல்வியை வணிகப் பண்டமாக்கும்

***ஒரு புறம் அரச பல்கலைக்கழங்களுக்கான நிதியையும் வளங்களையும் குறைத்து அவற்றைப் பலவீனப்படுத்திக் கொண்டு மறுபுறம் தனியார் பல்கலைக்கழங்களைப் புகுத்தும் திட்டம் எவ்வகையிலும் தேசிய நலனுக்கானதல்ல. இது சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றினது வற்புறுத்தலாலும் கல்வி வணிகத்தில் தீவிரமாகியுள்ள நாடுகளது நெருக்குவாரங்களாலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.***

நடைமுறையை முதலில் சராசரியான அல்லது சராசரிக்கும் கீழான பல்கலைக்கழகங்கள் தொடங்கினாலும் பணவருவாயின் கவர்ச்சி சில நல்ல பல்கலைக்கழங்களையும் இவ் வணிகத்துள் ஈர்த்தது. எவ்வாறாயினும் தமது மண்ணிலேயே படித்துப் பெற்ற பட்டங்கட்கும் இவ்வாறு வெளிநாடுகளில் கற்றுப் பெற்ற பட்டத்திற்குமான வேறுபாடு சான்றிதழ்களில் தென்படுவதைப் பற்றிப் பெற்றோர் கவலைப் படுவதில்லை.

எனினும் இவ்வாறான பட்டங்களுடைய தரம் பற்றிய கவலைகள் உள்நாட்டில் இருந்து வந்துள்ளன. அந்நியப் பல்கலைக்கழகங்களைப் பற்றிய முழு விவரங்களும் இல்லாமல் எந்தப் பட்டத்தையும் அங்கீகரிப்பதும் பல்கலைக்கழக மானிய ஆணையத்திற்கும் தொழில்துறை சார் நிறுவனங்களுக்கும் எளிதல்ல எனவே மாணவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதில் உள்ள செலவை மீதப்படுத்தல் என்ற பெயரிலும் இலங்கையிலேயே அந்நியக் கல்வி முதலீட்டாளர்கள் பல்கலைக்கழகங்களைத் தொடங்கும் உள்ளூர் பெருமுதலாளிகள் கல்வி வணிகத்தில் இறங்கவும் வசதியாக அரசாங்கம் தனியார் பல்கலைக் கழகங்களை நிறுவுவதைச் சட்டரீதியாக்கியுள்ளது.

ஒரு புறம் அரச பல்கலைக் கழகங்களுக்கான நிதியையும் வளங்களையும் குறைத்து அவற்றைப் பலவீனப் படுத்திக் கொண்டு மறுபுறம் தனியார் பல்கலைக்கழகங்களைப் புகுத்தும் திட்டம் எவ் வகையிலும் தேசிய நலனுக்கானதல்ல. இது சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றினது வற்புறுத்தலாலும் கல்வி வணிகத்தில் தீவிரமாகியுள்ள நாடுகளது நெருக்குவாரங்களாலும் மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கையாகும். அமெரிக்கா தவிர்ந்த முன்னேறிய முதலாளிய நாடுகள் அனைத்திலும் உயர் கல்வி ஏறத்தாழ முற்றிலும் அரசின் பொறுப்பாக இருக்கையில் ஏன் மூன்றாமுலக நாடுகளில் தனியார் பல்கலைக்கழகங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன என்பது ஆழ்ந்த கவனத்துக்குரியது.

இந்தச் சட்டத்திற்குப் பல்கலைக்கழக மாணவ ஆசிரிய சமூகங்களின் கடும் எதிர்ப்பு இருந்து வந்த போதும் அந்த எதிர்ப்பு ஒரு பொதுசன எதிர்ப்பலையாக கமழத் தவறியமையால், இத் தனியார் பல்கலைக் கழகச் சட்டம் எளிதாக நிறைவேறியுள்ளது. இந்த ஏகாதிபத்தியச் சார்பான சட்டவாக்கத்தை யூ.என்.பி. வரவேற்பது புதினமல்ல. ஆனால் தமிழ்த் தேசிய வாதிகளும் அதை மௌனமாக ஏற்றிருப்பது நல்ல அறி குறியல்ல.

மோகன்

# தோழர் எஸ். சுகேசனன் விடுதலை



2007ம் ஆண்டு பெப்ரவரி 14ம் 15ம் திகதிகளில் மலையகத்தின் ராகலை, அட்டன் பகுதிகளில் இருந்து புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் ஐந்து தோழர்கள் புலிச் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டனர். தோழர்கள் வெ.மகேந்திரன், எஸ்.சுகேசனன், நா. கிருஷ்ணப்பிரின், ஆர்.ஜெயசீலன், எஸ். மோகன் ராஜ் ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தனர். இவ்ஐவரும் இளம் ஆசிரியர்களாவர். நால்வர் இரண்டு மூன்று வருடங்களின் பின் குற்றச்சாட்டுக்கள் இன்றி விடுவிக்கப் பட்டனர். ஆனால் தொடர்ந்து சிறையில் வைக்கப்பட்டிருந்த தோழர் சுகேசனன் கடந்த செப்ரெம்பர் மாதம் 09ம் திகதி வவுனியாவில் வைத்து விடுதலை செய்யப்பட்டார். அவர் 06 வருடங்கள் ஆறு மாதங்கள் 24 நாட்கள் குற்றம் சுமத்தப்படாமலும் நீதிமற்ற விசாரணை இன்றியும் சிறை வைக்கப்பட்டிருந்தார். இறுதி ஒரு வருடம் புனர்வாழ்வு நிலையத்தில் வைக்கப் பட்டப்பின் விடுதலை செய்யப்பட்டார்.

தோழர் சுகேசனன் தான் ஒரு கம்யூனிஸ்ட் என்பதை பொலிஸ், சிறை அதிகாரிகளிடமும் நீதி மன்றிலும் கூறிவந்த போதும் அவருக்குப் புலிபட்டமே சூட்டப்பட்டிருந்தது. தோழர் சுகேசனனினதும் ஏனைய தோழர்களினதும் விடுதலைக்காகக் குரல் கொடுத்தவர்களுக்கும் உதவிகள் செய்த உள்நாட்டு வெளிநாட்டு நண்பர்கள், நலன்விரும்பிகளுக்கும் சட்டத்தரணிகளுக்கும் புதிய- ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

# தமிழ்த் தேசியம் உடைத்துப் பார்க்கப்பட வேண்டும்

## பு. ஜ.மா.லெ. கட்சியின் வவுனியா பொதுக்கூட்டத்தில் வலியுறுத்தல்

பேரினவாதத்திற்கு எதிரான தமிழரின் இன உரிமைக்கான போராட்டத்துடன் மக்களின் அன்றாட வாழ்வாதாரப் பிரச்சினைத் தீர்வுக்கான போராட்டங்களையும் இணைத்து செயற்படாவிட்டால் தமிழ் தேசிய விடுதலை முற்போக்கானதாக அமையாதபோது தேர்தலில் வாக்குப் பெறுவதற்கான ஐக்கியத்துக்கு அப்பால் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான போராட்டத்தை முன்னெடுக்கும் அனைத்துச் சக்திகளையும் இணைத்து பொது வேலைத்திட்டத்தின் கீழ் பரந்துபட்ட ஐக்கிய முன்னணியை அமைக்கவும் அதில் இணைந்து செயற்படவும் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அறைகூவல் விடுகிறது.

இவ்வாறு 6.10.2013 அன்று வவுனியா இந்திரன்ஸ் ஹோட்டல் மண்டபத்தில் மக்கள் எதிர்நோக்குகின்ற உடனடி பிரச்சினைகளை தீர்க்க 26 கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டச் செயலாளர் திரு.நி.அ.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் 35வது ஆண்டு விழாப் பொதுக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் திரு.சி.கா.செந்திவேல் உரையாற்றும் போது கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது மக்களின் வாழ்வாதார நிலை நாளுக்கு நாள் பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. அத்தியாவசிய பொருட்களின் விலை வானைத்தொடுகின்றது. விலைவாசியின் ஏற்றத்துக்கு ஏற்றவகையில் அரசாங்க தனியார் துறை ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. விவசாய உற்பத்திப் பொருட்களின் தாராள இறக்குமதியால் விவசாயிகள் பயிர்ச்செய்கையை கைவிடவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்படுகின்றனர். உற்பத்திச் செலவுக்கு ஏற்ற விலை கிடைக்கவில்லை. அன்றாட உழைப்பாளிகள் வாழமுடியாது தவிக்கின்றனர்.

தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வை வழங்க அரசாங்கம் தயாராகவில்லை. சிறுபான்மையினரின் உரிமைக் கோரிக்கையை இனவாதமாகக் காட்டி பயங்கரவாதமாகப் பெருப்பித்து தன்னை நிலை நிறுத்த முயற்சிக்கிறது. விடுதலை புலிகளை அழித்து நான்கு வருடங்கள் கடந்துவிட்டபோதும் இனப்பிரச்சனைக்கானத் தீர்வு வழங்கப்படாது இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. போர் வெற்றியை மாத்திரம் வருடாவருடம் கொண்டாடி தனது ஆட்சி காலத்தை வளர்த்து செல்கின்றது.

தமிழர், முஸ்லிம், மலையக மக்கள் மற்றும் வேடர்களுக்கு எதிராக பேரினவாத மதவாத அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு இனவாதத்தை தூண்டுகின்றது. சிறுபான்மையினரின் நிலங்களைத் திட்டமிட்டு பறிக்கிறது. மத வழிபாட்டுத் தலங்கள் மீது தக்குதல் நடத்துகிறது. இனப்பிரச்சனைக்கானத் தீர்வாக குறைந்தளவு அதிகாரப் பகிர்வையாவது முன்வைத்து மாகாண சபை முறையை பலப்படுத்துவதற்கு மாறாக அதிகாரங்களை வெட்டிக்குறைத்தும் நீக்கியும் சிறுபான்மையினரின் உரிமைகளை மறுக்கின்றது.

09 >>>

01>>> அரசின் அடுத்த நகர்வு...

போன்றோரே வழிநடாத்தி வருவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. இதனால் இவர்களிடையே பிளவுகளும் முரண்பாடுகளும் தோன்றியுள்ளன. இவர்கள் எவ்வாறு தமது ஆட்சிப் பயணத்தை மேற்கொள்ளப் போகிறார்கள் என்பதைத் தமிழ் மக்கள் வேண்டா வெறுப்புடன் நோக்கி வருகிறார்கள்.

அதேவேளை ராஜபக்ஷ ஆட்சியும் பேரினவாதிகளும் வடமாகாண சபையை எவ்வாறு கையாளப் போகிறார்கள் என்பது அவதானிக்க வேண்டியதாகும். முன்னைய மாகாணசபையை முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச கலைத்தமை நினைவிற்கு உரியது. ஆனால் இன்றைய வடமாகாண சபையும் அதன் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் இணக்கமாகச் செல்வார்களா அல்லது எதிர்ப்பு அரசியல் செய்வார்களா என்றே நோக்க வேண்டியுள்ளது. ஆனால் ஒரு விடயம் மட்டும் நிச்சயமானது. பேரினவாதிகள் வடமாகாண சபையை அதன் வழியில் செல்வதற்கு அனுமதிக்கமாட்டார்கள். எதிர்ப்பும் குழப்பமும் விளைவித்தபடியே இருப்பர்.

அதே வேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தேர்தல் காலத்தில் முன்வைத்த முழக்கம் போன்று ‘எமது ஒற்றுமையைச் சர்வதேசம் பார்த்துக் கொண்டிருக்கிறது’ என்பதற்கிணங்க செயல்படவும் மாட்டார்கள். மக்களை ஏமாற்றி வாக்குகள் பெற்றுக் கொள்வதற்காகக் கூறுப்படுபவை நடைமுறை ஆட்சி அதிகாரத்திற்கு ஒருபோதும் சரிப்பட்டு வராதனவாகும் உண்மை அல்லவா?

எவ்வாறாயினும் கிடைத்த சந்தர்ப்பத்தைத் தமிழ்க் கூட்டமைப்பினர் கைநழுவ விடமாட்டார்கள். மாகாணசபையை அரசியல் தீர்வின் ஆரம்பப் புள்ளி எனக்கொண்டு காணி, பொலீஸ் அதிகாரம் உட்பட அதிகபட்ச அதிகாரங்களைக் கோரவே செய்வார்கள். அவற்றைப் பெற இந்தியாவையும் அமெரிக்காவையும் அண்டி நிற்பதனைத் தவிர அவர்களிடம் வேறு மார்க்கம் கிடையாது. தமிழ் மக்களை வெகுஜன மார்க்கத்தில் அணிதிரட்டும் வேலைத்திட்டத்தைக் கொண்டிருப்பதோ அல்லது சிங்கள மக்களின் ஜனநாயகக் கோரிக்கைகள், பொருளாதாரக் கோரிக்கைகள் மற்றும் சமூக நீதிக்கான கோரிக்கைகள் போன்றவற்றுக்கு இணங்கி ஐக்கியப்பட்டு நிற்பதற்கோ அவர்களது தமிழ்த் தேசியவாத அகராதியில் எதுவும் இருக்க மாட்டது.

இதனால் அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய இருதரப்பிற்கிடையிலான கடும் கயிறுழுப்பாகவே வடமாகாணசபை இருக்கப் போகிறது. இதில் இந்தியா இருதரப்பையும் உசார் படுத்திக் கொண்டு தனது தேவைகளுக்கான வேலைகளை முன்னெடுப்பதில் கவனமாக இருந்து கொள்ளும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவிடம் வெறும் முறையிடவும் அதனை நம்பும்படி வாக்களித்த மக்களுக்குப் போக்குக் காட்டியவாறும் இருக்கும்.

அரசாங்கம் தனது சர்வாதிகாரத்தின் உச்சமான ஃபாசிசப் போக்கில் மேலும் வழி நடக்கவே செய்யும். அதனை மூடிமறைக்க வடமாகாண சபையை வைத்து பிரிவினை, புலிகள் எனப் பூச்சாண்டி காட்டும் பிரச்சாரம் தொடரும். அத்துடன் எதிர் வரும் வரவு செலவுத் திட்டத்திற்கு முன்பும் பின்பும் நாட்டின் அனைத்து உழைக்கும் மக்களுக்கு எதிரான சகலவற்றையும் செய்து கொள்ளும். எதிர்க்கும் சக்திகளை நசுக்கி அடக்க அண்மைக்காலங்கள் போன்று சகல அடக்கு முறைகளையும் பிரயோகிக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இவற்றுக்கு முகம் கொடுக்கும் வகையிலான மக்களை அணிதிரட்டிய போராட்டங்களுக்கு நேர்மையான இடதுசாரி ஜனநாயக சக்திகள் தம்மைத் தயார்ப்படுத்த வேண்டும்.



# பொதுநலவாய அரசியல் நாடக விழா

பொதுநலவாய நாட்டு ஆட்சித் தலைவர்களின் மாநாடு நீண்டகாலச் சர்ச்சைகளுக்கும் ஐயங்களுக்கும் பின்னர் கனடா தவிர்ந்த உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டால் இலங்கைக்கு ஒரு நன்மையும் இராது. எனினும் ஏறத்தாழ அறுபது உலக நாடுகள் மாநாட்டில் பங்குபற்றுகின்றமையை இலங்கை அரசாங்கம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் என்பதில் ஐயம் இல்லை. இம்மாநாட்டின் பின்பு அடுத்த இரண்டு ஆண்டுகட்குப் பொதுநலவாய நாடுகளின் தலைமை இலங்கையிடம் இருக்கும். எனவே, அடுத்த இரண்டு ஆண்டுகட்கும் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக எந்தப் பிரேரணையையும் நிறைவேற்ற மிகக் கடினமாயிருக்கும்.

ஆயினும் தனிப்பட்ட முறையில் எந்த உறுப்பு நாடும் இலங்கைக்கு எதிராக ஐ.நா. சபையிலோ ஐ.நா. மனித உரிமைக் கழகத்திலோ தீர்மானம் எதையும் கொண்டு வருவதையோ ஆதரிப்பதையோ அது தடுக்காது. இந்த மாநாடு இலங்கையில் நடப்பது ராஜபக்ச ஆட்சிக்கு ஒரு ராஜதந்திர வெற்றி என்பதில் ஐயமில்லை. அந்த வெற்றிக்கான விலையும் வெற்றின் பெறுமதியும் என்ன என்பது இன்னொரு விடயம்.

இம்மாநாட்டிற் பங்குபற்றப் போவதில்லை என்று முதலில் தெரிவித்திருந்த ஒருவர் பிரித்தானியப் பிரதமராவார். அவர் எப்படி மனம் மாறினார் என்பது சிலருக்கு இன்னமும் விளங்காமல் இருக்கலாம். ஸ்ரீலங்கன் விமானக் கம்பனி பிரித்தானிய றோல்ஸ் றொய்ஸ் கம்பனியின் எஞ்சின்கள் பொருத்திய பல விமானங்களைக் கொள்வனவு செய்ய இலங்கை அரசாங்கம் அனுமதித்துள்ளது என்ற செய்திக்கும் பிரித்தானிய பிரதமரின் மனமாற்றத்திற்கும் தொடர்பு உண்டு என வலியுறுத்திச் சில மாதங்கள் முன்பு பிரித்தானிய நாளேடான 'இன்டிபென்றன்ற்' கருத்து வெளியிட்டிருந்தது. அதை விட வேறு விட்டுக் கொடுப்புக்கள் பலவும் திரைமறைவில் நடந்திருக்கலாம். பிரித்தானியத் தனியார் பல்கலைக்கழக வளாகத்தை முடிக்குரிய இளவரசர் சாள்ஸ் இம்மாநாட்டுக் காலத்தில் திறந்து வைக்க உள்ளமையும் கவனிக்கத்தக்கது.

இம்மாநாட்டின் பின்பு பொதுநலவாய நாடுகளின் தலைமை இலங்கையிடம் இருப்பதைப் பயன்படுத்தி வேறு பல நெருக்குவாரங்களும் தொடரலாம் என்ற எதிர்பார்ப்புக்கள் இருந்தாலும் அவற்றில் எதுவும் தேசிய இனப்பிரச்சினை பற்றியனவாயிருக்குமென நம்ப இடமில்லை. கனடா மிகவும் கடுமையான எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்துள்ளதற்குக் காரணம் கனடா அரசாங்கம் புலம் பெயர் தமிழரின் நெருக்குவாரங்கட்குப் பணிந்து போனமை என்று சிலர் நம்ப விரும்பினாலும் கனடாவின் வலதுசாரி அரசாங்கம் அத்தகைய செல்வாக்கிற்குட்பட்ட ஒன்றென்று கூற இயலாது. அமெரிக்க அழுத்தத்துக்கான ஒரு கருவியாகக் கனடா செயற்படுகிறது என்பது கூடியளவு சாத்தியமானது. பொதுநலவாய நாடுகள் அமைப்பிற்குக் கணிசமான நிதி வழங்கும் நாடு கனடா என்பதும் கவனிக்கத்தக்கது.

இந்திய அரசாங்கத்தின் நிலை கொஞ்சம் இக்கட்டாக இருக்கக் காரணம் அடுத்த ஆண்டுப் பொதுத் தேர்தலைப் பலவீனமான நிலையிலிருந்து மன்மோகன் சிங் ஆட்சி எதிர்நோக்கவுள்ளமை. எனினும், மன்மோகன் சிங் பங்குபற்றுவதைப் பிரச்சினையாக்கி அவருக்குப் பதிலாக முக்கியமான அமைச்சர் எவரும் பங்குபற்றுவதன் மூலம் இந்தியா தன் வழமையான 'பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்' பாத்திரத்தை ஒப்பேற்றும் என எதிர்பார்க்கலாம். இலங்கையில் மாநாடு நடப்பதற்கு இந்திய பெருமளவில் உதவியது என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

புலம் பெயர்ந்த தமிழர் அமைப்புகளுக்கு பிரித்தானிய அவுஸ்திரேலிய அரசாங்கங்களிடம் உள்ள செல்வாக்கின் பெறுமதியும் பிரித்தானிய அவுஸ்திரேலிய பிரதமர்களின் பங்குபற்றலால் புலனாகியுள்ளது. இம்மாநாட்டின் போது இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை, சனநாயக மறுப்புப் போன்ற பலவும் பேசப்படும் என்று பிரித்தானிய, அவுஸ்திரேலிய ஆட்சியாளர்களின் சார்பில் சொல்லப்பட்டாலும் குறிப் பிடத்தக்களவுக்கு எதுவும் பேசப்படப்போவதுமில்லை, இலங்கையைக் கண்டித்து எத்தீர்மானமும் முன்வைக்கப்படவும் மாட்டாது. எனவே இலங்கை அரசாங்கத்தைக் கண்டித்துப் பேசிய அரசாங்கங்கள் தம்முடைய ஆதரவு வட்டாரங்களுக்குள் எழுந்துள்ள சில அதிருப்திகளை முன்னிட்டு இம்மாநாட்டின் மூலம் இலங்கையின் மனித உரிமை, சனநாயக மீறல் போக்குகளைத் திருத்தும் அழுத்தங்களைக் கொடுக்கும் எதிர்பார்ப்பிலேயே தாங்கள் பங்குபற்றுவதாகச் சமாதானம் சொல்லியுள்ளனர்.

பொதுநலவாய நாடுகளின் அமைப்பு சர்வதேச அரசியலிற் பெறுமதி அதிகமற்ற ஒரு அமைப்பு. ஆயினும் அதன் பெயர் காரணமாக அதைப் பற்றிய ஒரு மயக்கம் நம் மக்களிடையே உள்ளது. மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவதன் மூலம் அரசாங்கம் தான் சர்வதேச அழுத்தங்கட்கு உட்படவில்லை என்று இலங்கை மக்களுக்குக் காட்டலாம். ஆனால் சர்வதேச அழுத்தங்கள் ஓயவில்லை. அவை செயற்படுகின்ற களங்கள் வேறு. அந்த அழுத்தங்களை இலங்கையின் தேசிய இனப்பிரச்சனை பற்றியனவல்ல.

இந்த மாநாட்டிற்காகச் செலவாகும் பெருந்தொகையான பணம் மக்கள்மீது மேலும் ஒரு பொருளாதாரச் சுமையாகும் என்பதை விட மக்களுக்கு இம்மாநாட்டால் ஒரு நன்மையும் வராது.

# மகிந்த சிந்தனையின் கீழ் 106 அமைச்சர்கள் ஒரு உலக சாதனை!

மகிந்த ராஜபக்ச இப்பொழுது இலங்கையின் தனிநபர் சர்வதிகார ஜனாதிபதி. அவரது தலைமையில் சகோதரர்கள் உறவினர்கள் சுமார் இருநூறு பேர் வரை ஆட்சியின் முக்கிய பொறுப்புகளில் ஆகக் கூடிய வருவாய்களுடன் இருந்து வருகிறார்கள். மேலும் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டுக்கும் மேலான ஆசனங்களை ஜனாதிபதியும் அவரது சகோதரர்களும் தக்க வைத்து வருகிறார்கள். அதற்காக, வலதுசாரி இடதுசாரி இனவாதிகள், மதவாதிகள், பிரதேசவாதிகள் என்போருக்கு அமைச்சுப் பதவிகள், உயரதிகாரிப் பதவிகள், ஜனாதிபதி ஆலோசகர்கள், வங்கிகள் மற்றும் உயர் அரச நிறுவனங்களில் தலைமைப் பதவிகள் யாவும் தாராளமாக வழங்கப்பட்டுள்ளன. உலகின் சின்னஞ் சிறிய ஒரு நாட்டில் 106 அமைச்சர்கள் இருக்கிறார்கள் என்பது கின்னஸ் சாதனையாகக் காணப்படுகிறது.

அமைச்சர்கள் என்ற பெயருக்குள் அடங்கக் கூடியவர்களாக ஜனாதிபதி, பிரதமர், 10 மூத்த அமைச்சர்கள், 54 அமைச்சரவை அமைச்சர்கள், 38 பிரதி அமைச்சர்கள், 2 திட்ட அமைச்சர்கள், அவர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்கள், பணிமனைகள், சொகுசு வாகனங்கள், அமைச்சு வாகனங்கள், ஆளணிகள், இலவச சேவைகள் இத்தியாதிகளுடன் 'மிக மிக முக்கிய நபர்கள்' (ஏஜஜீ) என்ற அந்தஸ்தும் காணப்படுகின்றன. இந் நிலையில் மேலும் அமைச்சுப் பதவிகளுக்கு அலரி மாளிகை முன் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தவமாய்த் தவம் இருந்து வருகிறார்கள். அனுபவிப்புக்களுக்கான பேரவா யாரைத்தான் விட்டது. இதுவே முதலாளித்துவப் பாராளுமன்ற ஆட்சி முறையின் மகிமை. இந்த மகிமை உடைக்கப்பட்டு மாற்றப்படாத வரை மக்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டே இருப்பர்.

# இனத்தை இனம் ஆள்வதால்...

அண்மையில் மாகாணசபைத் தேர்தல் நடைபெற்ற மாகாணங்களில் ஒன்று வடமேல் மாகாணமாகும். குரநாகல், புத்தளம் ஆகிய இரண்டு மாவட்டங்களை உள்ளடக்கியது. அத்தேர்தலில் மூன்று இலட்சத்திற்கு மேல் விருப்பு வாக்குகள் பெற்று முதலமைச்சராகி உள்ளவர் தயாசிறி ஜயசேகர. அவர் முன்பு ஐ.தே.கட்சி. இப்போது ஆளும் வெற்றிலைக் கட்சி. அவர் தனது பதவியேற்பின் பின்பு கூறிய ஒரு விடயம் பலரை ஆச்சரியப்பட வைத்துள்ளது. அதாவது வடமேல் மாகாணத்தில் 34 ஓலைக் கொட்டில் பாடசாலைகள் இருந்து வருவதாகவும் அவை யாவும் அரசாங்கப் பாடசாலைகள் எனவும் சுட்டிக் காட்டியிருந்தார். அவற்றைக் கட்டிடப் பாடசாலைகளாக மாற்றுவதே தனது முதற் பணி என்றும் கூறி இருந்தார்.

சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அம்மாகாணத்தில் சிங்களவர்களால் ஆளப்படும் மாகாணத்திலும் நாட்டிலும் இத்தகைய நிலை என்றால் இனத்தை இனம் ஆள்வதால் பிரச்சினைகள் தீர்ந்து விடுமா என்பதே சிந்திக்க வேண்டிய விடயமாகும். எந்த இனத்தினிடையேயும் வர்க்கங்களும் ஏற்றத்தாழ்வுகளும் சுரண்டலும் ஏழ்மையும் இருக்கவே செய்யும் என்ற உண்மைக்கு மேற்கூறிய கூற்று நல்ல உதாரணமாகும். தமிழைத் தமிழன் ஆளும் வடக்கில் இப்படி எத்தனை உண்மைகள் வெளிவர இருக்கின்றன என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# புதிய மாகாணசபை உறுப்பினர்களுக்கு வரிச் சலுகையற்ற வாகன இறக்குமதி அனுமதி மறுப்பு

மாகாணசபை உறுப்பினர்களுக்கு வெளிநாடுகளில் இருந்து தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கும் நடைமுறை 2006ம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருந்து வந்தது. ஒரு மாகாணசபை உறுப்பினர் 45,000 அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனத்தையும் முதலமைச்சர் 55,000 அ.டொலர் பெறுமதியான வாகனத்தையும் தீர்வை இன்றி இறக்குமதி செய்யலாம் என்றே இருந்து வந்தது. இந்நடைமுறையில் 2013 ஜனவரியில் சகல மாகாணசபை உறுப்பினர்களும் அவ்வாறு வாகனங்கள் இறக்குமதி செய்து கொண்டனர். இதில் பெருந்தொகைப் பணக் கொடுக்கல் வாங்கல் உண்டு. இதனையும் மனதில் இருத்தியே மாகாணசபைக்குப் போட்டியிடுவோர் பணம் செலவழிப்பர். ஆனால் அண்மையில் உள்ளூராட்சி மாகாணசபை அமைச்சு இவ்வாறான வாகன இறக்குமதிக்கான அனுமதி வழங்கலை 2 ½ வருடங்களுக்கு ஒத்தி வைத்துள்ளது.

இதனால் மூன்று மாகாணசபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதிய மாகாணசபை உறுப்பினர்கள் தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கான அனுமதி பெறமுடியாதுள்ளனர். இதில் வடமாகாணசபையின் 38 உறுப்பினர்களும் அடங்குவர். இவர்களுடன் சேர்த்து மொத்தம் 145 புதிய உறுப்பினர்கள் முதலமைச்சர்கள் உட்பட வரிச்சலுகை பெற்ற வாகன இறக்குமதி அனுமதி இன்றி உள்ளனர். வடக்கு மாகாணசபை உறுப்பினர்களை எடுத்துள்ளதா என்றே பல உறுப்பினர்கள் ஆதங்க அங்கலாய்ப்புடன் காணப்படுகின்றன. கைக்கெட்டிய சலுகைகளில் ஒன்று வாய்க்கு எட்டவில்லையே என்பது தமிழ்த் தேசிய மாகாணசபை உறுப்பினரின் கொதிப்பாக உள்ளது.

# கவனிப்பாரற்றுக் கிடக்கும் குழாய்க் கிணறுகள்

வவுனியா நிருபர்

வவுனியா மாவட்டத்தில் பதினைந்து இருபது வருடங்களுக்கு முன்பு உருவாக்கப்பட்ட எல்லைக் கிராமங்களான சிதம்பரபுரம், வன்னிக்கோட்டம், பழைய கற்குளம், போன்ற கிராமங்களில் கோடை காலங்களில் மக்கள் குடிநீருக்காக அவலப்படும் நிலை உருவாகி வருகின்றது. இக் கிராமங்களை உருவாக்கும் போது மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு நிலத்தடி குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டது. இக் கிராமங்களில் ஏறக்குறைய பதினைந்து குழாய்க் கிணறுகள் உள்ளன. இக் குழாக்கிணறுகளில் பாதிக்கு மேற்பட்டவை பாவனைக்கு உதவாதவையாக உருவாகிவிட்டன. எனவே இக்கிராம மக்கள் குடிநீருக்காவும் அலைய வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது.

எனவே இக் குழாய்க் கிணறுகளை திருத்தி இக் கிராமத்து மக்களின் குடிநீரை பூர்த்தி செய்ய வேண்டிய தேவை உருவாகியுள்ளது. இவற்றை திருத்தி கொடுக்க வேண்டிய உள்ளூராட்சி அமைப்பின் பிரதிநிதிகள் இது வரை எதுவித அக்கறையும் கொள்ளாமல் அசண்டைத்தனத்துடன் இருக்கின்றார்கள். இதற்கு பொறுப்பான பிரதேச சபை என்ன செய்து கொண்டிருக்கின்றது. என்பதை மக்கள் குரல் எழுப்பிக் கேட்காத வரை இவ் அடிப்படை பிரச்சனைகளுக்கு எதுவித தீர்வும் கிட்டப் போவது இல்லை. இதுவே கடந்து போன வெலிவேரிய மக்களின் சுத்தமான குடிநீருக்கான மக்கள் போராட்டம் சுட்டிக்காட்டிய உண்மை ஆகும்.

எனவே தற்போது சிதம்பரபுரம் கிராம மக்கள் தமது குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய ஒரு கிலோமீற்றர் தூரம் சென்று நீரை சுமந்து வர வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளபட்டுள்ளமையையும் இங்கு உரிய தரப்பினருக்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். இப்பகுதியில் அமைந்துள்ள சிறுவர் முன்பள்ளி ஒன்றும் நீருக்காக மிக அவஸ்த்தைபட்டுக் கொண்டிருக்கிறது. சிறுவர் முன்பள்ளியில் அமைத்துக் கொடுக்கப்பட்ட குழாய்க் கிணறு பழுதடைந்து பல ஆண்டுகள் கடந்தும் உரிய தரப்பினருக்கு அறிவித்தும் இது வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. என்பது கவலைக்குரிய விடயமாக உள்ளதென அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கு குறிப்பிடப்பட வேண்டியது தமிழ் வீரம் பேசும் தேசியவாதிகள் கைகளிளேயே வவுனியா நகர சபை அதிகாரம் உள்ளது. இவர்கள் தமிழ் மக்களுக்கு செய்யும் சேவையின் இலட்சனம் இதுதானா? உரிய தரப்பினர் அக்கறை கொண்டு இம் மக்களின் குடிநீர்ப் பிரச்சனையை தீர்த்து வைக்க முன்வருவார்களா?

# வவுனியா – மகாறம்பைக்குள வீதி திருத்தப்படுமா?

வவுனியா நிருபர்

வவுனியாவில் இருந்து வவுனியா-மகாறம்பைக்குள பிதான வீதி அமைந்து காணப்படுகின்றது. இவ்வீதியானது 6 கி.மீற்றர் தூரத்தைக் கொண்டது. இவ்வீதி ஆறு அல்லது ஏழு கிராமங்களுக்கு செல்வதற்கான பிரதான பாதை மார்க்கமாக அமைந்துள்ளது. ஆனால் இவ்வீதியில் பயனிப்பதில் மக்கள் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்நோக்கிய வண்ணமுள்ளனர். இப்பாதையில் அன்றாடம் வவுனியா நகருக்கு வரும் சாதாரண தொழிலாளர்கள், விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், கர்பிணிப் பெண்கள், முதியோர்கள் என அனைத்து விதமான மக்களும் தொடர்சியாக பாதிப்புற்று வருகிறார்கள்.

ஆனால் இவ்விதியானது புனரமைப்பு செய்யப்படாமல் தொடர்ச்சியாக புறக்கணிப்புக்குள்ளாகி வருவதை மக்கள் கவலையுடன் புதிய நீதிக்கு சுட்டிக்காட்டியிருந்தனர். இவ்வீதி தொடர்ந்து குன்றும் குழியுமாக இருப்பதால் போக்குவரத்துக்கு வாகனங்களும் வர மறுக்கின்றன. அந்தளவு தூரத்துக்கு அவ் வீதியால் செல்லமுடியாத அவல நிலைமையினை அப் பிரதான வீதி அடைந்துள்ளது. இவ்வீதியினை உரிய தரப்பினர் அதாவது மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் அல்லது நகரசபை, பிரதேசபை கணக்கில் எடுத்து புனரமைப்புச் செய்து தரப்படுமா? அல்லது தட்டிக்கழிக்கப்படுமா?

வவுனியா மாவட்டத்தில் நான்கு பிரதேசசபைகளில் மூன்று பிரதேசசபைகளை தமிழர் தரப்பே ஆட்சி செய்து வருகின்றது. அத்துடன் வவுனியா நகரசபையும் இவ் தமிழ் தரப்பிடமே உள்ளது என்பது குறிப்பிடதக்கது.

# மலையக மக்கள் அறிவுபூர்வ அரசியலுக்குள் இறங்க வேண்டும்

மலையகத்தில் பெரும்பாலும் தொழிற்சங்கங்களே கட்சி அரசியலில் ஈடுபட்டு வருகின்றன. அவற்றில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், ஜனநாயக மக்கள் முன்னணி என்பவற்றுடன் புதிதாக முளைத்த பிரஜைகள் முன்னணி போன்றனவும் குறிப்பிடத்தக்கன. மலையகத்தின் பாரிய தொழிற்சங்கம் தாமே எனக் கூறிக்கொள்ளும் இ.தொ.கா. அமைச்சரவையிலும் பாராளுமன்றத்திலும் மாகாண, உள்ளூராட்சி அமைப்புகளிலும் கணிசமான உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. ஏனையவையும் தமது சக்திகேற்ப பிரதிநிதிகளைக் கொண்டுள்ளன.

இவை என்றும் அறிவுபூர்வ அரசியலுக்குள் மக்களை அழைத்துச் சென்றதில்லை. ஏனெனில் அரசியல் விழிப்படைந்தால் தமது ஏமாற்று அரசியல் விளங்கிவிடும் என்பதாலாகும். மேற்சொன்ன அமைப்புக்கள் சலுகை, வரப்பிரசாதங்கள், ஆதிக்க அரசியல், சாதி போன்ற வழிமுறைகளை முதலீடு செய்து மூன்றாம் தர அரசியலையே செய்து வருகின்றன. இலங்கையில் வாழும் தேசிய இனங்களில் அதிக இன ஒடுக்குமுறைக்கும் வர்க்கச் சுரண்டலுக்கும் உள்ளாவோர் மலையகத் தமிழ்த் தேசிய இன மக்களாவர்.

இன்றும் அம்மக்கள் வீடு, காணி உரிமை அற்றவர்களாக லயன் அறைகளில் வாழ்ந்து வருகின்றனர். இந்தியத் தமிழர் என்ற இரண்டாந்தர அடையாளத்துடனும் உள்ளூராட்சி மாகாண நிர்வாகங்களில் தோட்டங்கள் உள்வாங்கப்படாமலும் அரச தொழில் வாய்ப்புக்களில் முக்கியத்துவம் வழங்கப்படாமலும் இளைஞர் யுவதிகள் பாதுகாப்பற்ற தொழில்களில் ஈடுபட்டும் வரும் நிலைமையே காணப்படுகின்றது. இவ்வாறான அடிப்படை உரிமை சார்ந்த பிரச்சினைகள் எவ்வளவோ காணப்படினும் கோவிலுக்கு மணி, விளையாட்டு உபகரணங்கள், தற்காலிக கூடாரம், சீமெந்து, மணல், தகரம் போன்றனவே அடிப்படை பிரச்சினையாக மலையக கட்சிகளால் பார்க்கப்படுகின்றன. மக்களும் அவற்றை எதிர்பார்ப்பவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். தொடர்ந்தும் இதேவகையில் அரசியல் கையூட்டுக்கள் கொடுத்து வாக்குப் பறிப்புக்கள் இடம்பெறுமானால் மலையக மக்கள் நவீன அடிமைத்தனங்களுள் அமிழ்த்தப்படுவர்.

எனவே இத்தகைய மக்களை ஏமாற்றும் வாக்குச்சீட்டுப் புள்ளடி அரசியலுக்குப் பதிலாக தமது உரிமைகளை முன்னிறுத்தி முன்னெடுக்கப்படும் ஐக்கியப்பட்ட போராட்டங்களே மலையகத்திற்கான விடிவைக் கொண்டு வரும் என்பதே நிதர்சனமான உண்மை. நம்முன்னால் உள்ள முதற் கடமை இவ் உண்மையை மக்களுக்கு புரிய வைப்பதுதான்.

## மலையகத்தின் பேரம் பேசும் – கால் பிடிக்கும் – இணக்க அரசியல்


"பரமார்த்த குருவும் சீடர்களும்" எனும் கதை நம்மை எவ்வாறு எளிய சிந்தனையுடன் கொடூரமாக சிரிக்க வைக்கிறதோ அதேபோல்தான் மலையக அரசியல் இன்று எம்மைச் சிரிக்க வைப்பதுடன் எதிர்கால மலையகம் தொடர்பில் கவலை கொள்ளவும் செய்கிறது. அவ்வகையில் மலையகத்தில் நடக்கும் அரசியல் தொடர்பில் வித்தியாசமான நிலைப்பாடுகளை காண முடியாவிடினும் செய்திக்காகவும், நேரத்தைப்போக்க கதைப்பதற்காகவும் செய்திகள் வெளிவந்த வண்ணம் இருப்பது இயல்பே.

அவ்வகையில் நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல் காலங்களில் மலையக கட்சிகள் ஏதோ ஒரு வகையில் தமிழ் பிரதிநிதித்துவங்களை தக்க வைத்துத் தத்தமது அரசியல் பலங்களை காட்டிக்கொண்டன. ஆயினும் அவை தேர்தல் காலப்பகுதிகளில் நடந்து கொண்ட விதமோ மிகக் கேவலமானதாகும். அதாவது அரசுடன் பங்காளியாக இருந்து கொண்டு தமது பிரதேசங்களுக்குள் மோதிக்கொண்டு மலையகத்தை துண்டாடுகின்ற நிலைக்கு ஆளாகிவிட்டனர். இதன் விளைவாக ஒற்றுமையாக இருந்த பல தோட்டங்கள் இரண்டாகப் பிரிவடைந்துள்ளதுடன் வழமையாக இருந்த பிரதேச உறவுகள் சிதைக்கப்பட்டுள்ளன. தத்தமது சொந்த அரசியல் லாபங்களுக்காக இவர்கள் தோட்ட மக்களை பகடைக்காய்களாக பயன்படுத்தி வருகின்றனர்.

அவ்வகையில் மலையக அரசியலின் தொழிற்சங்க அரசியல் தலைமைகள் அரசுடன் பேரம் பேசி மலையகத்தின் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் எனக் கூறி வாக்குச்சீட்டு அரசியலை முன்னெடுத்தனர். தேர்தல் காலங்கள் முடிந்த பின் அரசுடன் இணைந்து பேரம் பேசி மலையகத்தை நிமிர்த்தி விடலாம் என வாக்கு வங்கிகளை சரி செய்தனர். பின் இணங்கிப்போய் அரசு பாவம் பார்த்து ஏதாவது செய்யும் என்றனர். இன்றோ அரசின் கால்களை பிடித்து பிச்சை கேட்டு கெஞ்சும் நிலைக்கு வந்து நிற்பதை காணக்கூடியதாக இருக்கிறது. இவர்கள் கெஞ்சுவது அமைச்சு பதவிகளுக்கும் சுகபோக சலுகைகளுக்கும் மாத்திரமே ஆகும். இது எதிர்கால மலையகத்திற்கு உகந்த செயல் அல்ல. இவர்கள் தங்களது சுகபோக பதவிக்காகவும், சொத்து சேகரிக்கவும் சேகரித்த சொத்துக்களை பாதுகாக்கவும் செய்கின்ற சமூக விரோத செயல்களை மூடி மறைக்கவும், சட்ட விரோத வியாபாரங்களை சீராக செய்து கொள்ளவும் மலையகத்தை காட்டிக்கொடுத்து தம் மக்களையே அடகு வைத்து சுகம் அனுபவிக்கின்றனர். இவர்களது வலையில் தோட்ட தொழிலாளர்களும், இளைய சமுதாயமும், படித்தோர் என சொல்லிக்கொள்வோரும் சிக்குண்டு கிடக்கின்றனர். இவர்கள் மலையகத்திற்கு அறிமுகப்படுத்திய சாராய, சோற்றுப் பார்சல் அரசியல் மிகக் கவனமாக ஆரம்பக்காலங்களில் இருந்தே வேரூன்ற ஆரம்பித்து இன்று விருட்சமாகி நிற்கின்றது.

அவ்வகையில் இவர்களது பேரம்பேசும் அரசியல் மறைந்து, இணக்க அரசியல் மறைந்து, கால் பிடிக்கும் அடி வருடி அரசியலுக்கு தடம் மாறியுள்ளது. இதற்கு சாட்சிதான் பறிபோயுள்ள தமிழ்க்கல்வி அமைச்சு. ஆக அடுத்த கட்டம் என்ன அரசியலாக இருக்கும் என்பதை மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

## கொக்காகோலா பெப்சி பாவனை பற்றி மாகாண அமைச்சர் ஐங்கரநேசனின் அறிவிப்பு வரவேற்கப்பட வேண்டியதாகும்



"வடக்கு மாகாண அமைச்சர்களின் நிகழ்வுகளிலோ, கூட்டங்களிலோ 'பெப்சி' 'கொக்கா கோலா' போன்ற வெளிநாட்டு மென்பானங்கள் பயன்படுத்தக் கூடாது. உள்ளூர் பழரசங்களே பயன்படுத்தப்பட வேண்டும்" என்றும் தனது கடமையைப் பொறுப்பேற்ற பின்னர் மாகாண அமைச்சர் ஐங்கரநேசன் அறிவித்தார். விவசாயமும், கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், சுற்றாடல் அமைச்சின் பொறுப்புக்களை யாழ். புருடி வீதியிலுள்ள அலுவலகத்தில் பொறுப்பேற்ற பின்னர் அலுவலர்களுடன் கலந்துரையாடும் போதே அமைச்சர் ஐங்கரநேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் "எனது அமைச்சுக்களுக்கு உட்பட்ட நிகழ்வுகளிலோ அல்லது கலந்துரையாடல்களிலோ 'பெப்சி' 'கொக்கோகோலா' போன்ற மென்பானங்கள் பயன்படுத்த வேண்டாம். எமது பணம் வெளியிடங்களுக்குச் செல்லும் நிலையை நாமே ஏற்படுத்தக் கூடாது. இயலுமானவரை இவ்வாறான குளிர்பானங்களைப் பயன்படுத்துவதைத் தடுப்பதன் மூலம் எமது பணம் எமக்குள்ளேயே சுழற்சியுடன் நின்று கொள்ளும். இதற்கு பதிலாக உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் அவர்களின் தயாரிப்பில் உருவான பழரசங்களைப் பயன்படுத்த வேண்டும்" என்று கூறினார்.

இவ்வாறு ஊடகங்களில் வெளிவந்த மேற்படி செய்தியை புதிய நீதி வரவேற்கின்றது. பெப்ஸி, கொக்கா கோலா போன்ற மென்பானங்கள் மூலம் இராட்சத பல்தேசியக் கம்பனிகளே பெரும் இலாபம் அடைந்து வருவ துடன் அவற்றின் பாவனையால் உடல் நலத்திற்கும் பெருங் கேடு விளைவித்து வரும் அபாயம் பற்றியும் புதிய நீதி அவ்வப்போது சுட்டிக்காட்டி வந்துள்ளது. இது போன்றே நமது விவசாயம் குடிநீர் காற்று போன்றவையும் பசளை கிருமி நாசினி பாவனையாலும் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. அதே போன்று மக்கள் மத்தியில் பொலித்தீன் பிளாஷ்ரிக் பாவனையானது சூழல் மாசடைவதற்கும் சுகாதார கேடுகளுக்கும் காரணமாக அமைந்துள்ளது. இவற் றையும் ஏனைய மக்கள் நலன் சார்ந்த விடயங்க ளையும் அமைச்சர் ஐங்கரநேசன் கவனத் திற் கொள்வார் என புதிய நீதி எதிர்பார்க்கின்றது. இவை பற்றி மக்கள் மத்தியில் ஆழமான அறிவூட்டல்கள் அவசி யமானதாகும்.




உள்ளூர் உற்பத்தி பற்றியும் நமது பாரம்பரிய உணவு வகைகள் பற்றியும் முன்பு புலிகள் இயக்கம் சாதகமான முடிவுகளை மேற்கொண்டு பொருண்மியம் அமைப்பின் ஊடாக முன்னெடுத்து வந்ததை நாம் அறிவோம். ஆனால் அவர்கள் காலப் போக்கில் அவற்றைக் கைவிட்டு பல்தேசிய கம்பனிகளுடன் இணங்கிப் போன கதை போன்று அமைச்சரின் முடிவும் காலப்போக்கில் ஆகிவிடக் கூடாது என்பதை புதிய நீதி சுட்டிக்காட்டுகின்றது.

# மோட்டார் சைக்கிள் டயரி

**2013.09.06**

பெண் ஒருவர் தோட்ட வைத்திய அதிகாரியை சந்திக்க வைத்திய நிலையத்திற்கு சென்றிருக்கிறார். தனக்கு திருமணமாகி 2-3 வருடங்கள் ஆகின்றது குழந்தைப் பேறு இல்லை. அதனால் வைத்திய ஆலோசனை பெற வந்ததாக கூற அதற்கு தோட்ட வைத்திய அதிகாரி அப்பெண்ணிடம் "கணவனுடன் உறவுக்கொள்ளும் போது ஆபாச படங்களை பார்த்து தொடர்பு கொள்ளுங்கள்" என்ற ஒரு புதுவித ஆலோசனையை கூறியுள்ளாராம். (இச்சம்பவம் நடந்த இடம் சம்பந்தப்பட்டவர் பற்றி தெரிந்தாலும் குறித்த வைத்திய அதி காரியின் பெயரை வெளிப்படுத்த விரும்பவில்லை) தோட்ட தொழி லாளர்களின் சுகாதார தேவைகளுக்காக இருக்கும் வைத்திய நிலை யங்கள் தோட்ட நிர்வாகத்தின் கீழேயே இருந்து வருகின்றது. வைத் திய அதிகாரிகளாக பணியாற்றுபவர்களும் வைத்திய பட்டம் பெற்றவர்கள் அல்ல. இவ்வாறு தரங்கெட்ட ஆலோசனைகள் வழங்குபவர்கள் எப்படி ஒழுங்காக மருந்துகள் வழங்குவார்கள்?

...

**2013.09.13**

கட்டபுலா பகுதிக்கு மரண நிகழ்வில் கலந்துக்கொள்ளவென நாம் சென்றிருந்தோம். அங்கு புதிய ஜனநாயக இளைஞர் முன்னணியை சேர்ந்த நண்பருடன் பேசும் போது அவர் பின்வருமாறு குறிப்பிட்டார் "மலையகத்தில் இளைஞர் படை அதிகம் கடும் உழைப்பாளிகளைக் கொண்ட பகுதி. அதே நேரம் அதிக சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் அதிகளவு உள்ளாகுபவர்கள் மலையகத்தவர்களே. அது மட்டுமல்ல வட கிழக்கில் ஆயுத போராட்டத்திலும் தென் பகுதி கிளர்ச்சியிலும் பெருமளவு இளைஞர்கள் அழிந்ததை போல் மலையகத்தில் அழிவுகள் நடக்கவில்லை. இதனை ஆளும் தரப்பு நன்றாக கவனிப்பதாகவும் அரசினால் மேற்கொள்ளப்படும் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்க்கும் வலுவான சக்தியாக இளைஞர்கள் மாறக்கூடும் என்ற அச்சத்தின் காரணமாக மதுப்பாவனை மலையகத்தில் திட்டமிட்டு ஊக்குவிக்கப்படுவதாகவும் குறைந்த விலையில் விற்கப்படும் மது திரவத்தில் சிந்தனை ஆற்றலை சிதைக்கும் இரசாயணங்கள் கலந்து விநியோகிக்கப்படலாம் என்ற சந்தேகம் நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டார்". மனித நேயத்தை உறிஞ்சி குடிக்கும் இச் சமூக அமைப்பில் எது வேண்டுமானாலும் நடக்கலாம். மலையக மக்களே எச்சரிக்கையாய் இருங்கள்.

...

**2013.09.20**

புதிய ஜனநாயக மா.லெ கட்சி "எதிர்வரும் மாகாணசபை தேர்தல்களும் மலையக மக்களின் எதிர்காலமும்" என்ற தலைப்பில் மக்கள் மத்தியில் நிகழ்த்தி வந்த பகிரங்க அரசியல் கருத்தரங்கை நிகழ்த்த மாத்தளை மவுசாகலை பிரிவுக்கு இன்று வந்தோம். மேற்சொன்ன தொனிப்பொருளில் உண்மையின் பக்கம் நின்று பேசினோம். மக்கள் விழிப்படைந்து விடுவார்கள் என்ற பயத்தில் இப்பிரதேசத்தில் மக்களுக்கு எதிராக நிற்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தோட்ட தலைவரும் தீவிர விசுவாசியும் தோட்ட பிள்ளை மடுவத்தை (சிறுவர் பராமரிப்பு நிலையம்) கைப்பற்றி வைத்திருப்பவருமான சாமுவேல் விஸ்வநாதன் என்பவர், யாரோ இங்கு வந்து தேவையில்லாத வேலை செய்கிறார்கள் என இ.தொ.காவுக்கு வேலைசெய்த இளைஞர்களுக்கு தகவல் கொடுத்திருக்கிறார். நிகழ்ச்சியை மிகவும் வெற்றிகரமாக முடித்துவிட்டு புறப்படத் தயாரான போது, எம்மைத்தாக்க 20, 25 பேர் தடி, கம்பு, வாள்களுடன் வந்தனர். மக்களின் பலத்த எதிர்ப்பின் மூலம் நாம் பாதுகாக்கப்பட்டோம். அவர்கள் மக்களால் துரத்தியடிக்கப்பட்டனர். மவுசாகலை மக்களின் அரசியல் விழிப்புணர்வுள்ள வார்த்தைகள் அவர்கள் மனசாட்சி உள்ள மனிதர்களாக இருந்திருந்தால் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும்.

...

**25.09.2013**

பெருந்தோட்டங்களைப் பாதுகாக்கும் மக்கள் ஒன்றியத்தை சேர்ந்த இளைஞர்கள் ஏனைய ஐக்கியப்பட்ட வெகுஜன அமைப்புகளுடன் சேர்ந்து எல்கடுவ செம்புவத்த பிரிவுக்கு இன்று மலையக மக்களும் காணி நிலம் பெற்று இந்நாட்டின் பிரஜைகளாக வாழ வேண்டும் என்ற உணர்வை ஆழ வேரூன்றச்செய்வதற்காக சென்றோம். ஒவ்வொரு லயத்து முற்றங்களிலும் மக்களை சந்தித்து தெளிவுபடுத்தியதோடு துண்டு பிரசுரம் விநியோகிக்கப்பட்டு வீடமைக்க 20 பேர்ச் நிலமும் பயிர் செய்ய 2 ஏக்கர் காணியும் மலையக மக்களிற்கு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டது. மக்களின் ஆர்வம் மிக அதிகமாக இருந்தது. ஒரு லயத் தொகுதிக்கு முன்னால் மக்கள் சந்திப்பில் ஈடுபட்டு கொண்டிருந்த போது மலையகத்தின் வருத்தப்படாமல் அதிக சந்தா வாங்கும் சங்கத்தால் வழிகாட்டப்பட்ட தோட்ட தலைவர் ஒருவரும் , ஏதோ தேவைக்காக அதன் மேல் அண்மைய காலத்தில் அதிக ஈர்ப்புக் கொண்டிருக்கும் ஓர் இளைஞரும் நாம் மக்களிடம் பேசுவதை தீவிரமாக எதிர்த்தனர். மக்கள் இவர்கள் இருவரையும் காரசாரமாக எதிர்த்துப் பேச மௌனமாகினர். இவர்கள் இருவரும் சற்று தலையைத் திருப்பியிருந்தார்கள் என்றால் தாம் வாழ்வதும் '8 அடி காம்பரா' என்பது நினைவுக்கு வந்திருக்கும். உண்மையில் இன்றைய இளைஞர்களில் ஒருவர் இப்படியா? என்கிற போது உண்மையில் இதயம் வலிக்கின்றது. மலையக இளைஞர்கள் சரியான அரசியல் தடத்திற்கு வரவேண்டும். அது மலையக மக்களின் விடுதலைக்கு பலம் சேர்க்கும் என்பதே நாம் கூற விரும்புவதாகும்.

...

மோட்டார் சைக்கிள் தோழர்கள்

# புதிய நீதி

Puthiya Neethi පුදිය නීදි

முரசம் 02, செப்–ஒக்ரோபர் 2013, பக்கம் 16, விலை ரூ.30. முழக்கம் 06

இல. 15/4இ மகிந்தாராம வீதி, கல்கிசை

தொ.பேசி: 0716 745 642, 0779 774 427 தொ.நகல்: 0112 473 757

WEB: www.ndpsl.org Email: puthiyaneethi2012@gmail.com


## வடக்கு மாகாண சபையைக் கொடுத்து கிழக்கின் பாரம்பரிய சம்பூர் பறிப்பு

இலங்கையின் விவகாரங்களில் இந்தியா தலையிடும்போது எப்போதும் இரட்டை நிலைப்பாட்டையே பின்பற்றி வந்திருக்கிறது. அதாவது இரண்டு முகங்களைக் காட்டியவாறு தனது தேவைகளையும் தமது பிராந்திய மேலாதிக்க நலன்களையும் பாதுகாத்து வந்திருக்கிறது. இவ்விடயத்தில் இலங்கைத் தமிழர்களுக்காக இந்திய மத்திய அரசு அழுது அனுதாபம் காட்டிக் கொள்வது போன்ற ஒரு தோற்றத்தைக் கொண்டிருக்கும். அதேவேளை இலங்கை அரசாங்கத்தோடு மிக நெருக்கமாகிக் கொண்டு தனக்குரிய தேவைகளையும் இடத்தையும் உறுதிப்படுத்திக் கொள்ளும். அதற்காக இலங்கை அரசாங்கத்திற்குச் செய்ய வேண்டிய யாவற்றையும் செய்து கொடுக்கும். தனது நலன்களைப் பெறும் அதேவேளை அமெரிக்காவைப் பகைத்துக் கொள்ளாதவாறும் பார்த்துக் கொள்வது புது டில்லியின் கொள்கை நிலைப்பாடாகும்.

இத்தகைய நிலைப்பாட்டின் தொடர்ச்சியை அண்மையில் இலங்கையில் இந்தியா நடைமுறைப்படுத்திக் கொண்டது. தானே முன்னின்று 1987ல் கொண்டு வந்து நிறைவேற்றி வைத்த பதின்மூன்றாவது திருத்தத்தில் கை வைக்க வேண்டாம் என ராஜபக்ஷ சகோதரர்களின் ஆட்சிக்கு மிக அழுத்தம் கொடுத்தது. வடமாகாண சபைத் தேர்தலை நடாத்தும்படியும் வற்புறுத்திக் கொண்டது. மகிந்த ராஜபக்ஷவும் அவரது அரசாங்கமும் எவ்வளவிற்கு வீரம் பேசினாலும் இறுதியில் இந்திய அழுத்தத்திற்குப் படியிறங்கினர். பதின்மூன்றாவது திருத்தத்தை எதிர்த்து உச்சக் குரல் எழுப்பியவர்கள் அதனை அடக்கி வாசித்து பின்பு தற்காலிகமாகவேனும் மௌன நிலைக்கு வந்தும் கொண்டனர்.

வடமாகாணச் சபைத் தேர்தலுக்கு அரசாங்கம் அறிவிப்பு வெளியிட்டதும் தமிழர் தரப்பிற்கும் வருடிக் கொடுக்கும் வழி நடத்தல் ஆலோசனையை இந்தியா வழங்கி இருந்தது. "நீங்கள் வடமாகாண சபைத் தேர்தலில் வென்றுவிட்டு வாருங்கள். மிகுதியினை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என இந்தியா தம்மிடம் கூறியதாக முதலமைச்சர் வேட்பாளராக நின்றபோது சி.வி.விக்னேஸ்வரன் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் தெரிவிலும் அதன் பின்னான தேர்தல் வெற்றிக்கும் மட்டுமன்றி ஜனாதிபதி முன்பான சத்தியப் பிரமாணத்தை முன்னெடுப்பதிலும் இந்தியா தனது திரை மறைவு ஆலோசனைகளை வழங்கியவாறே இருந்தது. கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தன் சத்தியப் பிராமண நிகழ்வுக்கு முன்பாகத் தனியே சென்று ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்தியமையும் இந்தியத் தரப்பு ஆலோசனை என்றே கூறப்படுகிறது.

ஒக்ரோபர் ஏழாம் திகதி அலரி மாளிகையில் வடமாகாண முதலமைச்சராக ஜனாதிபதி முன்னிலையில் சி.வி.விக்னேஸ்வரன் பதவிப் பிரமாணம் செய்த வேளை இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் கொழும்பில் இருந்தார். அதன்பின் யாழ்ப்பாணம் சென்ற குர்ஷித் முதலமைச்சரை சந்தித்து வாழ்த்துக் கூறியதுடன் புதுடெல்லிக்கு வருமாறு அழைப்பு விடுத்தும் சென்றார். இந்நிகழ்வு சம்மந்தனுக்கும் விக்னேஸ்வரனுக்கும் கூட்டமைப்பினருக்கும் மாகாணசபை உறுப்பினர்களுக்கும் மிகப் பெரும் ஆனந்தமாகவும் குதூகலமாகவும் அமைந்து கொண்டது. இந்தியா இலங்கைத் தமிழர்களைக் கைவிடாது என்றும் தமிழர் ஆட்சி செய்யும் மாகாணசபையை இந்தியா பெற்றுத் தந்திருக்கிறது எனவும் தமிழ் ஊடகங்கள் விசுவாசப் பாராட்டுக்கள் வழங்கின.

ஆனால் அதே இந்தியா வடமாகாண முதலமைச்சர் பதவிப் பிரமாண நாளுக்கு அடுத்த நாளான ஒக்ரோபர் எட்டாம் திகதி தமிழர்களின் பாரம்பரிய பூமியான திருகோணமலை மாவட்டத்தின் சம்பூரில் 500 ஏக்கர் நிலத்தைத் தனதாக்கிக் கொள்ளும் ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கத்துடன் கைச்சாத்திட்டுக் கொண்டது. வடக்கே மாகாணசபை கொடுப்பு கிழக்கே சம்பூர் பறிப்பு. தமிழ் மக்களிடமிருந்து மகிந்த ராஜபக்ஷ சதோர்களின் ஆட்சியால் பறிக்கப்பட்ட சம்பூரில் பன்நெடுங்காலமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் 2006ல் இருந்து அகதிகளாக ஏதிலிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

சம்பூர் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள வளமான விவசாய பூமியாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் திருகோணமலையின் பாராளுமன்ற உறுப்பினர். வடக்கே தமிழர் ஆட்சி எனக் கூறி முடி தரித்து நிற்கும் இரா.சம்பந்தனும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் கிழக்கின் சம்பூர் நிலப்பறிப்பிற்கு என்ன சொல்வார்கள். இலங்கை இந்திய கூட்டு நிலப்பறிப்பை எதிர்ப்பார்களா அல்லது ஆதரிப்பார்களா? அல்லது நிலம் தொழில் வீடு வாசல் இன்றி அகதிகளாகி நிற்கும் தமிழ் மக்களுக்கு வழி சொல்வார்களா? இந்திய அனல் மின் நிலையம் சம்பூரில் ஒரு பகுதியை விழுங்கி நிற்கிறது. மிகுதிப் பகுதியை ராஜபக்ஷ அரசாங்கம் பிடுங்கி பாரிய முதலீட்டு வலயமாக்கவுள்ளது. அதிலும் இந்திய முதலீட்டாளர்கள் வர உள்ளனர்.

எனவே வடக்கில் மாகாண சபை என்பதைக் கிள்ளிப் போட்டுக் கொண்ட இந்தியா கிழக்கில் சம்பூரை அபகரித்து நிற்கிறது. இது போன்றே இந்தியா இறால் போட்டு சுறாப் பிடிப்பது போன்று நடந்து கொள்கிறது. இதுவே இந்திய பிராந்திய மேலாதிக்கத்தின் மூலோபாயச் செயற்பாடாகும். இதற்குப் பொன்னாடை போர்த்துவதே தமிழர் தரப்பினரின் வழக்கமாகும். ஆனால் தமிழ் சாதாரண உழைக்கும் மக்கள் இந்திய ஆளும் வர்க்கத்தின் சுயரூபத்தை ஒவ்வொரு விடயத்திலும் கண்டுகொள்வது அவசியமாகும். பூனைக்கும் தோழன் பாலுக்கும் காவலன் என்பதே இந்தியாவிற்கான பொருத்தமுடைய முதுமொழியாகும்.

ஆசிரியர் குழு

---

## வடக்கும் தெற்கும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்

வெகுஜனன்

இலங்கையில் தேசிய இனப் பிரச்சினை என்பது பிரதான முரண்பாடாகவும் ஒடுக்குமுறையாகவும் இருந்து வருகிறது என்பது இன்றைய யதார்த்தம். இதனைச் சிலர் சிங்கள தமிழ் முரண்பாடு என்பதாகக் குறுக்கிப் பார்க்கின்றனர். ஆனால் தேசிய இனப்பிரச்சினை என்பது சிங்கள பௌத்த பெரும் தேசியவாத ராணுவ ஒடுக்குமுறை ஆட்சி அதிகாரத்திற்கும் அதன் கீழ் ஒடுக்கப்படுகின்ற தமிழ் முஸ்லிம் மலையகத் தமிழ்த் தேசிய இனங்களும் ஏனைய சிறு சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை உள்ளடக்கியதேயாகும். இன, மொழி, மத, பிரதேச வேறுபாடுகள் ஒடுக்குமுறைகள் தேசிய இனப்பிரச்சினையில் உள்ளடங்கி இருக்கின்ற அதே வேளை வர்க்க அடிப்படைகள் இருந்து வருகின்றன என்பது காணவேண்டியதாகும்.

இந்த வர்க்க நிலைப்பாடு என்பது ஒடுக்கும் தேசிய இனத்தின் மத்தியிலும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களிடையேயும் இருந்து வருவது தெளிவானதாகும். அதாவது வர்க்க, சாதிய, பெண்ணடிமைத்தனங்கள்

> ***இனம் மதம் மொழி பிரதேசம் என்பனவற்றை மட்டுமே தேசியம் நிலைநிறுத்துகிறது. இவ்வாறான தேசியமானது அது சிங்கள பௌத்த தேசியமாகிலும் அல்லது தமிழ் தேசியமாகிலும் எப்பொழுதும் வர்க்க அடிப்படையிலும் சாதிய பெண் பாகுபாடுகளிலும் கால் ஊன்றி நின்று வருகின்றன என்பது விரித்துப் பார்க்கப்படுவதில்லை.***

என்பன இலங்கைச் சமூகங்கள் அனைத்திடமும் இறுகிப் படிந்ததாக இருந்து அவற்றின் ஒடுக்குதல்கள் ஏற்றத் தாழ்வுகள் நிராகரிப்புகள் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டு நிலைகளில் நீடித்து வருகின்றன. இவற்றைத் தேசியம் கவனத்தில் கொள்வதில்லை. இத் தேசியம் எதுவாக இருப்பினும் அவை வர்க்கம் கடந்ததாக சாதியம் பெண்ணடிமைத்தனம் நீக்கம் பெற்றதாக என்றும் இருந்ததில்லை.

இனம் மதம் மொழி பிரதேசம் என்பனவற்றை மட்டுமே தேசியம் நிலைநிறுத்துகிறது. இவ்வாறான தேசியமானது அது சிங்கள பௌத்த தேசியமாகிலும் அல்லது தமிழ் தேசியமாகிலும் எப்பொழுதும் வர்க்க அடிப்படையிலும் சாதிய பெண் பாகுபாடுகளிலும் கால் ஊன்றி நின்று வருகின்றது என்பது விரித்துப் பார்க்கப்படுவதில்லை. ஆனால் எவ்வளவிற்கு தீவிரமாகவும்



உணர்ச்சிகரமாகவும் இத் தேசியங்கள் முன்வைக்கப்பட்டாலும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் அத் தேசியங்களின் வர்க்க சாதிய பெண்கள் பாற்பட்ட அடிப்படைகள் வெளிப்படவே செய்யும் என்பதற்கு வரலாற்றில் நிறையவே உதாரணங்கள் உண்டு.

இலங்கையில் நிலவுடைமைக் கட்டமைப்பும் அதன் பாற்பட்ட பழைமைவாதக் கருத்தியலும் சிந்தனைப் போக்கும் சிங்கள தமிழ் மக்களிடையே நீண்டகாலமாக வேரூன்றி வந்திருக்கிறது. இவ் இரு இன சமூகங்களிடையேயும் வர்க்க சாதிய பெண்ணடிமை சார்ந்த கருத்தியல் சிந்தனையானது நிலைத்து வந்திருப்பதை எவ்வகையிலும் புறந்தள்ள முடியாது. இவை கொலனியத்தின் கீழும் செழிப்புடனேயே இருந்து வந்திருக்கிறது. அக்காலத்தில் தோற்றம் பெற்ற வரையறைகளுக்கு உள்ளான முதலாளித்துவ வளர்ச்சியின் போதும் அவை உடைவுகளுக்கு உள்ளாகவில்லை. அதன் தொடர்ச்சி சுதந்திரம் என்பதற்குப் பின்பும் நீடித்து வந்திருக்கிறது. சிங்கள பௌத்த பெரும் தேசியவாதம் ஆளும் தரப்பாக மாறிய போது அதன் அடிப்படையாகவும் சாராம்சமாகவும் வர்க்கம் சாதியம் பெண்ணடிமை ஆகியன பழைமைவாத்தினது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

சிங்களத் தேசிய இனத்தின் மத்தியில் ஆண்ட பரம்பரை வழிவந்தவர்களான 'கொவிகம' சாதியினரே கொலனியத்தின் கீழ் சகல சொத்து சுகங்களையும் அதிக உயர் பதவிகளையும் பெற்றவர்களாக இருந்தனர். அவர்களிடமே வளமான நிலங்கள் சொத்துக்கள் குவிந்திருந்தன. உள்ளூர் அதிகாரத்தின் அதிபதிகளாகவும் அவர்கள் வீற்றிருந்தனர். அதன் தொடர்ச்சியே சுதந்திரத்தின் பின் முழு நாட்டின் அதிகாரத்தினதும் ஆளும் வர்க்க உரிமையாளர்கள் ஆனார்கள். நிலவுடைமை வழி வந்த சொத்து சுகங்களின் நவீன நீடிப்பும் பழைமைவாதக் கருத்தியல் சிந்தனைப் போக்கின் தொடர்ச்சியும் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. சிங்கள பௌத்த பேரினவாதம் என்பது மேற்கூறியவற்றிலேயே வேர் பிடித்ததாக இருந்து வருகிறது.

இராண்டாயிரத்து அறுநூறு ஆண்டுகாலப் பழைமை என்பது இப் பழைமைவாதத்தின் ஊடான இனமொழி மதப் பெரும் தேசியவாதமாகவே முன்னெடுக்கப்படுகிறது. ஆனால் ஏகப் பெரும்பான்மையான சிங்கள மக்கள் தொழிலாளர்கள், விவசாயிகள், நிலமற்றவர்கள், சாதிய ஏற்றத் தாழ்வுள்ளவர்கள், மீனவர்கள், பின்தங்கிய கிராமிய மக்கள் என்றவாறான வர்க்க சமூக ஏற்றத்தாழ்வுகளுடனேயே வாழ்ந்து வருகின்றனர். அத்தகைய சாதாரண சிங்கள மக்களுக்குத் தமது ஆளும் வர்க்க முகத்தையும் சாதிய பெண்ணடிமைக் கரங்களையும் மறைப்பதற்கு உருவாக்கிய அழகானதும் கவர்ச்சிகரமானதுமான முகமூடியே சிங்கள பௌத்த பெருந் தேசிய முகமூடியாகும்.

இத்தகைய முகமூடியாலும் ஏனைய இன மொழி மத அணிகலங்களாலும் தமது வர்க்க சாதிய பெண்ணடிமைப் பழைமைவாதச் சிந்தனையிலான நடைமுறைகளை மூடிக் கட்டியவாறு ஆட்சி நடத்துகிறார்கள். அதனாலேயே தமிழர்கள் முஸ்லீம்கள் மலையகத் தமிழர்கள் என்போரை சிங்கள மக்களின் எதிரிகளாகச் சித்தரித்து அதன் மூலம் ஆட்சி அதிகாரத்தின் மூலமான சொத்து சுகபோகங்களை அனுபவித்தும் வருகின்ற நடைமுறைப் போக்கினை முன்னெடுத்து வருகிறார்கள். இதனை நாணயத்தின் ஒரு பக்கமாகக் காணமுடிகிறது.

அதேவேளை நாணயத்தின் மறுபக்கமாக இருந்து வருவதுதான் தமிழ்த் தேசியமாகும். சிங்களப் பெரும் தேசியம் எவ்வாறு எவற்றின்மீது வேர்கொண்டெழுந்தனவோ அவ்வாறே தமிழ்த் தேசியமானது தமிழர் ஆண்டப் பரம்பரையின் தொடர்ச்சியாக மேலெழுந்துக் கொண்டது. சிங்கள பெருந்தேசியவாதம் எவ்வாறு கொலனியத்தின் கையாட்களாக இருந்து வந்தனவோ அவ்வாறே தமிழ்த் தேசியத்தின் காவலர்கள் என்போர் கொலனியத்தின் அடிமை விசுவாசிகளாக இருந்து வந்தனர். அவர்களே கொலனியத்தின் கீழான உள்ளூர் அதிகாரிகளாகவும், விவசாயிகளையும் கைவினையாளர்களையும் நிலமற்ற தாழ்த்தப்பட்ட மக்களையும் அடக்கி ஆள்வோராக இருந்தும் வந்தனர்.

>>>12

# ஒரு வீர மனிதர் வில்லனாகிறார்!



**முன்னாள்** உயர் நீதிமன்ற நீதிபதி சி.வி. விக்னேஸ்வரனை வட மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராகக் கொண்டுவந்த காரணங்கள் ஊரறிந்தவை. விக்னேஸ்வரனுக்குத் தமிழ்த் தேசிய உணர்வு இருந்தாலும் அவர் கூட்டமைப்பிற்கு வாக்களிக்குமாறு சென்ற பாராளுமன்றத் தேர்தலின் போது கேட்டிருந்தாலும், அவர் கூட்டமைப்பின் அரசியலிலிருந்து எட்ட நின்றவராவார். அவரே பிரதம வேட்பாளராக வேண்டும் எனப் பலரும் தவமாய்த் தவமிருந்தனர். அவர் மீது தமிழ் ஊடக நெருக்குவாரமும் இருந்தது. ஏனெனில், தமிழ் மக்களிடையே த.தே.கூ இழந்த நம்பகத்தன்மையை மீட்க அவர் தேவைப்பட்டார். அத்துடன் பேரினவாத ஆட்சியினரும் அவர்களுடைய எடுபிடிகளும் படையினரின் துணையுடன் நடத்திவரும் அராஜகத்திற்கு எதிராக வலுவான ஒரு பதிலை வழங்கும் தேவையைப் பரவலாகவே தமிழ் மக்கள் உணர்ந்திருந்தனர்.

மற்றப்படி, ஒரு அதிகாரமுமற்ற மாகாண சபையில் அதிகாரத்தைக் கைப்பற்றி எதையும் சாதிக்கலாம் என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் இல்லை. ஏனெனில் அதிகாரமற்ற மாவட்ட சபைக்கான தேர்தலையும் அவர்கள் 32 ஆண்டுகள் முன்னம் பார்த்திருக்கிறார்கள். அன்று போல் இன்றும், அரசாங்கத்திற்கு எதிரான ஒரு பதிலடி வழங்கும் தேவையை விட்டால், இத் தேர்தலுக்கு ஒரு பெறுமதியும் இல்லை.

கூட்டமைப்பினர் சிலர் சொல்வது போலன்றி, சர்வதேச சமூகம் இப்போதும் தமிழருக்கு ஆதரவாக இல்லை: தமிழரின் இன்னல்கள் ராஜபக்ச ஆட்சியை நெருக்குவதற்கான வாய்ப்பை அதற்குத் தருகிறதே ஒழியத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் அக்கறையை அவை என்றுமே ஏற்படுத்தவில்லை. விக்னேஸ்வரனிடமும் சர்வதேச சமூகம் பற்றிய மூட நம்பிக்கைகள் உள்ளன. பாராளுமன்றப் பாதை பற்றிய மூட நம்பிக்கையும் அவரிடம் உள்ளது. எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்கள் சிலரது இனவெறி அவரிடம் இல்லாமை கவனிக்கத்தக்கது. அதைவிட, மனதிற்பட்டதைத் தயங்காமற் சொல்லும் தன்மையும் அவரிடம் உள்ளது. அவரை உற்சாகமாக வரவேற்ற சிலருக்கு இவற்றாற் சங்கடமேற்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்த தமிழ் மேட்டுக்குடிகள் இன்று தமக்குள் பிளவுபட்டு வெவ்வேறு அமைப்புக்களாக இருந்தாலும் இலங்கை வாழ் தமிழர் தமது அரசியலை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்பதையும் இலங்கையில் சர்வதேசக் குறுக்கீடு எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் தாங்களே முடிவுசெய்து இங்குள்ள தமிழ்த் தேசியத் தலைமைகளிடம் வற்புறுத்தும் போக்கு விடுதலைப் புலிகளின் காலந்தொட்டு இருந்து வருகிறது. தேசிய இனப் பிரச்சினையின் தீர்வு தடைப்பட்டதற்கு மட்டுமன்றி விடுதலைப் புலிகள் மக்களை அழிவை நோக்கிக் கொண்டு சென்றதற்கும் புலம்பெயர் மேட்டுக்குடித் தலைமைகளின் தவறான வழி காட்டல்கள் பங்களித்துள்ளன. அவர்களுடைய பிரகடனங்களை இலங்கையிலுள்ள சகல தீவிர பேரினவாதிகளும் ஆளுந் தரப்பினரும் மக்களும் புலிப் பூச்சாண்டி காட்டப் பாவிக்கின்றனர். இதனால் தமிழ் மக்கள் தம்மை மேலும் தனிமைப்படுத்தும் வாய்ப்புக்கள் உருவாகின்றன. எனவே, புலம்பெயர்ந்த தமிழரின் அன்பையும் தொடரும் ஆதரவையும் நன்றியுடன் வரவேற்கும் அதேவேளை, சில மேட்டுக்குடிகளின் அத்துமீறிய குறுக்கீடுகளைக் கண்டிக்கும் தேவை உள்ளது. அதை விக்னேஸ்வரன் செய்துள்ளார்.

**விக்னேஸ்வரனின் பார்வையில் கோளாறுகள் உள்ளன. முக்கியமாக, அவர் சர்வதேச சமூகத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கை மிக ஆபத்தானது. வட மாகாண சபையைக் கைப்பற்றிப் பலதையும் சாதிக்கலாமென அவர் கனவு காண்கிறார். அவரைப் பற்றிக் கட்டி யெழுப்பப்பட்ட பிம்பம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களையும் சிறிது தூண்டியுள்ளது.**

புலம்பெயர்ந்த தமிழருடன் ஒப்பிடத்தக்களவுக்குத் தமிழ்நாட்டு மக்கள் இலங்கைத் தமிழர் பற்றி அக்கறையுடையோராக உள்ளனர். எனினும் அந்த அக்கறையைத் தமக்கு அரசியல் ஆதாயமாக்குகிற நோக்கத்துடனேயே தி.மு.க, அ.தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க போன்ற பல கட்சிகளும் செயற்பட்டுள்ளன. அவர்களுடைய பொறுப்பற்ற சந்தர்ப்பவாத வீராவேச உரைகளும் பிரகடனங்களும் மட்டுமன்றி அவர்களும் பிற குழுக்களும் தூண்டிவிடும் சிங்கள இனத் துவேஷமும் அப்பாவிச் சிங்களவர்கள் மீது கட்டவிழ்க்கும் காடைத்தனமும், தமிழ் மக்கள் மீதான எவரது நல்லெண்ணத்திற்கும் கேடானவை.

தமிழக அரசியற் கட்சிகள் தமது சுயலாபத்திற்காகச் செய்கிற பல்வேறு காரியங்களை இடதுசாரிகளும் முற்போக்காளர்களும் கண்டித்து வந்துள்ளனர். எனினும், த.தே. கூட்டமைப்பிலிருந்து வரத் தவறிய கண்டனம் விக்னேஸ்வரன் வாயிலாக வந்துள்ளமை வரவேற்கத்தக்கது. இந்த இரு கூற்றுக்களுக்காகவும் பாராட்ட வேண்டிய ஒருவரை 'இந்திய முகவர்' என்று சொல்லாத குறையாக ஒரு 'பேராசிரியர்' தனது வாராந்தப் பத்தியில் எழுதியிருக்கிறார். விக்னேஸ்வரனின் கூற்றுப் பற்றிய அதிருப்தியைச் சில புலம்பெயர்ந்த வட்டங்களும் தமிழகத்தின் இனவெறி அரசியல்வாதிகளும் தெரிவித்துள்ளமை, தமிழ்த் தேசியவாதம் இன்னமும் தனது ஆண்டபரம்ரைத் திமிர்த்தனத்திலிருந்து விடுபடாமையையே காட்டுகிறது.

விக்னேஸ்வரனின் பார்வையில் கோளாறுகள் உள்ளன. முக்கியமாக, அவர் சர்வதேச சமூகத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கை மிக ஆபத்தானது. வட மாகாண சபையைக் கைப்பற்றிப் பலதையும் சாதிக்கலாமென அவர் கனவு காண்கிறார். அவரைப் பற்றிக் கட்டியெழுப்பப்பட்ட பிம்பம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களையும் சிறிது தூண்டியுள்ளது. விக்னேஸ்வரன் த.தே.கூட்டமைப்பின் பிரமுகர் அரசியலுக்குள் தன்னை முடக்கும் அபாயம் உள்ளது. அதற்குட் சிக்காமல், தமிழ் மக்களை ஏய்ப்பவர்கள் இன்னும் யார் என்ற உண்மையையும் அவர் போட்டுடைப்பாராயின் மக்களை அரசியல் மயப்படுத்த உதவுவாராவார். அதை அவர் செய்வாரா?

# கோமாளிகளா? ஏமாற்றுக்காரர்களா?

**சி.வி.** விக்னேஸ்வரன் சீமானோ கோபால சாமியோ நேசிக்க நியாமில்லை. அவர் தேர்தலுக்கு முன்பு சொன்ன காத்திரமான ஒரு உண்மை அவர்களை மிகவும் சுட்டிருக்கிறது. தமிழக அரசியற் கட்சிகள் ஈழத் தமிழரின் பிரச்சினையைத் தமது சுயலாபத்திற்காகப் பயன்படுத்தி வந்துள்ளமையை நாம் அறிவோம்.

சீமானும் கோபாலசாமியும் திருமாவளவனும் நெடுமாறனும் ராமதாசும் எவ்வளவு வீராவேசமாகப் பேசித் தமிழ் மக்களுக்கு உசுப்பேற்ற முற்பட்டாலும், நடைமுறையில், தமது நலன்கள் என வருகிறபோது, அதிகாரத்திலிருந்தவர்களைப் பகைக்காமல் ஒதுங்கிக் கொண்டவர்கள் தாம். அவர்களிற் சிலருடைய கோமாளித்தனங்களைத் திரும்பத் திரும்பப் பார்த்து அலுத்துவிட்டோம்.

அதிலும், சீமானும் ராமதாசும் அப்பட்டமான சாதிய ஒடுக்குமுறையாளர்கள் என்பதைப் பலர் அறியமாட்டார்கள். இந்த வெறித்தனத்தை பிறர் காணாமல் மூடிக்காட்டத் 'தமிழீழ ஆதரவு' அவர்கட்கு உதவியிருக்கிறது. அதேயளவுக்கு அவர்களுடைய தமிழின வெறி தமிழரல்லாத பிற இந்தியத் தேசிய இனத்தவர்கட்கு எதிரான துவேஷமாகவும் வெளிப்பட்டுள்ளது. அதனாலேயே இவ்வாறானோரின் காட்டுக் கூச்சல்கள் தமிழகத்திலுங் கூட ஈழத்தமிழருக்கான பொதுமக்கள் ஆதரவுக்குக் கேடு செய்துள்ளன.

சீ.வி. விக்னேஸ்வரன் பதிவியேற்றதால் தமிழ் மக்களுக்கு ஒரு நன்மையும் இல்லை என்று கோபாலசாமி அறிவித்திருக்கிறார். கோபாலசமி பரிந்துரைக்கக்கூடிய எவர் பதவியேற்றிருந்தாலும் அதனால் அவர் ஏற்கக்கூடிய எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. மாகாண சபை வேண்டாம் என்பது கோபாலசாமியின் பரிந்துரையா? அப்படியாயின் மகிந்த ராஜபக்சவினும் மேலாக அதனால் மகிழ்வோர் யாரும் இருக்கமாட்டார்கள். மாகாணசபைத் தேர்தலை எல்லாத் தமிழ்க் கட்சிகளும் பகிஷ்கரித்திருக்க வேண்டும் என்பது அவருடைய விருப்பமா? அப்படியானால் விடுதலைப் புலிகளின் பகிஷ்கரிப்பு வற்புறுத்தலால் 1994ம் ஆண்டு யார் பயனடைந்தார்களோ அவர்களே இம்முறையும் பயனடைந்திருப்பர்.

வட மாகாண சபைக்கு இன்று அரசியல் அதிகாரங்கள் இல்லை என்பதும் இருந்திருக்க வேண்டிய சில அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளன என்பதும் உண்மை. அது ஒழுங்காக இயங்க மேலும் நிதி ஒதுக்கலும் நிருவாக அதிகாரங்களும் தேவை என்பதும் உண்மை. அவற்றை வற்புறுத்திப் போராடுவது சரியானது. அதை வெறுமனே வட மாகாண சபைக்குள்ளிருந்து வெல்ல இயலாது. வடமாகாண சபைக்குள்ளிருந்து எழும் கோரிக்கைகட்குத் தமிழ் மக்களின் ஆதரவு மட்டும் போதாது. பிற சமூகத்தினரது ஆதரவும் தேவை.



**வை.கோ., நெடுமாறன், சீமான், ராமதாஸ், திருமாவளவன் போன்றோர் இடுவது தமிழின வெறிக் கூச்சலும் அது சார்ந்த செயற்பாடுகளுமாகும். அதன் மூலம் தமது இயலாமைகள், பொட்டுக்கேடுகள், சாதிய வக்கிரங்கள் போன்றவற்றை இலங்கைத் தமிழ் ஆதரவு என்ற திரையால் மறைத்து நாடகமாடுகிறார்கள்.**

வடமாகாண சபை என்பது வெறுமனே பிரிவினைக் கோரிக்கைக்கான ஒரு பிரசார மேடையல்ல எனவும் ஒரு மாகாண சபையால் தன்னிடமுள்ள குறைந்தளவான வளங்களுடன் மக்களின் சில தேவைகளை நிறைவேற்ற இயலும் எனவும் ஊழலற்ற பகிரங்கமான ஒரு நிதி நிருவாகத்தை நடத்த இயலும் எனவும் உணர்த்த இயலுமாயின் மாகாண சபைகட்கு மேலும் அதிகாரங்களை வழங்குவதற்கான கோரிக்கைக்குப் பரவலான ஆதரவை வெல்லலாம். கோபால சாமியும் பிற தமிழக அரசியற் கோமாளிகளும் தமிழக மக்களை ஏய்க்க எதையும் பேசிவிட்டுப் போகலாம். அவற்றைப் புறக்கணித்துத் தமிழ்த் தலைமைகள் தமிழ் மக்களுக்குச் சரியானதை செய்யுமாறு வற்புறுத்துவதே நமது தேவையாகும். கோபால சாமிக்கும் சீமானுக்கும் நெடுமாறனுக்கும் பிறருக்கும் மட்டற்ற தமிழ்ப் பற்றும் இனப்பற்றும் இருக்கின்றன என்றால் அவர்கள் முதலில் தமிழ் நாட்டை டில்லியின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கிற ஒரு போராட்டத்தைத் தொடங்கட்டும். அவர்களுடைய ஆரவாரங்கட்காக ஈழத் தமிழரை இன்னுமொருமுறை போரில் அமிழ்த்தும் முயற்சிகளை நாம் அறவே நிராகரிப்போம். நமது தேசிய இனப் பிரச்சினையைத் தீரக்க அயல் ஆதரவு உதவலாம். ஆனால் நமக்கு வழிகாட்ட முன்வருகிற தமிழக மூஞ்சுறுகள் முதலில் தாங்கள் போகிற வழியை அறிந்து கொள்ளட்டும்.

வை.கோ., நெடுமாறன், சீமான், ராமதாஸ், திருமாவளவன் போன்றோர் தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்காக நியாயமான குரல் கொடுத்தால் அது சாதகமான விளைவுகளுக்கு உதவக் கூடியது. ஆனால் அவர்கள் இடுவது தமிழின வெறிக் கூச்சலும் அது சார்ந்த செயற்பாடுகளுமாகும். அதன் மூலம் தமது இயலாமைகள், பொட்டுக்கேடுகள், சாதிய வக்கிரங்கள் போன்றவற்றை இலங்கைத் தமிழர் ஆதரவு என்ற திரையால் மறைத்து நாடகமாடுகிறார்கள். அதனால் அவர்களுக்குப் பல்வேறு அரசியல் லாபங்கள் மட்டுமன்றிப் புலம் பெயர்ந்த நாடுகளின் தமிழர்களிடமிருந்து நேரடியாகவும் மறைமுகமாகவும் டொலர்களும் யூரோக்களும் தாராளமாகக் கொட்டுகின்றன. அவர்கள் இதனைத் தமிழினப் பிழைப்புவாத அரசியலாகச் செய்கிறார்கள். நமக்குத் தேவை நேர்மையானதும் முற்போக்கானதுமான தமிழ் உணர்வாளர்களுடனான ஐக்கியமே.

# மோடிக்கு சாமரை வீசும் விக்னேஸ்வரன்

## இது சாயம் வெளுக்கும் காலம்

தமிழ்த் தேசிய அரசியலின் இந்துத்துவச் சாய்வும் அதன் அரசியல் தலைமைகளின் யாழ்ப்பாண சைவ உயர்குடி மரபும் நாம் அறியாததல்ல. 2009இல் இந்தியப் பாரளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. வென்று இலங்கையில் போர் நிறுத்தம் வரும் என்று கதையளந்து மக்களை நடுத்தெருவில் விட்ட தலைமைகளை எளிதில் மறந்து விட முடியாது.

வட மாகாண முதலமைச்சராகப் பதவியேற்ற சி.வி. விக்னேஸ்வரன், மத வெறிக் கொலைகாரனும் அடுத்த தேர்தலில் பா.ஜ.கவின் பிரதம வேட்பாளருமான நரேந்திர மோடியை புகழ்ந்து தள்ளியிருக்கிறார். "நல்லாட்சி என்பது அபிவிருத்தியில் மக்களை ஒன்றிணைப்பது, அதை மோடி சிறப்பாகச் செய்து காட்டி இருக்கிறார்" என்று சொன்ன விக்னேஸ்வரன் "பல வருடங்களாக குஜராத்தின் மனங்கவர் நாயகன்" என்றும் மோடிக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

2009 இனப்படுகொலைகள் மகிந்த ராஜபக்சவை எவ்வாறு இலங்கையின் மனங்கவர் நாயகனாக்கினவோ அவ்வாறே கோத்ரா ரயில் எரிப்பும் குஜராத்தில் முஸ்லிம்களின் படுகொலையும் மோடியை மனங்கவர் நாயகனாக்கின. மோடிக்கும் ராஜபக்சவுக்கும் பெரிய வேறுபாடு இல்லை. ராஜபக்ச இலங்கையின் மோடி, மோடி இந்தியாவின் ராஜபக்ச.

**இப்போது பதவிச் சண்டை நடக்கிறது. வட மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் வெளியானவுடன் தமிழ்த் தேசிய நெருப்பெடுத்த எவரையும் இப்போது காணோம். அவர்கள் பட்டுவேட்டி பற்றிய கனவில் இருந்தபோது கட்டியிருந்த கோவணமே களவாடப் பட்டுவிட்டது போல நினைத்ததை விட வேகமாகவே சாயம் வெளுக்கத் தொடங்கிவிட்டது.**




விக்னேஸ்வரன் அபிவிருத்தியின் நாயகன் என்று புகழும் குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடியின் யோக்கியதை என்னஎன்ன என்றும் அவரது மாநிலம் அபிவிருத்தியில் என்ன சாதித்திருக்கிறது என்றும் பார்ப்போம்.

இந்தியாவில் 65% ரேசன் பொருட்கள் திருடு போகும் மாநிலம் குஜராத். இந்தியாவிலேயே தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் அதிகுறைவான மாநிலம் குஜராத். 'வாடகைக் கருப்பை' என்ற பெயரில் ஏழைப் பெண்கள் தங்களது கருப்பையை வாடகைக்கு விட்டு வெள்ளையருக்குப் பிள்ளை பெற்றுக் கொடுப்பதன் மூலம் அந்நியச் செலாவணி ஈட்டும் மாநிலமும் குஜராத்தான். இந்தியாவின் மாருதி-சுஸுக்கி தொழிலாளர்கள் மனிதத் தன்மையற்ற முறையில் நடத்தப்படுவதை எதிர்த்து நாடு முழுவதும் இருந்த ஜனநாயக சக்திகள் போராடிய போது, சுஸுக்கி நிறுவனத்தை குஜராத்துக்கு அழைக்க ஜப்பானுக்குப் போனவர் இந்த மோடி.

மோடியின் அபிவிருத்தியின் அழகை விளங்க ஒரு சம்பவம் போதுமானது. மேற்கு வங்காளத்தில் மக்கள் போராடி விரட்டியடித்த டாட்டா நானோ கார் தொழிற்சாலையை வரவேற்று குஜராத்தில் இடம் கொடுத்தார். குஜராத்தில் சதானந்த் எனும் இடத்தில் டாட்டாவின் நானோ தொழிற்சாலைக்காக 1100 ஏக்கர் விவசாய நிலம் விவசாயிகளிடம் இருந்து பறிக்கப்பட்டு டாட்டாவிடம் ஒப்படைக்கப்பட்டது. தொழிற்சாலையை அமைப்பதற்கு 9570 கோடி ரூபாயை குஜராத் அரசு டாட்டா நிறுவனத்துக்கு 0.1% வட்டிக்குக் கொடுத்தது. கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புடைய விவசாயிகளின் நிலத்தைப் பறித்து டாட்டாவுக்கு கொடுத்ததுதான் அவரது சாதனை. இதுதான் மோடியின் அபிவிருத்தி. இவ்விதமான அபிவிருத்தியை விக்னேஸ்வரன் மெச்சுகிறார் என்றால், தமிழ் மக்கள் அஞ்ச நிறைய இருக்கிறது. மோடி முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட குஜராத் படுகொலையையும் அதற்காக மேற்கொண்ட அதிகாரத் துஸ்பிரயோகத்தையும் விக்னேஸ்வரன் அறியாதது அல்ல.

விக்னேஸ்வரனின் இந்து மதச் சார்பும் அவரது இந்து மாமன்றத்துடன் அவருடைய நெருக்கமும் வெளிப்படையானவை. இப்போது அது பதவிகளை வழங்குவதிலும் செல்வாக்குச் செலுத்துகிறது. அவர் ஊழலுக்கும் அதிகார துஷ்பிரயோகத்திற்கும் பெயர் போன ஒருவரை தன் இணைச் செயலாளர்களில் ஒருவராக நியமத்திருக்கிறார். இந்து மாமன்றத் தொடர்புகளே அவருக்கு இப் பதவியைப் பெற்றுத் தந்திருக்கின்றன. ஆனால் சுயநலன் வேண்டாது பொதுநலனை முன்னிறுத்தி மக்களுக்குப் பணியாற்ற விக்னேஸ்வரன் அழைப்பு விடுக்கிறார். சொல்லும் செயலும் பலருக்குச் சரிவர வாய்ப்பதில்லை. தங்களைத் தாங்கள் நம்புவதே தமிழ் மக்களுக்கான ஒரே வழி.

இந்தியாவின் தயவில் அனைத்தையும் சாதிக்கலாம் என்று நம்பும் ஒரு கட்சியை நம்பிப் பயனில்லை என மக்கள் உணர வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் தாங்கள் இந்தியாவுடன் என்ன பேசுகிறோம் என்றோ, யார் யாருக்கு என்னென்ன வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள் என்றோ தமிழ் மக்களுக்குச் சொல்வார்களா? குறிப்பாக, விக்னேஸ்வரன் பதவியேற்புத் தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்திய உயர்ஸ்தானிகர் முன்னிலையில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய , தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரிடையிலான பேச்சுவார்த்தைகளைப் பற்றியோ அதில் உடன்பட்ட விடயங்கள் பற்றியோ தமிழ் மக்களுக்குச் சொல்லத் தமிழ்த் தலைமைகள் தயாரா?

இப்போது பதவிச் சண்டை நடக்கிறது. வட மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் வெளியானவுடன் தமிழ்த் தேசிய நெருப்பெடுத்த எவரையும் இப்போது காணோம். அவர்கள் பட்டு வேட்டிப் பற்றிய கனவில் இருந்தபோது கட்டியிருந்த கோவணமும் களவாடப் பட்டுவிட்டது போல நினைத்ததை விட வேகமாகவே சாயம் வெளுக்கத் தொடங்கிவிட்டது.

தமிழ் மக்கள் இப்போது இந்தக் கோமாளித்தனத்தை வேடிக்கை பார்ப்பதுடன் விடாது, தாங்கள் பெற்ற வெற்றியை இந்த வெற்றுவேட்டுக்கள் தங்களுடைய அற்பத்தனங்கட்காகச் சண்டையிட்டுச் சீரழிக்க விடலாகாது.

தமிழ் மகன்

---

### 05>>> வடக்கும் தெற்கும் ஒரு நாணயத்தின்.....

இவ்வாறே இவர்கள் பெரும் நிலச் சொந்தக்காரர்களாகி சொத்து சுகம் அனுபவிப்போராகிக் கொண்டனர். மணியக்காரர், உடையார், முதலியார், விதானையார், பதிவுக்காரர் போன்ற பதவிகள் யாவும் நிலவுடைமையாளர்களிடமே இருந்து வந்தன. இதனால் அவர்கள் அனைவரும் ஆண்டபரம்பரையில் வந்தவர்களாக இருந்தனர். அவர்கள் மதத்தையும் பின்பு மொழியையும் தமது கவசங்களாக்கிக் கொண்டனர். கடந்த அறுபத்தைந்து வருடகால பாராளுமன்ற அரசியலிலும் இவர்களின் வாரிசுகளே பதவிக் பெற்றுக் கொண்டனர். சிங்களப் பெரும் தேசியவாதம்

தெற்கிலே எவ்வாறு பழைமைவாதத்தைக் கைப்பிடித்து சிங்கள மக்களை சிங்கள பௌத்த பெருந் தேசியவாத முழக்கங்களுடன் ஏமாற்றி வருகிறார்களோ அவ்வாறே தமிழ்த் தேசியம் பேசிவருவோரும் தமிழ்ச் சாதாரண மக்களை ஏமாற்றி வந்துள்ளனர். இத் தமிழ்த் தேசியவாதம் பற்றி உச்சக்குரல் வைத்து முழக்கம் செய்வோர் அனைவரும் 'ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப் பதில் என்ன குறை' என்ற காசி ஆனந்தனின் உணர்ச்சி அடிகளைத் தலைமேல் தூக்கி வைத்தே இன்றுவரை தமிழ்த் தேசியம் என்னும் குறுந் தேசியவாதம் பேசி வருகின்றனர்.

ஆனால் இவர்கள் பேசிவரும் தமிழ்த் தேசியத்தின் திரையினால் தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் இருந்து வரும் வர்க்க, சாதிய, பெண்ணடிமை, முரண்பாடுகளையும் பிரதேச ஏற்றத்தாழ்வுகளையும் மறைத்துக் கட்டி நிற்கின்றனர். இவை பற்றிக் கேள்வி எழுப்பினால் அல்லது சுட்டிக்காட்டினால் தமிழ்த் தேசிய இனத்தைப் பிரித்து வைப்பதற்கு முன்நிற்பவர்கள் எனக் குற்றம் சுமத்துகின்றனர். தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வரும் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், பெண்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், நிலமற்றோர் என்போரை சமத்துவமாகவோ சக மனிதர்களாகவோ கவனத்தில் எடுப்பதில்லை. இவர்களின் தேவை ஒரே ஒரு முறை தான் இவ் ஆண்டபரம்பரை வழி சார்ந்தோருக்குத் தேவைப்படுவது வழக்கம். அது தேர்தல்கள் வரும் வேளைகளில் மட்டுமே.

தமது மேட்டுக்குடி ஆதிக்க அரசியல் பிரதிநிதிகளாகத் தம்மைத் தெரிவு செய்வதால் அம் மக்களை வெறும் வாக்குப் போடும் யந்திரங்களாகப் பயன்படுத்திக் கொள்வர். அவ்வேளைகளில் "சிங்களவனுக்கு நாம் அடிமை இல்லை", "தமிழனுக்கு தன்மானம் உண்டு", "நாங்கள் ஆண்ட பரம்பரை", "தமிழர் ஒற்றுமையை உலகறியச் செய்வோம்", "தமிழர்கள் மூத்த குடியினர்" என்றவாறான குறுந் தேசியவாத முழக்கங்களுடன் தேர்தல்களில் நின்று வெல்வார்கள். இத்தகைய முழக்கங்கள் பற்றி அறிவுபூர்வமாக விஞ்ஞானபூர்வமான கருத்துக்கள் வைப்போரை இலகுவாகவே 'தமிழின விரோதிகள்' அல்லது 'துரோகிகள்' என்றும் பட்டம் சூட்டிக் கொள்வர். மக்களில் ஒருசாரார் அதனை தலையாட்டும் பொம்மைகள் போன்று தலையாட்டவும் செய்வர்.

இத்தகைய தமிழ்த்தேசிய முழக்கம் செய்வோருக்கு உள்ள ஒரே ஒரு சாதகமான விடயம் யாதெனில் தெற்கிலே சிங்கள பௌத்த பெரும் தேசியவாதம் தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறையை முன்னெடுத்து வருவது தான். இதனை சற்று ஆழந்து நோக்கின் சிங்கள பௌத்த பேரினவாதத்தால் தமிழ்க் குறுந்தேசியவாதம் வளர்க்கப் படுகிறது. அதே தமிழ்க் குறுந் தேசியவாதத்தால் சிங்கள பௌத்த பெருந் தேசியவாதம் வளர்க்கப்படுகிறது.

தெற்கிலும் வடக்கிலும் இருப்போர் இனம், மதம், மொழி, பிரதேசத்தால் பண்பாட்டால் வேறானவர்களாக இருக்கிறார்கள். ஆனால் கருத்தியல் சிந்தனை நடைமுறைகளால் ஒரே விதமானவர்களாக இருக்கின்றனர். இரு தரப்பினரதும் அடிப்படைகளும் சாராம்சமும் அணுகுமுறைகளும் ஒன்றாக இருக்கிறது. ஆட்கள் மட்டுமே சிங்கள தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழர் என்ற அடையாள வேறுபாட்டுடன் இருந்து வருகின்றனர்.

எனவே தான் சிங்கள பௌத்த பெரும் தேசியவாதமாகிலும் தமிழ்க் குறுந்தேசியவாதமாயினும் அல்லது மத பிரதேசவாதத் தேசியங்களாயினும் அவை உடைத்துப் பார்க்கப்பட வேண்டும் என முற்போக்காளர்கள், ஜனநாயகவாதிகள் கோருகின்றனர். அவர்களது கோரிக்கையின் ஊடே விஞ்ஞானபூர்வமான அறிவுசார் அரசியல் கண்ணோட்டம் படிந்திருக்கிறது. அதில் நியாயம் இருக்கிறது.

ஆதலால் ஒரு நாணயத்திற்கு இருபக்கங்கள் அமைந்திருப்பது போன்று சிங்களப் பெரும் தேசியவாதமும் தமிழ்த் தேசியமும் சாராம்சத்தில் ஒன்றாகவும் பக்கங்கள் இரண்டாகவும் இருந்து வருகிறது. இவற்றைப் புரிந்து கொள்வதன் ஊடாக தமிழ்த் தேசிய இனத்தினதும் ஏனைய தேசிய இனங்களினதும் விடுதலைக்கான பாதையைத் தேர்ந்தெடுக்கவும் பயணத்தை மேற்கொள்ளவும் இயலும் என்பதே சமகாலத் தேவையாகும்.

# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை

23

வெகுஜனன்

கிழக்கில் சுமார் இரண்டு தசாப்த காலத்தில் வளர்ந்து நிலை கொண்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தை 2004ம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து 2007ன் நடுப்பகுதி வரை அங்கிருந்து முற்றாக அகற்றும் தாக்குதல்களைப் ராணுவம் படிப்படியாக உக்கிரப்படுத்திக் கொண்டது. 2006 ஓகஸ்ட் எட்டாம் திகதியும், சம்பூரை 2006 செப்ரம்பர் ஆறாம் திகதியிலும், வாகரையை 2007 ஜனவரி 15திலும், இறுதியாக 2007 யூலை 11ம் திகதியில் தொப்பிகலவையும் ராணுவம் கைப்பற்றி முழு கிழக்கிலங்கையையும் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தது. இறுதியாக நிலை கொண்டிருந்த குடுமிமலை (தொப்பிகல) காட்டுப் பிரதேசத்திலிருந்து தந்திரோபாயப் பின்வாங்கல் எனக் கூறிக்கொண்டு புலிகள் கிழக்கைக் கைவிட்டுச் சென்றனர்.



இலங்கை அரசாங்கமும் ராணுவமும் வன்னியை மீட்டு புலிகள் இயக்கத்தை முற்றுமுழுதாகத் தோற்கடிக்கும் ராணுவ மூலோபாயத்துடன் தமது ஒவ்வொரு தந்திரோபாயக் காயையும் நகர்த்திக் கொண்டிருந்தனர். மகிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரர்களும் அவர்களுக்கு நெருக்கமானவர்களும் ஆட்சி அதிகாரத்தில் தொடர்ந்து பல ஆண்டுகள் நீடித்திருப்பதற்கு இவ் யுத்தத்தில் வெற்றி பெறுவது அவசியமாக இருந்தது.

சிறுசிறு ஆயுதம் தாங்கிய குழுக்களாகச் சிலர் இருந்து வந்தபோதிலும் அவர்களால் அதிக நாட்கள் நின்று பிடிக்க முடியவில்லை. தரை, கடல், காடுகள் இயற்கை வளங்கள் கொண்ட கிழக்கு மாகாணத்தைப் புலிகள் இழந்தமை அவர்களுக்குப் பெரும் பின்னடைவானது. குறிப்பாக புலிகளின் ராணுவப் பிரிவில் இருந்து வந்த போராளிகளும் ஆயுதங்களும் ஏற்கனவே இடம்பெற்ற கருணா தலைமையிலான பிரிவின் போது புலிகளால் இழக்கப்பட்டது. இப்போது யாவும் சேர்ந்து இலங்கை ராணுவத்திற்கு கிழக்கை மீட்கும் வெற்றியாகிக் கொண்டது.

அதேவேளை கிழக்கின் மக்கள் சுமார் இரண்டரை லட்சம் பேர் இடம்பெயர்ந்த நிலையில் அகதிகள் ஆக்கப்பட்டனர். உயிரிழப்புகள், படு காயங்கள் மட்டுமன்றி தமது உறவுகளை இழந்தும் காணாமல் போன நிலையில் மோசமான அவலங்களுடன் மக்கள் நிர்க்கதியாகிக் கொண்டனர். உணவு உடை இருப்பிடம் என்பனவற்றுக்காகப் பரிதவிக்கும் அகதிளாகிக் கொண்டனர். அரசாங்கம் ஏனோ தானோ என்ற நிலையில் நடந்து கொண்டது. பொரு ளாதார பலமின்மைக்கும் இயற்கை அழிவுகளுக் கும் அடிக்கடி முகம் கொடுத்து பின்தங்கிய சமூக வாழ்வுக்குள் இருந்து வந்த கிழக்கின் மக்களுக்கு மேற்படி ராணுவத் தாக்குதலும் கிழக்கை மீட்கும் அரசாங்கத்தின் கொடூர ராணுவ வழி முறைகளும் தாங்க முடியாத துன்பங்களையும் துயரங்களையும் தந்து கொண்டது.

இந்நிலையில் மகிந்த சிந்தனை அரசாங்கம் 19-07-2007ல் 'கிழக்கின் உதயம்' என்னும் பெயரில் கிழக்கின் மீட்பு வெற்றி விழாவைக் கொண்டாடியது. 'கிழக்கை மீட்டு விட்டோம். வடக்கில் சிறு நிலப்பரப்பில் மட்டுமே புலிகள் நிலை கொண்டுள்ளனர். விரைவில் வன்னியையும் மீட்போம்' எனப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச சூளுரைத்தார். அதேவேளை புலிகள் இயக்கம் தமது உச்ச நிலைத் தாக்குதல் வழிமுறை எனக் கொள்ளப்படும் தற்கொலைத் தாக்குதல்களையும் நேரடித் தாக்குதல்களையும் தீவிரப்படுத்திக் கொண்டது. யுத்தத்துடன் எவ்வித சம்மந்தமும் அற்ற சாதாரண சிங்கள மக்கள் இலக்கு வைக்கப்பட்டனர். இவை சிங்களக் கிராமங்களிலும் கொழும்பு நகரிலும் முன்னெடுக்கப்பட்டன. இத்தாக்குதல்கள் பழிக்குப் பழி என்று ஏற்றுக் கொள்ளமுடியாத நியாயங்களின் அடிப்படையில் புலிகளால் முன்னெடுக்கப்பட்டன. உதாரணமாக கிளிநொச்சி கனகபுரம் பாடசாலைக்கு நூறு மீற்றர் தூரத்தில் கடுமையான விமானக் குண்டு வீச்சு நடாத்தப்பட்டது. அப்பாடசாலையின் எழுநூறு மாணவர்களும் இருபது ஆசிரியர்களும் மயிரிழையில் உயிர் தப்பிக் கொண்டனர். இத் தாக்குதலை அரசாங்கமும் ராணுவமும் புலிகளின் இருப்பிடம் மீதான தாக்குதல் எனப் பரப்புரை செய்து கொண்டனர். அதேவேளை மொனராகல மாவட்டத்தில் புத்தல பிரதேசத்தில் பேரூந்தில் பயணித்த 45 சிங்கள மக்கள் புலிகளால் குண்டு வைத்து பட்டப்பகலில் கொல்லப்பட்டனர். அவர்களில் விவசாயிகள், மாணவர்கள், குழந்தைகள் உள்ளடங்கி இருந்தனர். அதேவேளை 2007ன் கிறிஸ்மஸ் தினத் தன்று கிறிஸ்தவ தேவாலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதேபோன்றே ஒருவாரத்தின் பின் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் 2008ன் ஜனவரி முதலாம் திகதி கொச்சிக்கடை–கொட்டாஞ்சேனை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் வைத்த ஆயததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவற்றுக்கு எவரும் உரிமை கோரி நிற்கவில்லை. ஆனால் ஒவ்வொரு சம்பவத்துடனும் அரசாங்கத்தின் அல்லது விடுதலைப் புலிகளின் கரங்கள் இருந்து வந்ததாகவே மக்கள் மத்தியில் பேசப்பட்டு வந்தது. அவற்றில் உண்மைகள் இருந்தன.

2007ன் அக்ரோபரில் 'வன்னியை மீட்கும்' அரசாங்கத்தின் ராணுவத் தாக்குதல் ஆரம்பித்தது. அதற்குரிய சகல வலிமைகளையும் ராணுவத் தரப்பு பெற்றிருந்தது. புலிகளிடம் முப்படைகளும் பொலீஸ் பிரிவும் தற்கொலைப் படையும் உளவுப் பிரிவும் நவீன தொடர்பாடல் ஒழுங்கமைப்பும் இருந்தன. அதேபோன்று உள்ளேயும் வெளிநாடுகளிலும் பரப்புரை வலையமைப்புகளும் ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் இருந்துவந்தன. இவை யாவும் புலிகளும் ராணுவமும் சமபலத்துடன் இருந்து வருவதான ஒரு தோற்றப்பாட்டை வழங்கி நின்றன. அதேவேளை வன்னிப் போர் ஆரம்பித்த வேளை 'சர்வதேச சமூகம்' எனப்படும் அமெரிக்கா மேற்கு நாடுகள் இஸ்ரேல் இந்தியா போன்றன அரசாங்கத்தின் பக்கத்தில் உள்ளார்ந்த உறுதிப்பாட்டோடு இருந்து வந்தன.

அதேநேரம் தமிழ்த்தரப்பினருக்கும் புலிகளின் புலம் பெயர்ந்த நாடுகளின் அமைப்புகளுக்கும் வேறெரு ஆதரவு முகத்தைப் பொய் முகமாகக் காட்டிக் கொண்டன. அதனை தமிழர் தரப்புக்களும் புலிகள் இயக்கமும் தமது வழமையான ஏகாதிபத்திய-இந்திய விசுவாசத்தின் அடிப்படையில் நம்பியும் கொண்டனர். அதேவேளை சீனா, பாகிஸ்தான், ஈரான், ரஷ்யா என்பன அரசாங்கத்திற்கு வழங்கி வந்த ஆதரவையும் வழங்கப்பட்ட ஆயுதங்கள் பற்றியே தமிழ்த் தரப்பினர் உரத்து வாசித்தும் வந்தனர்.

இவ்வாறான சூழலில் வன்னியின் மன்னார் மாவட்டத்தின் மேற்குப் பகுதியான சிலாவத்துறை அரிப்புப் பிரதேசங்களைக் கைப்பற்றிய ராணுவம் மடுப் பிரதேசத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன. விடுதலைப் புலிகள் கடுமையான எதிர்த் தாக்குதல்களைத் தொடுத்த போதிலும் பரந்து கிடந்த காடுகள் வயல்கள் ஊடாக முன்னேறிய ராணுவத்தின் தாக்குதல் வியூகத்தை முறியடிக்கவோ தடுத்து நிறுத்தவோ முடியவில்லை. மன்னார்-பூநகரி நெடுஞ்சாலையான *A32* க்கைப்பற்றி மேற்கில் இருந்து கிழக்கு நோக்கிய படையெடுப்பைப் ராணுவம் முன்னெடுத்தது. 2007 செப்ரம்பர் 02ல் சிலாவத்துறையையும், 2008 ஏப்பிரல் 24ம் திகதி மடுவையும் ராணுவம் கைப்பற்றிக் கொண்டது. அப்பிரதேசங்களில் நிலை கொண்டிருந்த விடுதலைப்புலிகள் தரை, கடல், வானம் ஆகியவை மூலம் வந்த தாக்குதல்களுக்கு முன்னால் நின்று பிடிக்கமுடியவில்லை. ஆதலால் ஒவ்வொரு பிரதேசத்தில் இருந்தும் பின்வாங்கிச் செல்ல வேண்டியதாயிற்று.

ராணுவத்தின் முன்னேறிய மார்க்கத்தின் ஆரம்ப முக்கிய இலக்காக துணுக்காய் - மல்லாவியாகவே இருந்தது. ஏனெனில் குடாநாட்டில் இருந்து 1995ல் புலிகள் பின்வாங்கி வன்னியை மையப்படுத்தித் தமது இருப்பை உறுதிப்படுத்திய வேளை துணுக்காய்-மல்லாவியே அவர்களது மற்றொரு பிரதான தளமாக விளங்கியது. அங்கிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட சில சர்வதேச தொண்டு நிறுவனங்கள் செயல்பட்டும் வந்தன. மக்களின் அன்றாடத் தேவைகளுக்கும் போராளிகளின் காயங்களுக்கும் மல்லாவி அரசாங்க மருத்துவமனையே முக்கிய மருத்துவ சேவை வழங்கி வந்தது. ஆனால் ராணுவத்தின் மீட்புக்கான தாக்குதல் நகர்வில் திட்டமிட்டு முன்னேறியதன் ஊடாகவும் புலிகள் பின்வாங்கிச் செல்ல ஆரம்பித்ததாலும் துணுக்காய்-மல்லாவி ராணுவ வசமாகியது. இங்கே கவனத்திற்குரிய விடயம் யாதெனில் ஒவ்வொரு பிரதேசமும் வீழ்ச்சியடைய அங்கிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாகிய மக்களின் தொகை அதிகரித்து வந்தமையாகும். அத்தகைய இடம்பெயர்ந்த மக்களுக்கு சர்வதேச தொண்டு நிறுவனங்களும் உள்ளூர் மனித நேய அமைப்புகளும் உதவி வந்தபோதிலும் அவை வரையறுக்கப்பட்டவைகளாகவே இருந்தன.

1995ல் வலிகாமத்தில் இருந்து புலிகள் இயக்கத்தால் வலிந்து மக்கள் தென்மராட்சிக்கு இடம் நகர்த்தப்பட்டனர். அவ்வாறு தென்மராட்சியில் இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் புலிகளின் அழைப்பையும், நிர்ப்பந்தங்களையும் ஏற்று வன்னிக்குச் சென்றனர். அம் மக்களில் கணிசமானோர் அதிக காலம் வன்னிச் சூழலில் வாழ முடியாது ராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த யாழ் குடாநாட்டிற்குத் திரும்பிக் கொண்டனர். ஏற்கனவேயும் வன்னிக்குச் செல்லாது ராணுவக் கட்டுப்பாட்டிற்குள் இருந்த மக்கள் ஒப்பீட்டளவில் வன்னியின் வாழ்க்கை நிலையை விட மேம்பட்ட நிலையில் இருந்தனர். அதற்குக்குக் காரணம் ஒரு பகுதி மக்களுக்கு புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்ந்து வந்த உறவுகளின் ஆதரவுக் கரங்கள் இருந்து வந்தமையாகும். அதேவேளை குடாநாட்டிற்குள் ராணுவத்தின் கடும் கட்டுப்பாடும், கண்காணிப்பும், கெடுபிடிகளும் இருந்து வந்தன என்பது குறிப்பிட வேண்டியதாகும்.

துணுக்காய் மல்லாவி புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதும் ராணுவத்தின் இலக்கு கிளிநொச்சி நோக்கியதாகவே இருந்தது. குடாநாட்டிற்கான ராணுவம்- புலிகளுக்கிடையிலான எல்லையாகப் பளைப் பகுதியின் முகமாலையே இருந்து வந்தது. பளையில் புலிகளும் முகமாலையில் ராணுவமும் சோதனைச் சாவடிகளை வைத்துக் கடும் சோதனைகளின் ஊடாக தெற்கிற்கும் வடக்கிற்கும் பயணிக்கும் மக்களை பயணக் கெடுபிடிகளுக்கு உள்ளாக்கி வந்தனர். அதேவேளை பூநகரி பரந்தனில் இருந்து ராணுவம் கிழக்கு நோக்கி நகர ஆரம்பித்தது. அதனால் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகள் ராணுவத்தின் பிடிக்குள் வந்து கொண்டன.

வன்னியில் புலிகள் இயக்கத்தின் சிவில் நிர்வாகத் தலைமை இடமாகக் கிளிநொச்சியே இருந்து வந்தது. அங்குதான் காவல்துறையின் தலைமையகம் அமைந்திருந்ததோடு சமாதான செயலகமும் இயங்கி வந்தது. அரசியல்துறை அங்கிருந்துதான் செயற்பட்டு வந்தது. உள்ளூர்ப் பிரமுகர்களும் வெளிநாடுகளின் ராஜதந்திரப் பிரதிநிதிகளும் கிளிநொச்சிக்கு வந்து போயினர். புலிகள் இயக்கத் தலைவர்களுடனான பேச்சுவார்த்தைகள் யாவும் கிளிநொச்சியிலேயே இடம்பெற்று வந்தன. அத்துடன் கிளிநொச்சிப் பிரதேசத்தின் இரணைமடுப் பகுதியில் புலிகள் இயக்கம் தமக்கான விமான ஓடுபாதையினை அமைத்திருந்தனர்.

முன்பு சிறிய கடல் விமானம் மூலம் இரணைமடுக் குளத்தில் இறங்கும் வசதியை ஏற்படுத்தியிருந்த புலிகள் இப்போது சிறிய விமானங்கள் இறங்கும் ஓடுபாதையை அமைத்திருந்தனர். ஆனால் இவ் ஓடுபாதை பற்றிப் புலிகள் ஆரம்பத்தில் இரகசியமாகவே வைத்திருந்தனர். அத்துடன் தம்மிடமிருந்த நான்கு சிறிய வகை விமானங்கள் பற்றியும் அவர்கள் உத்தியோகபூர்வமாகத் தெரியப்படுத்தவில்லை. ஆனால் விமான ஓடுபாதை விவகாரத்தைத் தமது பரப்புரை வலையமைப்பில் கசிய விட்டும் ஊடகங்களில் பரபரப்புச் செய்தியாகவும் வரச் செய்தனர். இதனால் புலிகளின் வலிமைப் பற்றிய தோற்றம் காட்டப்பட்டது. வன்னிக்கு உள்ளேயும் வெளியேயும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டப்பட்டது. புலிகளின் ஆதரவாளர்கள் இதனால் பெரு உற்சாகம் கொண்டு புலிகளை யாருமே வெல்ல முடியாது என்ற பிரமைக்குள் மிதந்தனர்.

இலங்கை அரசாங்கமும் ராணுவமும் வன்னியை மீட்டு புலிகள் இயக்கத்தை முற்றுமுழுதாகத் தோற்கடிக்கும் ராணுவ மூலோபாயத்துடன் தமது ஒவ்வொரு தந்திரோபாயக் காயையும் நகர்த்திக் கொண்டிருந்தனர். மகிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரர்களும் அவர்களது அரசாங்க நெருக்கமானவர்களும் ஆட்சி அதிகாரத்தில் தொடர்ந்து பல ஆண்டுகள் நீடித்திருப்பதற்கு இவ் யுத்தத்தில் வெற்றி பெறுவது அவசியமாக

பக்.11 >>

# ஜே.வி.பியின் கவிழ்வு


ஜே.வி.பி 1994க்குப் பின் தனது வாக்கு வங்கியை பலப்படுத்தி வந்தது. ஆனால் அந்தப் பலப்படுத்தல் உறுதியான ஒரு இடதுசாரி வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அமையவில்லை. பழைய பாராளுமன்ற இடதுசாரிகள் பாராளுமன்ற அரசியலில் அடிவைத்த பிறகு படிப்படியாக சீரழிந்து தமது பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டை முற்றாக இழந்தது போலல்லாமல் ஜே.வி.பி. பாட்டாளி வர்க்கத்தை நிராகரித்து வர்க்கத் தெளிவற்ற ஒரு போலி இடதுசாரி அரசியலையும் பேரினவாத்தையும் கலந்து முன்னெடுத்த அரசியல் என்றுமே மாக்சிச நோக்கில் நெறிப்படவில்லை. சீரழிந்த ட்ரொட்ஸ்கிய வாதியான பாலாதம்புவின் ஆதரவால் 1987ம் ஆண்டு விஜேவீரவுக்கு ஒரு ட்ரொட்ஸ்கிய சர்வதேச அமைப்பின் அங்கீகாரம் கிட்டியது.

ஆயினும் ஜே.வி.பியின் தலைவரான விஜேவீர, றொனி டி மெல் என்ற முன்னாள் ஸ்ரீ.ல.சு.க பிரமுகரின் ஆதரவுடன், ஜே.ஆர்.ஜயவர்தனவின் நட்புக்கும் உரியவரானார். இடதுசாரிக் கட்சிகளதும் ஸ்ரீ.ல.சு. கட்சியினதும் கூட்டங்களைக் குழப்பி அக்கட்சிகள் தலைதூக்காமல் தடுப்பதற்கு ஜே.வி.பி. வன்முறைக் குழுக்கள் ஜயவர்தனவுக்கு உதவின. இந்த நட்பு விரைவிலேயே கசக்கத் தொடங்கியது. ஜே.வி.பி. தேர்தல் அரசியலில் இடதுசாரிக் கட்சிகளின் இடத்தைப் பிடிக்க முயன்றது. பாராளுமன்ற இடதுசாரிகளும் ஸ்ரீ.ல.சு.கவும் பலவீனப்பட்டிருந்த நிலையில் ஜே.வி.பி நாட்டில் எழுச்சி பெறத் தொடங்கிய பேரினவாத அரசியல் போக்கைப் பயன்படுத்த முற்பட்டது. 1981ம் ஆண்டின் சனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு, ஜே.வி.பி. முற்றுமுழுதாகப் பேரினவாதத்தின் மூலமே தன்னை வளர்க்க முயன்றது.

1987 இலங்கை-இந்திய உடன்படிக்கையையும் 13வது சட்டத்திருத்தத்தையும் ஜே.வி.பி முற்றுமுழுதாகச் சிங்களப் பேரினவாத நோக்கிலேயே எதிர்த்தது. அத்துடன் 1988-89 காலத்தில் அடக்குமுறை யூ.என்.பி ஆட்சிக்கு எதிரானது என்று சொல்லப்பட்ட அதன் கிளர்ச்சியின் போது ஜே.வி.பி பல இடதுசாரித் தலைவர்களையும் செயற்பாட்டாளர்களையும் இலக்கு வைத்துத் தாக்கியது. முக்கியமான சில தலைவர்கள் கொல்லப்பட்டனர். 1989ல் ஜே.வி.பி உயர் மட்டத் தலைமை ஏறத்தாழ முற்றாகக் கொன்றொழிக்கப்பட்ட பின்பு நாட்டில் அதனை மீளக் கட்டியெழுப்பக் கூடிய சூழல் சனாதிபதி பிரேமதாசவை விடுதலைப் புலிகள் கொன்றதன் பின்னரே உருவானது. 1994இல் ஸ்ரீ.ல.சு.கட்சியின் எழுச்சி ஜே.வி.பியின் புத்துயிர்ப்புக்கும் உதவியது. எனினும் தேசிய இனப்பிரச்சனைக்கு அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படையில் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் எடுத்த முயற்சிகளை ஜே.வி.பி. எதிர்த்தே வந்தது.

பாராளுமன்ற அரசியலில் தன்னை மூன்றாவது சக்தியாக யூ.என்.பிக்கும் ஸ்ரீ.ல.சு.கவுக்கும் மாற்றான ஒரு அணியாக வளர்க்க முற்பட்டபோதும் அதற்கு நம்பகமான ஒரு இடதுசாரிச் சக்தியாக வளர இயலாது போயிற்று. அது வேண்டி நின்ற துரித வளர்ச்சிக்கு அதன் பேரினவாத அரசியல் உதவும் அளவுக்கு மக்கள் மத்தியிலான வெகுசன இடதுசாரி அரசியல் உதவாது என்பதால் அது பேரினவாத நோக்கில் அதிகாரப் பரவலாக்கத்தை எதிர்ப்பதை முக்கியப்படுத்தியது. 1990களின் ஈற்றுப் பகுதியில் உருவான வளர்ந்த சிஹல உருமய பின்னர் ஜாதிக ஹெல உறுமயவாகித் தீவிரமான பேரினவாதத்தை முன்னெடுத்த

**2002இல் அமைதிப் பேச்சுவார்த்தைகள் தொடங்கிய நாள் முதலாக 2009ல் போர் முடியும் நாள்வரை, ஜே.வி.பி. போர்மூலம் 'பிரிவினைவாதத்தையும்' 'பயங்கரவாதத்தையும்' தோற்கடிப்பதையே தன்னுடைய முக்கியமான கொள்கையாக்கியது.**





போது, ஜே.வி.பியும் ஹெலஉறுமயவின் ஆதரவுத் தளமான நகர்புறச் சிங்கள நடுத்தர வர்க் கத்தின் ஆதரவை வெல்ல முயன்றது. எனவே அதன் அரசியல் மேலும் பேரினவாதத்திலும் அமிழ்ந்தது. 2002இல் அமைதிப் பேச்சுவார்த்தைகள் தொடங்கிய நாள் முதலாக 2009ல் போர் முடியும் நாள் வரை, ஜே.வி.பி. போர்மூலம் 'பிரிவினை வாதத்தையும்' 'பயங்கரவாதத்தையும்' தோற்கடிப்பதையே தன்னுடைய முக்கியமான கொள்கையாக்கியது.

அதன் பாராளுமன்ற வாக்கு வலிமையைப் பயன்படுத்தி 2004ம் ஆண்டு நடந்த தேர்தலில் ஸ்ரீ.ல.சு.க. தலைமையிலான ஐக்கிய முன்னியுடன் கூட்டமைப்பதற்கும் மேற்குறிப்பிட்ட பேரினவாத அரசியல் முக்கியமான காரணமாக அமைந்தது. அதை விடவும் பாராளுமன்றப் பாதையில், தேர்தலில் வென்று, ஆட்சிக்கு வரலாம் என்ற கனவும் ஜே.வி.பி தலைமையை ஆட்கொண்டிருந்தது. எனினும் ஜே.வி.பி தலைமை தனது வலிமையை மிகையாக மதிப்பிட்டிருந்த காரணத்தால் அது ஸ்ரீ.ல.சு.கவுடன் முரண்பட்டு அரசாங்கத்திலிருந்து விலக நேர்ந்தது. எனினும் 2005 முடிவில் மகிந்த ராஜபக்ச சனாதிபதி வேட்பாளரான போது ஜே.வி.பி 'மகிந்த சிந்தனை' வேலைத் திட்ட அடிப்படையில் தன்னை மகிந்த ராஜபக்சவுக்கு நெருக்கிக் கொண்டது. தந்திரோபாய நோக்கில், இந்த நெருக்கமே ஜே.வி.பியின் அழிவுக்கான காரணமாகியது என்றாலும், ஜே.வி.பி. 2004இல் அரசாங்கத்தில் இணைந்த போதிலிருந்தே அதன் வளர்ச்சி தடைப்பட்டு விட்டதெனலாம். ஏனெனில் அதன் பின்பு ஜே.வி.பியால் தன்னை யூ.என்.பிக்கும் ஸ்ரீ.ல.சு.கவுக்கும் ஒரு மாற்றாக முன்னிறுத்த இயலவில்லை.

எவ்வாறு சமசமாஜக் கட்சியும் திரிபுவாதக் கம்யூனிஸ்ற் கட்சியும் 1970க்குப் பிறகு ஸ்ரீ.ல.சு.க ஆதரவில்லாமல் ஒரு தேர்தலையும் வெல்ல இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டனரோ அவ்வாறே ஜே.வி.பியும் தனித்துப் போட்டியிட்டு ஒரு நகரசபையைக் கூடக் கைப்பற்ற இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டது. வாக்கு விகிதாசார அடிப்படையில் மாவட்டங்கட்கான பிரதிநிதித்துவம் தீர்மானிக்கப்படாது பழைய தொகுதி அடிப்படையில் தேர்தல்கள் நடந்தால் ஜே.வி.பியின் கதியும் பழைய பாராளுமன்ற இடதுசாரிகளின் கதிபோலவே என்பது 2004க்குப் பின்பு தெட்டத் தெளிவாகி விட்டது. எனினும் அவர்களுடைய பாராளுமன்ற ஆசன வலிமை கொண்டு அவர்கள் நெருக்குவாரத்தைத் தவிர்க்குமுகமாக ராஜபக்ச யூ.என்.பியிலிருந்து கணிசமான எண்ணிக்கையில் பாராளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத் தரப்பிற்கு இழுத்தபோது ஜே.வி.பியின் நிலைமை சிக்கலாகியது. ஜே.வி.பியின் ஆதரவின்றியே ஒரு ஐ.ம.சு.மு பெரும்பான்மையைப் பேண ராஜபக்சவுக்கு இயலுமான பின்பு ஜே.வி.பியை படிப்படியாக ஓரங்கட்ட ராஜபக்சவுக்கு முடிந்தது. ஜே.வி.பியில் ஒரு

**2002இல் அமைதிப் பேச்சுவார்த்தைகள் தொடங்கிய நாள் முதலாக 2009ல் போர் முடியும் நாள்வரை, ஜே.வி.பி. போர்மூலம் 'பிரிவினைவாதத்தையும்' 'பயங்கரவாதத்தையும்' தோற்கடிப்பதையே தன்னுடைய முக்கியமான கொள்கையாக்கியது.**

பிளவை ஏற்படுத்தி ஜே.வி.பியை ராஜபக்ச பலவீனப்படுத்திய நிலையிலேயே ஜே.வி.பி. ராஜபக்சவுடன் முறித்துக் கொண்டது.

ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் ஆதரித்த போரை மிகக் கொடிய முறையில் இந்தியாவினதும் சீனாவினதும் மேற்குலகினதும் ஆதரவுடன், இலங்கை அரசு வென்ற பிறகு ஜே.வி.பிக்கோ, ஜாதிக ஹெல உறுமயவுக்கோ அந்த வெற்றியில் பங்கு கோர இயலாதபடி ராஜபக்சு அவ் வெற்றிக்குப் பூரண உரிமை கொண்டாடலானார். அதன் பயனான விரக்தி ஜே.வி.பியை சரத்பொன்சேகாவுடன் நெருங்குமளவுக்குப் போனது. இவ்வாறு தனது இதுசாரி ஆதரவுத்தளத்திடையே நம்பகத்தன்மையை இழந்த ஜே.வி.பி தனது பேரினவாத அரசியலாலும் பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தாலும் தனக்குக் குழி தோண்டியது.

போரின் வெற்றியைப் பூரணமாக பயன்படுத்தும் நோக்கில் மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத் தேர்தலை அதன் உரிய காலத்திற்கு முன்பு நடத்திய போது ஜே.வி.பியின் பலவீனம் அப்பட்டமாகவே தெரிந்தது. அத் தோல்வியின் பின்னணியிலேயே ஜே.வி.பி.யில் மேலும் ஒரு உடைவு நிகழ்ந்தது.

ஜே.வி.பி ஒரு நேர்மையான இடதுசாரிக்கட்சியல்ல. அது இடதுசாரி வேடம் பூண்ட ஒரு பேரினவாதக் கட்சியாகும். ஆனாலும் அதை இடதுசாரிக் கட்சி எனக் கருதுவோர் உள்ளனர். பழைய பாராளுமன்ற இடதுசாரிகள் மீது மக்கள் நம்பிக்கை இழந்த சூழலில் ஜே.வி.பியை குறைபாடானதெனினும் ஒரு இடதுசாரிக் கட்சியாகக் கருதி அதை ஆதரித்தவர்கள் உள்ளனர். அதை ஒரு இடதுசாரிக் கட்சியாக நம்பி அதை ஆதரித்த இளைஞர்கள் பலர் அதனால் தவறாக வழிநடத்தப்பட்டுள்ளனர். எனினும் ஜே.வி.பியை ஒரு இடதுசாரிக் கட்சியாகவே பிரதான ஊடகங்களும் முக்கியமான பாராளுமன்றக் கட்சிகளும் காட்டி வருகிற ஒரு சூழலில் அண்மைய மாகாண சபைத் தேர்தல்களில் ஜே.வி.பி.யின் தோல்வி தென்னிலங்கையில் இடதுசாரிகளின் மீளெழுச்சிக்குப் பாதகமாக ஒரு சில அம்சங்களைக் கொண்டுள்ளது.

ஜே.வி.பி.க்கு மாற்றாக ஒரு இடதுசாரிக் கட்சி எழாமலும் ஜே.வி.பியிலிருந்து பிரிந்த முன்னணி சோஷலிசக் கட்சி இன்னமும் தன்னை ஒரு முறையான சோஷலிசக் கட்சியாகவும் ஜே.வி.பியினின்று அடிப்படையில் வேறுபட்ட கட்சியாகவும் அடையாளப்படுத்தாமலும் உள்ள நிலையில் தென்னிலங்கையில் இடதுசாரி இயக்கத்தைக் கட்டியெழுப்புவதற்குச் சாதகமான ஒரு ஆதரவுத் தளம் அமைவது கடினம்.

மாற்று இடதுசாரிக் கட்சி ஒன்றாக உருவாகக் கூடிய சக்திகளை சிங்களப் புலிகள் என்று முத்திரை குத்தி ஓரங்கட்டுவதிலும் ஜே.வி.பி. தீவிரமாகப் பங்களித்துள்ளது. எனவே ஜே.வி.பியின் வீழ்ச்சிக்காக எந்த இடதுசாரியும் கண்ணீர் விடுவதற்கில்லை. ஆனால் ஜே.வி.பியின் சரிவு அதனிடத்தில் சரத் பொன்சேகாவின் தலைமையில் இன்னொரு பேரினவாத வலதுசாரிக் கட்சியின் எழுச்சிக்கு உதவியுள்ள அளவில் அதன் தோல்வியைப் பற்றி இடதுசாரிகள் பகிர்வதற்கு எதுவும் இல்லை.

இது தென்னிலங்கையின் நேர்மையான இடதுசாரிகள் தமது அரசியற் துயில் கலைத்து ஊக்கத்துடன் செயற்பட வேண்டிய காலம். இடதுசாரிகள் ஒரு அரசியல் மாற்று சக்தியாக எழாவிடின், மக்கள் முன்னால் உள்ள ஃபாசிச மிரட்டலுக்குச் சவாலாக எதையுமே உருவாக்க இயலாது.

2>>தமிழ்த் தேசியம் உடைத்துப் பார்க்கப்பட...

இன்று தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாணசபை அதிகாரம் வேண்டி போராட வேண்டியுள்ளது. அதற்காக தேர்தல் ஐக்கியத்துக்கு அப்பால் மக்கள் உரிமைகளை வென்றெடுப்பதற்கான உண்மையான ஐக்கியத்தை ஏற்படுத்திப் போராட பொது வேலைத்திட்டத்தின் கீழ் பொது அமைப் பொன்றை ஏற்படுத்த முன்வருமாறு எமது புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி அறைகூவல் விடுப்பதோடு இணைத்து இயங்குவதற்கான உறுதிப்பாட்டையும் பிரகடனப் படுத்துகின்றது எனத் தனதுரையில் குறிப்பிட்டார்.

அங்கு கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் வெ.மகேந்திரன் உரையாற்றியபோது "வடக்கு கிழக்கு மக்கள் மாத்திரமன்றி மலையகத்திலும் ஏனைய தென்பகுதியிலும் சிறுபான்மை மக்களை தமிழர், முஸ்லிம்கள், வேடர்கள் இன மத ரீதியாக பேரினவாத மதவாத அரசாங்கத்தினால் அடக்கப்படுவதோடு விலைவாசி ஏற்றத்தாலும் மனித உரிமைக்கெதிரான நடவடிக்கைகளாலும் சிங்கள மக்களும் நெருக்கடிகளுக்கு உள்ளாகிவருகின்றனர். அவர்கள் இன்று சுத்தமான குடிநீரைக்கூட கேட்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். முதலாளியின் இலாபத்தை காப்பாற்றுவதற்காக சுத்தமான குடிநீரைக் கேட்டு நின்ற வெலிவேரிய சிங்கள மக்கள் மீது இராணுவத்தை ஏவி துப்பாக்கிச் சூடு நடத்தியதன் மூலம் மூவரின் உயிர்களைப் பறித்தெடுத்த சம்பவம் அரசின் மக்கள் விரோத செயற்ப்பாட்டுக்கான அண்மைக் கால உதாரணங்களில் ஒன்றாகும். ஆகவேதான் அனைத்து மக்களுக்கும் எதிராக சர்வாதிகாரம் செலுத்திவரும் இந்த அரசுக்கெதிராக சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக மற்றும் சிறுபான்மை மக்கள் அனைவரும் அணிதிரளவேண்டும்" எனக் கூறினார்.

மேலும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தாயகம் ஆசிரியர் தோழர் க.தனிகாசலம் தமதுரையில் அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வரும் திறந்த பொருளாதாரக் கொள்கையின் வழியாக நுகர்வுக் கலாசாரம் மக்கள் மீது திணிக்கப்படுகிறது. இதனால் சமூக கலாச்சார சீரழிவுகள் வளர்ந்து வருகின்றன. உல்லாசப் பயணத்துறை விருத்தி என்ற பெயரில் சூதாட்ட விடுதிகளும் விபச்சாரமும் போதைவஸ்துப் பாவனையும் பாலியல் துஸ்ப்பிரயோகமும் அதிகரித்து வருகின்றன. வாழ்க்கைச் சுமையின் அதிகரிப்பால் தாய்மார் குழந்தைகளை விட்டு விட்டு வெளிநாடு சென்று உழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. குழந்தைகள் பாதுகாப்பின்றித் தவிக்கின்றனர். வருங்கால சமுதாயம் வலுவற்றதாக மாறும் அபாயம் ஏற்படுகின்றது. இந்த திறந்த பொருளாதாரத்திற்கு எதிராக தேசிய பொருளாதாரத்தை ஏற்படுத்தி எங்கள் பொருளாதார கலாச்சார சமூக வாழ்வு சிறப்படைய வேண்டின் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டியது அவசியம் 'எனத் தெரிவித்தார். மேலும் அக்கூட்டத்தில் தோழர் சோ.தேவராசா, தோழர் ச.பன்னீர்செல்வம், தோழர் த.பிரகாஸ், தோழர் நி.பிரவீனா ஆகியோர் இன்றைய நாட்டின் பொருளாதார நெருக்கடிகளையும் அரசின் சர்வாதிகார போக்கினையும் சுட்டிக்காட்டி உரையாற்றினார்கள். கூட்டத்தின் இறுதியில் "சுப்பற்ற கொல்லை" என்ற சமூக விழிப்பூட்டும் நாடகமும் நடைபெற்றது.

# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு 42

## இமயவரம்பன்

1977ம் ஆண்டு யூ.என்.பி. ஆறில் ஐந்து பெரும்பான்மையைப் பெற்றதற்கு அதனுடைய ஆதரவுத் தளத்தின் வலிமையை விட ஐக்கிய முன்னணிக் கட்சிகள் பிளவுண்டது மட்டுமன்றி தேர்தலில் யூ.என்.பியின் மீளலின் அபாயங்களைப் பற்றிய எச்சரிக்கை உணர்வின்றிச் செயற்பட்டமையும் முக்கியமான காரணமெனலாம். தரப்படுத்தல், மாவட்ட சபைகள் என்பனவற்றைப் பற்றி ஜே.ஆர்.ஜயவர்த்தனவுடன் செய்து கொண்ட எழுதா உடன்படிக்கை ஒன்றின் அடிப்படையிலும் தமது வர்க்க நலன்களைக் கருதியும், கூட்டணி என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் வட, கிழக்கு மாகாணங்கட்கு வெளியே வாழ்ந்த தமிழரை யூ.என்.பிக்கு வாக்களிக்குமாறு மறைமுகமாகத் தூண்டினர் என்பதில் ஒரு இரகசியமுமில்லை. மலையகத்தில் சிரிமா-சாஸ்திரி உடன்படிக்கையை நிறைவேற்றியதன் மூலம் மலையகத் தமிழரில் ஒரு பகுதியினருக்கு வாக்குரிமை கிடைத்திருந்தது. அந்த வாக்கு வலிமையும் யூ.என்.பி.யுடன் கூட்டுச் சேர்ந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவுடன் யூ.என்.பி.க்குக் கிட்டின. யூ.என்.பி கூட்டணி-இ.தொ.கா. புரிந்துணர்வு என ஒன்று இருந்ததை 1983 பேரினவாதக் கலவரத்தின் பின்பு இ.தொ.கா. தலைவர் கூறினாரே ஒழியக் கூட்டணியினர் அதைப் பற்றிப் பேசவில்லை. ஜயவர்த்தனவும் அதைப்பற்றிப் பேசவில்லை.


தேர்தலில் யூ.என்.பி வெல்வது ஏறத்தாழ உறுதி என்ற நிலையில் கட்சி தாவுவோரால் தனது ஆட்சி கவிழாது என்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன், ஒவ்வொரு யூ.என்.பி. வேட்பாளரிடமும் திகதியிடப்படாத பாராளுமன்றப் பதவி விலகற் கடிதங்களையும் பெற்றிருந்தார். மூன்றிலிரண்டு பெரும்பான்மையோ அதற்கு நெருக்கமான ஒரு பெரும்பான்மையோ கிடைக்கும் பட்சத்தில் ஒரு புதிய அரசியல்யாப்பைக் கொண்டுவர எண்ணியிருந்த ஜயவர்தனவுக்கு ஆறில் ஐந்து பெரும்பான்மை கிட்டிய பின்பு, தன்னை ஒரு பாராளுமன்றப் பெரும்பான்மை மூலம் எளிதிற் கவிழ்க்க இயலாத ஒரு நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதியாக்குவதற்கு ஒரு தடையுமிருக்கவில்லை.

*1977இல் தேர்தல் நடந்தது. தேர்தலில் யூ.என்.பி வெல்லும் வாய்ப்புக்கள் வலுவாக இருந்தான. ஸ்ரீ.ல.சு.கட்சியும் இடதுசாரிகளும் மீண்டும் கூட்டணியாகப் போட்டியிட்டிருந்தால் யூ.என்.பிக்குப் பூரண பெரும்பான்மையை மறுத்திருக்க இயலுமோ என்பது நிச்சயமற்றதாயினும் அவை இணைந்ததுமன்றித் தேர்தல் பிரசாரங்களில் ஸ்ரீ.ல.சு.கட்சி ஒருபுறமும் இடதுசாரி முன்னணியாக இணைந்த சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ற் கட்சியம், ஸ்ரீ.ல.சு.கட்சி அதிருப்திக் குழுவும் கடுமையாக மோதிக் கொண்டமையும் இரண்டு தரப்பினரது ஆதரவாளர்களிடையேயும் அதிருப்தியையும் அவநம்பிக்கையும் ஏற்படுத்தியது.*

பாராளுமன்றத்தில் இரண்டாவது பெரிய கட்சியாகக் கூட்டணியே அமைந்த சூழ்நிலையில், கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கத்திற்கு முன்பு இரண்டு தெரிவுகள் இருந்தன. ஒன்று, 1977ம் ஆண்டுத் தேர்தலில் சுதந்திர தமிழீழத்தைப் பெறுவதற்காகத் தாங்கள் ஆணை கோருவதாகச் சொல்லி போட்டியிட்ட அடிப்படையில் இலங்கைப் பாராளுமன்றச் செயற்பாடுகளில் கூட்டணி பங்காளியல்ல என்று அறிவித்தும், பாராளுமன்றத்தைத் தமிழ் மக்களின் உரிமைகளையும் தேசிய சுயநிர்ணயத்தையும் வலியுறுத்துதற்கான ஒரு களமாக்குவது. மற்றது, வரன்முறையான பிரதான எதிர்க் கட்சியாகச் செயற்பட்டு அரசியல் யாப்பிற்குக் கட்டுப்பட்டுத் தமிழ் மக்களின் உரிமைகட்காகக் குரல் கொடுப்பது. இதில் முதலாவதே கூட்டணியின் வெற்றிக்காகச் செயற்பட்ட இளைஞர் குழுக்களின் எதிர்பார்ப்பாக இருந்தது. அதேவேளை, தமிழ் மக்கள் கூட்டணி தனது தமிழீழ இலக்கை எவ்வாறு வெல்லும் என்று அறிய இயலாத நிலையிலேயே இருந்தனர். தமிழ் மக்கள் தமிழீழத்தை வேண்டியே வாக்களித்தனர் என்பது நிச்சயமற்றது. எனினும் 1977ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்ற வெற்றியைத் தேசிய இன ஒடுக்கலுக்கு எதிராகத் தமிழ் மக்களின் ஏகோபித்த குரல் என்று கொள்வது தகும்.

எவ்வாறாயினும் தமிழ் விடுதலைக் கூட்டணித் தலைவர் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்றமை எவ்வளவு தூரம் அரசியல் ஞானமுடையது என்பது ஒருபுறமிருக்க, அவர் அப் பதவியை ஏற்றதற்குத் தமிழ் மக்களுக்குச் சொன்ன காரணம் நம்பகமானதல்ல. எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியைப் பாவித்து உலகளாவிய முறையில் தமிழ் மக்களின் தேசிய உரிமைக் கோரிக்கைகட்கு ஆதரவு திரட்டுவதே தனது நோக்கம் என்று அவர் சொல்லியபோதும், அதைப் பலர், குறிப்பாக வடக்கின் இளைஞர்கள், நம்பவில்லை. அவர்களுடைய ஐயங்களை வலுவூட்டும் விதமாகவே அவருடைய அரசியல் நடத்தை அமைந்தது.

1977ல் ஜயவர்தன ஆட்சிக்கு வந்த கையோடு, ஸ்ரீ.ல.சு.கட்சியினர் மீதும் ஆதரவாளர்கள் மீதும் யூ.என்.பி



*யாழ்ப்பாணத்தில் ஒரு பாடசாலைக் களியாட்ட விழாவின் போது சில தமிழ் இளைஞர்கட்கும் அங்கு குழப்பம் விளைவித்த பொலிசாருக்கும் ஏற்பட்ட சிறு மோதல் ஏற்படுத்திய பதற்றத்தை அடுத்து கிளறிவிடப்பட்ட வன்முறையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் வேண்டிய போது, ஜயவர்த்தன 'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' என்று கூட்டணித் தலைவருக்குச் சொன்ன பதிலை முழுத் தமிழ்ச் சமூகத்திற்கும் எதிரான சவாலாகவே நோக்க வேண்டியிருந்தது.*

## காரிருள் சூழும் வேளை

குண்டர்கள் பயங்கரமான வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர். அவ்வன்முறை அதற்கு முந்திய எந்தத் தேர்தல் வன்முறையிலும் பார்க்கப் பண்பிலும் பரப்பிலும் பெரிதாயிருந்தது. அவ் வன்முறையைக் கட்டுப்படுத்தப் பொலிஸ் குறுக்கிடவில்லை. அவ்வாறு பொலிஸ் ஒதுங்கி நின்றது புதிய அரசாங்கத்தின் ஆணையின் பேரிலேயே என்பது தெளிவு. அந்த வெறியாட்டத்தைப் பற்றித் தமிழர் கூட்டணித் தலைவர் அதிருப்தி தெரிவித்திருந்தாலும், அவராலோ அவரது கட்சியினராலோ அதைப் பற்றி எதுவுஞ் செய்திருக்க இயலாது. எனினும் அதற்கு ஒரு மாதத்திற்கும் சிறிது பின்னர் தமிழர் மீது பேரினவாத வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. இந்த வன்முறை திட்டமிட்ட ஒன்று என்று கூற இல்லாவிடினும், அதற்குச் சாதகமான ஒரு சூழல் இருந்ததை மறுக்க இயலாது.

யாழ்ப்பாணத்தில் ஒரு பாடசாலைக் களியாட்ட விழாவின் போது சில தமிழ் இளைஞர்கட்கும் அங்கு குழப்பம் விளைவித்த பொலிசாருக்கும் ஏற்பட்ட சிறு மோதல் ஏற்படுத்திய பதற்றத்தை அடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் ஆசிரியர்களும் உட்படச் சிங்களவர்கள் பலர் பஸ்களில் குடாநாட்டை விட்டு வெறியேறியதையடுத்து விஷமத்தனமாகக் கிளறிவிடப்பட்ட வன்முறை கொழும்பிலும் தென்னிலங்கையின் பிற நகரங்களிலும் தமிழருக்கு எதிரான வன்முறையாகப் பரவு முன்னரே அரசாங்கம் உறதியான நடவடிக்கை எடுத்திருக்க இயலும். ஆனால் ஜயவர்தன வேண்டுமென்றே அவ்வாறு செய்யவில்லை. அது மட்டுமன்றி அவ் வன்முறையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் வேண்டிய போது, ஜயவர்த்தன கூறிய பதில் அதிர்ச்சியளித்தது. அவசர காலச் சட்டத்தைப் பிரகடனஞ் செய்யாமலே ஆட்சி நடத்த போவதாக அறிவித்தது மட்டுமன்றிப் 'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' என்று கூட்டணித் தலைவருக்குச் சொன்ன பதிலை முழுத் தமிழ்ச் சமூகத்திற்கும் எதிரான சவாலாகவே நோக்க வேண்டியிருந்தது.

ஜயவர்தனவின் திட்டம் முன்னைய காலத்து அரசாங்கங்களின் திட்டங்கள் அனைத்தையும் விடத் தீர்க்கமான முறையில் இலங்கையின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போவதை வெகு சிலரே அப்போது உணர்ந்திருப்பர். எனினும் தமிழ் மக்களை மிரட்டிப் பணிய வைப்பதும் ஸ்ரீ.ல.சு.கட்சியைச் சீர்குலைப்பதும் இடதுசாரிகளை அரசியலிருந்து ஓரங்கட்டுவதும் இடதுசாரிகளிடம் எஞ்சியிருந்த ஒரே, நம்பகமான ஆனால் ஏலவே பலவீனப்பட்டிருந்த அரசியல் ஆதரவுத் தளமான தொழிற்சங்க இயக்கத்தை முற்றாக முடக்குவதும் அவருடைய வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வழிமுறைளின் முக்கியமான பகுதிகளாக அமைந்தன.

யூ.என்.பி. அரசாங்கத்தின் பாராளுமன்றப் பெரும்பான்மையும் தேர்தல் தோல்வியால் மனந்துவண்டு போயிருந்த ஸ்ரீ.ல.சு.கட்சியினரும் பாராளுமன்ற இடதுசாரிகளும் யூ.என்.பி. அரசாங்கம் அடுத்து வந்த ஒரு வருட காலத்தினுள் எடுக்க இருந்த அதிரடி நடவடிக்கைகளை எதிர்த்து மக்களை அணிதிரட்டக் கூடிய நிலையில் இருக்கவில்லை. பின்னர் எதிர்கட்சிகள் தம்மை மீளக் கட்டியெழுப்பும் வாய்ப்பையும் மறுக்கும் விதமாக அவர்கள் பொதுக் கூட்டங்களைக் கூட நடத்த இயலாதவாறு குழப்புவதற்கு யூ.என்.பி ஆட்சி, ஜே.வி.பியினரைப் பயன்படுத்தியதும் இங்கு கவனிக்கத்தக்கது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் யூ.என்.பி ஆட்சி கொண்டு வரவிருந்த பெரிய பொருளாதாரக் கொள்கை மாற்றத்தைப் பற்றி அதிகம் கவலை காட்டியதாக் கூற இயலாது. அதன் பாராளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன் தனது முதலாவது பாராளுமன்ற உரையில் அரசாங்கத்தின் திறந்த பொருளாதாரக் கொள்கையை வரவேற்றுப் பேசியமை இங்கு கவனிக்கத்தக்கது.

தரப்படுத்தற் கொள்கையிற் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டனவெனினும் மாவட்ட அடிப்படையிலான இட ஒதுக்கீடு தொடர்ந்தது. எனினும் பரீட்சைப் பெறுபேறு அடிப்படையிலான அனுமதிகளின் விகிதாசாரம் அதிகரிக்கப்பட்டமை குடாநாட்டிலும் கொழும்பிலும், முக்கியமாகப் பெரிய பாடசாலைகளின் மாணவர்கட்கு, வரவேற்கத் தக்க ஒரு சலுகையாக அமைந்தாலும், ஒட்டுமொத்தத்தில், யாழ் குடாநாட்டு மாணவர்கட்கு எதிரான பாராபட்சம் தொடர்ந்தது. ஜயவர்தனவின் திட்டம் என்னவென்பதை யூ.என்.பி. அரசாங்கத்தின் முதலாவது ஆண்டின் நிகழ்வுகள் கோடிட்டுக்காட்டிய போதும் 1978ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியல் யாப்பு அதை ஐயத்திற்கு இடமின்றித் தெளிவுபடுத்தியது.

அந்த அரசியல் யாப்பின் மூலம் நிறைவேற்றதிகார சனாதிபதியாகத் தன்னை ஆக்கிக் கொண்ட ஜயவர்தன மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தன்னைத் தன் பதவிக் காலத்தினுள் பதவி விலக்குவதை ஏறத்தாழ இயலாததாக்கிவிட்டார். அதை விடவும், தொகுதிவாரித் தேர்தல் முறை மூலம் தான் பெற்ற பெரும்பான்மை போன்ற ஒன்றை எந்தவொரு கட்சியும் தனித்த நின்று பெற இயலாதவாறு மாவட்ட அடிப்படையில் விகிதாசாரத் தேர்வு முறையையும் அறிமுகப்படுத்தினார். இது சிறிய கட்சிகளுக்கும் சிறுபான்மைச் சமூகங்களுக்கும் ஒரு சில ஆசனங்களை வெல்ல வாய்ப்பளித்தமை ஒரு சாதகமான அம்சம். எனினும், சனாதிபதி பாராளுமன்றத்தை விட அதிகாரம் கொண்டவராக இருந்த ஒரு சூழ்நிலையில், அதன் பெறுமதி கேள்விக்குரியதாகியது. அதை விடப் பிற்காலத்தில், சிறு கட்சிகளின் பிரதிநிதிகள் ஒரு கட்சியுடன் இணைந்து அதற்கும் பெரும்பான்மை வலிமையை வழங்குவதன் மூலம் தங்களுடைய சொந்த நலன்களைப் பேணும் ஒரு சூழ்நிலைய்ும் தோன்றியது.


பாராளுமன்ற உறுப்பினர் கட்சி தாவுதலுக்கு எதிராகவும் விதிகள் வகுக்கப்பட்டன. எனினும் ஒரு பாராளுமன்றப் பெரும்பான்மை மூலம் ஒருவரின் கட்சித்தாவலைச் செல்லுபடியாக்கியதன் மூலம் எதிர்க்கட்சியினர் ஆளுங்கட்சிக்கு மாறுவதை இயலுமாக்கினர். தமிழரசுக் கட்சிக்குள் அமிர்தலிங்கத்தால் ஓரங்கட்டப்பட்ட மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் செ.ராஜதுரையும் பட்டிருப்பு பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினமும் இதன் மூலம் அரசாங்கத்துடன் இணைந்தனர்.

பாராளுமன்றத்தில் இருந்த வலிய பெரும்பான்மையின் உதவியுடன் நிறைவேற்றதிகார சனாதிபதி ஜயவர்தன பல அதிகாரத் துஷ்பிரயோகங்களில் இறங்கினார். அதன் விளைவாக 1978ம் ஆண்டு அரசியல் யாப்பிற் புதிதாகப் புகுத்தப்பட்ட அடிப்படை உரிமைகள் தொடர்பான சனநாயக அம்சங்கள் பயனற்றுப் போனமையைக் காலந் தாழ்த்தியே மக்கள் உணர்ந்தனர்.

புதிய அரசியல் யாப்புடன் சேர்ந்து நாட்டின் திறந்த பொருளாதாரக் கொள்கையும் நடைமுறைக்கு வந்தது. புதிய அரசியல் யாப்பு வழங்கிய நிறைவேற்றதிகாரம் தேசிய பொருளாதார விருத்திக்கு எவ்வாறு ஆப்பு வைத்தது என்பதையும் அக்கொள்கையின் நடைமுறைப்படுத்தல் ஏற்படுத்தக்கூடிய மக்கள் எதிர்ப்பைத் திசைதிருப்புமுகமாக எவ்வாறு தேசிய இனப்பிரச்சினை ஒரு பகை முரண்பாடாகத் திரிக்கப்பட்டது என்பதையம் பின்னர் கவனிப்போம்.

கலையரசன்

# வீடு வரை கனவு, காடு வரை கடன்



அமெரிக்க வங்கிகளின் அகங்காரம் அழிந்த கதையிது. முதலாளித்துவத்தை காப்பாற்ற, சொந்த மக்களை பலி கொடுத்த 'ஐக்கிய அமெரிக்க சோஷலிசக் குடியரசின்' (முதலாளிக்கு மட்டும்) தோற்றம் இது. 'அமெரிக்க கனவு' ஒவ்வொரு அமெரிக்க பிரசையும் சொந்த வீட்டில் வாழ வேண்டுமென்ற கனவு. இன்று சுக்குநூறாக நொறுங்கிப் போய்க் கிடக்கின்றது. அமெரிக்காவில் எழுந்துள்ள நிதி நெருக்கடி பல வங்கிகளை திவாலாக்கிய விவகாரம் பற்றிய உண்மையான தகவல்கள் பல வெகுஜன ஊடகங்களால் தமிழ் மக்களுக்கு மறைக்கப்பட்டதால் எழுந்துள்ள தேவையை ஒட்டி இந்தக் கட்டுரையை எழுத வேண்டியுள்ளது.

ஒரு வீடு வாங்குவது தொடர்பாக நமது நாடுகளுக்கும், அமெரிக்க ஐரோப்பிய நாடுகளுக்குமிடையில் உள்ள வேறுபாடுகளை முதலில் பார்ப்போம். நமது நாடுகளில் (பணக்காரரை விட்டுவிட்டால்) ஓரளவு நல்ல மாத வருமானம் எடுக்கும் நடுத்தர மக்கள், சிறுகச் சிறுக சேர்த்த சேமிப்பு பணத்துடன், தமது சொத்துகள் எதையாவது அடமானம் வைத்து வங்கி கொடுக்கும் கடனையும் வைத்து வாங்குவார்கள். பணக்கார மேற்குலக நாடுகளில் தகைமையற்ற தொழிலாளிக்கும் கிடைக்கும் சம்பளம் சராசரி ஆயிரம் டாலர் ஆகில், அவர் ஒரு லட்சம் டாலர் பெறுமதியான வீட்டை வாங்குவாராகில், அவர் அதற்காக பெற்றுக்கொள்ளும் கடனை 20 அல்லது 30 வருடங்களில் கட்டி முடிப்பார் என்ற எதிர்பார்ப்பில், வங்கிகள் அடமானப் (*Mortgage*) பத்திரத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டு கடன் கொடுக்கின்றன. அந்தக் கடனுக்கு தகுதி பெற நிரந்த வேலை இருப்பது அவசியம் போன்ற பிற நிபந்தனைகள் உள்ளன. நமது நாடுகளுடன் ஒப்பிடும் போது, மேற்குலக நாட்டு பிரசை ஒருவர் தன்னைத் தானே அடமானம் வைத்துக்கொள்கிறார்.

ஐரோப்பாவில் விதிகள் கடுமையாக உள்ளன. ஒரு வீட்டை வாங்கியவர், சில வருடங்களுக்கு பின்னர் விற்றால், இன்னொரு வீடு வாங்கிக் கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். காரணம், கடன் கொடுத்த வங்கிகள் அந்தப்பணம் முழுமையாக தமக்கு வட்டியுடன் வர வேண்டுமென நினைக்கின்றன. ஒருவேளை நிரந்தர வேலை பறிபோனால், வாங்கிய வீட்டை விற்றுவிட்டு, வாடகை வீட்டில் குடியேற வேண்டியிருக்கும். கடன் வாங்கியவர் காலக்கெடுவுக்குள் இறந்தால், வீட்டுக்கடனை வங்கிகள் திரும்பப்பெற ஆயுட்கால காப்புறுதி கட்டியிருக்க வேண்டும். அல்லது அந்த வீட்டில் வசிக்கும் மனைவி, பிள்ளைகள், தொடர்ந்து கட்ட வேண்டும். இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் இந்த விதிகள் கடுமையாக இல்லை.

லண்டனில் எனக்குத் தெரிந்த சிலர், மாதம் 800 பவுன் வருமானம் எடுப்பவர்கள், வாங்கிய வீட்டிற்கு மாதம் 1000 பவுன் *Mortgage* கட்டுவதை பார்த்தேன். அது எப்படி சாத்தியம் என்று கேட்டால், அங்கே சில வங்கி ஊழியர்கள் செய்யும் ஊழலால், அதாவது போலிப் பத்திரங்கள் தயாரித்து, வருமானத்தை கூட்டிக் காட்டி *Mortgage* எடுப்பது தெரிய வந்தது. அமெரிக்காவிலும் அது போன்ற நிலைமை எப்போதும் இருந்து வந்தது. ஆனால் தற்போது எழுந்திருக்கும் நிதி நெருக்கடி, அதன் காரணமாக எழவில்லை. மோசடியே வங்கிகளின் அலுவலக செயல்முறையாக மாறியதன் விளைவு இது. சில வங்கி முகவர்கள் வருமானம் பற்றி எதுவும் கேட்காமலே கடன் கொடுத்த விடயம் தற்போது அம்பலத்திற்கு வந்துள்ளது.

அதற்கு முன்னர் அமெரிக்க வங்கிகளின் அகங்காரம் பற்றிய சிறிய அறிமுகம். முதலாளித்துவ வளர்ச்சியின் உச்சகட்டமாக, அமெரிக்காவில் வங்கிகள் அனைத்து நிறுவனங்களையும் (அது உற்பத்தி துறையாகட்டும், அல்லது சேவைத் துறையாகட்டும்) தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளன. ஒரு கம்பனி நடத்துவதற்காக வங்கியிடமிருந்து பெறப்படும் கடன் (*Liquidity*) மட்டும் இதற்கு காரணமல்ல. பல நிறுவங்களின் பெரும்பான்மை பங்குகளை வங்கிகளே வாங்கி, பிரதிநிதிகளை கொண்டு பங்குதாரர் கூட்டத்தில் தமது செல்வாக்கை நிலைநிறுத்துகின்றன. அப்படித்தான் வீடு கட்டிக் கொடுக்கும் (ரியல் எஸ்டேட்) கம்பனிகளாலும் வங்கிகள் ஆளுமை கொண்டிருந்தன. அந்த அகங்காரமே அவர்களின் வீழ்ச்சிக்கும் காரணமானதை பின்னர் பார்ப்போம்.

**அமெரிக்க திறைசேரி அதிகாரி அறிவித்த 700 பில்லியன் டாலர் உதவி, தமக்கு வேண்டிய வங்கிகள் திவாலாகாமல் தடுக்க வழங்கப்படுகின்றது. பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு (நடுத்தெருவுக்கு வந்த) ஒரு சதம் உதவிகூட இல்லை. அதுவும் பொதுமக்களின் வரிப்பணத்தில் இருந்து வழங்கப்படும் உதவி. இறுதியில் வென்றது முதலாளித்துவம், தோற்றது மக்கள்.**

அனேமாக 2001ம் ஆண்டிற்கு (செப்டம்பர் 11ன் தாக்கம்) பிறகாக, அமெரிக்க மக்கள் அதிகம் செலவளிக்க வைக்க வேண்டும் என்று அமெரிக்க அரசு விரும்பியது. பணம் ஓடித் திரிய வேண்டும் என்பது சந்தை பொருளாதார தாரக மந்திரம். நாம் செலவளிக்கும் ஒவ்வொரு சதமும், எங்கேயோ ஒருவருக்கு வருமானமாக போய்ச் சேருகின்றது, என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அதன்படி, கடன் வழங்கும் விதிகளை தளர்த்த அரசாங்கமும், வங்கிகளும் முன்வந்தன. சந்தேகத்திற்கிடமின்றி இது பலரை கடன் வாங்க வைத்திருக்கும். ஆகவே வழமைக்கு மாறாக, வருமானம் குறைந்தோரும், அல்லது எந்த வருமானமும் இல்லாதவர்களும் வீடுகளை வாங்கத் தொடங்கினர். இதனால் யாருக்கு என்ன லாபம்?

இப்போதுதான் வங்கிகளை திவாலாக்கிய மாபெரும் பங்குச் சந்தை சூதாட்டம் ஆரம்பமாகின்றது. வீடு விற்கும் நிறுவனங்கள் பல்லாயிரக்கணக்கான புதிய வீடுகளைக் கட்டி விற்றுத்தள்ளின (நமது நாடுகளில் 'ரியல் எஸ்டேட் கம்பனி' என்று அறியப்பட்ட). *Mortgage* முறையின் கீழ், ஒருவர் அந்த வீட்டை வாங்கி வங்கியிடம் அடமானம் வைக்கின்றார். அதற்கு வீட்டின் மொத்த விலையை வங்கி ரியல் எஸ்டேட் கம்பனி கையில் கொடுக்கின்றது. அடமானம் வைத்தவரோ, வீட்டின் விலையை மட்டுமல்ல, தரகர் கூலி, சட்டவாக்க கூலி, போன்றவற்றை ரொக்கமாக கடன் என்ற பெயரில் வீடு வாங்கியவரின் தலையில் கட்டிவிடுகின்றது. கடனுக்கு வரும் வட்டி தான் வங்கிகளின் மிகப்பெரிய வருமானம். வழக்கமாக வீட்டு அடமானப் (*Mortgage*) பங்குகளை வங்கிகள் சந்தையில் ஏலம் விடுகின்றன. அதேநேரம் சாதாரண 'வீட்டு சொந்தக்காரர்' மாதாமாதம் கட்டிவரும் வட்டிப் பணத்தை ஆதாயப்பங்காக (*Dividend*) லாபம் பார்க்கின்றன.

பங்குச்சந்தையில் ஒரு பக்கத்தில் சூதாடியே பணம் சம்பாதிப்பவர்கள் இருக்கின்றனர். ஊகவணிகத்தில் கில்லாடிகளான அவர்கள், வீட்டு அடமானப் பங்குகளை அதன் உண்மையான பெறுமதியை விட பலமடங்கு அதிகமாக உயர்த்தினார்கள். பங்குகளின் விலை அதிகரிக்கும் போது மகிழாதவர் யார் இருக்கமுடியும்? இந்த சூதாட்டத்தால் ரியல் எஸ்டேட் கம்பனிகள், முதலீட்டு வங்கிகள், பங்குச்சந்தை தரகர்கள், பங்குதாரர்கள் என்று ஒரு பெரிய கும்பலே பெரும் பணம் புரட்டியது. அமெரிக்காவில் இந்த 'அற்புதம்' நடப்பதைக் கேள்விப்பட்டு, வெளிநாட்டு வங்கிகளும் அமெரிக்க அசையாச் சொத்துகளில் (இங்கே வீடுகள்) முதலிட்டன. அப்படி கடல்கடந்து முதலிட்டு லாபமீட்டிய பெல்ஜிய வங்கியான ***Fortis***, நெதர்லாந்து வங்கியான ***ABN-Amro*** என்பன இன்று நெருக்கடிக்குள் சிக்கி திவாலாகும் நிலையில் அவ்வவ் அரசாங்கங்களால் தேசிய மயமாக்கப் பட்டுள்ளன.

நடந்தது என்ன? அமெரிக்க பங்குச்சந்தையில் நிதி நிறுவனங்கள் எல்லாம் .சேர்ந்து, வீட்டு மனை வியாபாரம் பற்றி பல கட்டுக்கதைகளை அவிழ்த்து விட்டன. விதி தளர்ந்ததால், எந்தவித முன்யோசனையுமின்றி சேர்க்கப்பட்ட மக்களின் தொகையை காட்டித்தான் பங்குகளின் பெறுமதி கூடியது. ஆனால் அது ஒரு கற்பனாவாத பெறுமதியாக இருந்தது. பல வருடங்களாக யாரும் அதனை பொருட் படுத்தவில்லை (பங்குசந்தையில் இதெல்லாம் சகஜம்). ஆனால் கடந்த வருடம்தான் வங்கிகளை எதிர்காலம் பற்றிய பயம் கவ்விக் கொண்டது. எந்த யோசனையுமின்றி, இத்தனை கோடி டாலர்களை அள்ளிக் கொடுத்திருக்கிறோமே, அது மீண்டும் எமது கைக்கு வருமா? என்று எழுந்த சந்தேகம் வங்கிகளை திவாலாக்கியது. பொய், புரட்டு, மோசடி நீண்ட நாளைக்கு நிலைக்க முடியாது. அதற்கு அவர்களே பலியாகிப் போனார்கள்.

இப்போது என்ன நடக்கிறது? குற்றம் செய்தவர்கள் யாரும் தண்டிக்கப்படவில்லை. மாறாக வெகுமானம் வழங்கப்பட்டுள்ளது. ஆம், அமெரிக்க திறைசேரி அதிகாரி அறிவித்த 700 பில்லியன் டாலர் உதவி, தமக்கு வேண்டிய வங்கிகள் திவாலாகாமல் தடுக்க வழங்கப்படுகின்றது. பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு (வீடு வாங்கி நடுத்தெருவுக்கு வந்தவர்கள்) ஒரு சதம் உதவி கூட இல்லை. அதுவும் பொதுமக்களின் வரிப்பணத்தில் இருந்து வழங்கப்படும் உதவி. இறுதியில் வென்றது முதலாளித்துவம், தோற்றது மக்கள்.

பொருளாதார நெருக்கடி இப்போது தான் ஏற்படுவதல்ல. முன்னர் ஒருமுறை தென் கொரிய கார் உற்பத்திப் பெருக்கத்தால், வாங்குவார் அற்று தேங்கிப்போய், அது உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியை உருவாக்கியது. அப்போது கார் கம்பனிகளை தென்கொரிய அரசு தேசிய மயமாக்குவதை தடுத்தது ***I.M.F.*** (அதுவும் ஒரு அமெரிக்க நிதி நிறுவனம்).

அமெரிக்க அரசாங்கம் வழங்கும் நிதியுதவி எதற்கு பயன்படுத்தப்பட போகிறது? நிச்சயமாக பங்குகளின் பெறுமதியை மீண்டும் அதிகரிக்க வைக்குமென்பதால், பங்குதாரர்கள் நிம்மதிப்பெருமூச்சு விடலாம். (இல்லாவிட்டால் தெருவுக்கு வரவேண்டியிருக்கும்) இந்த அரச திறைசேரி நிதியை ஆதாயப்பங்கு வழங்கவும், அதைவிட மேல்மட்ட மானேஜர்களின் போனஸ் கொடுக்கவும் பயன்படுத்தப்படாது என்பது என்ன நிச்சயம்?

அப்பாவித்தனமாக நெருக்கடியில் சிக்கி வீடுகளை இழந்து நிரந்தர கடனாளிகளாகிய மக்களின் கண்ணீரை துடைப்பதை விட, முதலாளிகளின் செல்வம் குறையக் கூடாது என்பதிலே தான் அமெரிக்க அரசுக்கு அக்கறை.

***நன்றி: 'காசு ஒரு பிசாசு' :கலையரசன்.***

---

08 >>> வட்டுக்கோட்டையில் இருந்து...

இருந்தது. அதேபோன்று ஒரு நாட்டின் ஆளும் வர்க்க அரசு யந்திரத்தின் பிரதான பகுதி என்ற அடிப்படையில் தமக்குச் சவாலான ஒரு விடுதலைக்கான ராணுவக் கட்டமைப்பு அதுவும் தமிழர்கள் மத்தியில் பிரிவினைக் கோரிக்கையுடன் வளர்ந்து நிற்பதை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை.

ஏனெனில் ஏற்கனவே சிங்கள மக்கள் மத்தியில் இத்தகையதொரு ஆயுதம் தாங்கிய போராட்டம் உருவாகிய போது ஒரு தடவை மட்டுமன்றி இரு தடவைகளும் அவற்றைத் தோற்கடித்து சிங்கள இளைஞர்களையும் மக்களையும் அழித்தொழித்ததும் இதே ராணுவம் என்பதை மறந்துவிட முடியாது. அதேபோன்று இந்தியா அமெரிக்க மேற்குலக நாடுகளுக்கும் இனிமேல் புலிகள் இயக்கமும் அவர்களது ராணுவ வல்லமையும் தேவை இல்லை என்பதுடன் அதன் எதிர்கால அபாயங்களையும் முன் உணர்ந்ததாலும் இலங்கை அரசாங்கத்தரப்பிற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிவந்தன. ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் சர்வதேச கடற்பரப்பில் ஆயுத இறக்கலிலும், ஏனைய சட்டபூர்வமற்ற வர்த்தக செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்த புலிகளின் பத்து வரையான கப்பல்கள் ஒன்றன் பின் ஒன்றாக இலங்கைக் கடற்படையால் மூழ்கடிக்கப்பட்டன. அவற்றை செய்மதி மூலம் அடையாளம் காட்டியும் உளவுத் தகவல்கள் மூலமும் அழிக்க உதவியவர்கள் அமெரிக்காவும் இந்தியாவும் என்பது பகிரங்கமானதாகும்.

மேற்கூறி சூழலில் அரசாங்கம் பேச்சுவார்த்தை என்ற நாடகத்தையும் தொடர்ந்து வந்தது. புலிகளும் அதில் பங்கேற்றுத் தமது பாத்திரத்திற்கு நடித்தனர். பேச்சுவார்த்தைகளில் முக்கிய பங்கு கொண்டு வந்தவரான அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கடும் சுகவீனத்திற்கு ஆளாகி பேச்சு வார்த்தையில் பங்குகொள்ள முடியாதவராகிக் கொண்டார். அவ்விடத்திற்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமை தாங்கி வந்தமை குறிப்பிட வேண்டியதாகும். பேச்சுவார்த்தை வெறுமனே இழுத்தடித்துச் சென்ற அரசாங்கத்தின் பிரதான இலக்கு போர்முனை மூலமான ராணுவ வெற்றியை நோக்கியதாகவே இருந்தது. அதன் காரணமாக 2008ன் ஜனவரியில் இருந்து போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து அரசாங்கம் உத்தியோகபூர்வமாக விலகிக் கொள்வதாக அறிவித்துக் கொண்டது. அதன் மூலம் 2002ம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருந்துவந்த பெயரளவிலும் மக்களின் தேவைகளுக்கும் சாதகமாக இருந்து வந்த போர் நிறுத்த உடன்பாடு அரசாங்கத்தால் வாபஸ் பெறப்பட்டது. இப்போர் நிறுத்த ஒப்பந்த விலகலானது அரசாங்கத்தின் யுத்தத்தைத் தீவிரமாகவும் முழுமையாகவும் முன்னெடுப்பதற்கான அறிவிப்பைச் சுட்டிக் காட்டுவதாக அமைந்து கொண்டது. மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகிய மூன்று வருடங்களில் அவரது வழிகாட்டலிலும் அவர் தம்பியான பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபாய ராஜபக்ஷ ராணுவத் தளபதி சரத் பொன்சேகா மற்றும் ராணுவ உயர் அதிகாரிகளைக் கொண்ட தேசிய பாதுகாப்புச் சபையானது ஒரு முழுமையான யுத்தத்திற்குத் திட்டமிட்டுச் செயலாற்றி நின்றது. இதனை நிறைவேற்ற ஏற்கனவே இருந்து வந்த கூட்டுப்படைச் செயலகம் தீவிரமான செயற்பாட்டை முன்னெடுத்து வந்தது. அவையாவும் ஒரு நாட்டின் ராணுவம் என்பதற்கும் அப்பால் பேரினவாத ராணுவமாகவும் அதன் அடிப்படையிலான ஒடுக்குமுறைகளை முன்னெடுப்பதாகவும் இருந்தது.

அதேவேளை புலிகள் இயக்கமும் 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்பதன் கீழ் விட்டுக்கொடுக்காத போராக போரை தாம் முன்னெடுப்பதாகக் கூறி நின்றது. இருப்பினும் புலிகளால் ஏற்கனவே ராணுவத்திடம் இழக்கப்பட்ட ஒரு சிறு பிரதேசம் கூட மீளவும் புலிகளால் கைப்பற்றப்படவில்லை. அதேவேளை ஆயுத வலிமை அதிகரித்த அளவுக்கு ஆட்கள் வலிமை அதிகரிக்கவில்லை. இதனால் கட்டாயப்படுத்தி இளைஞர் யுவதிகளை புலிகள் இயக்கத்தில் இணைக்கும் நடவடிக்கைகளை ஒரு வேலைத் திட்டமாகவே புலிகள் முன்னெடுத்தனர். இதனால் வன்னியில் வாழ்ந்து வந்த மக்களுக்கும் புலிகளுக்குமிடையிலான முரண்பாடும் முறுகலும் அதிகரிக்க ஆரம்பித்தன. மேலும் கிளிநொச்சியை நோக்கிய படைகளின் முன்னேற்றமும் புலிகளின் பின்வாங்கலும் பற்றிய பார்வையினை அடுத்த தொடரில் நோக்குவோம்.

# சம்பூர் ஒப்பந்தம் மன்மோகன் வரவை உறுதிப்படுத்துமா?



2005ம் ஆண்டிலிருந்தே சம்பூரில் ஓர் அனல் மின் நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வர்த்தக ரீதியிலும், தொழில்நுட்ப ரீதியிலும் சர்ச்சையாயிருந்த சம்பூர் மின் நிலைய நிர்மாணம் சுற்றுச்சூழல் பாதிப்பு பற்றியும் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது. அத்துடன் அதன் அமைவிடம் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த பாரம்பரிய பூமி என்பதும் முக்கிய பிரச்சினையாக உள்ளது.

இவ்வாறான சூழலில் 8 வருடங்களின் பின் 2013 ஒக்டோபர், 8ம் திகதி இலங்கை மின்சார சபைக்கும், இந்திய தேசிய அனல் மின்சாரக் கம்பனிக்குமிடையே ஒப்பந்தம் கைச்சாத்தானது. ஒப்பந்தம் கைச்சாத்தான சமயம் இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்சித்தும் இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிசும் உடன் இருந்தனர். நவம்பர் மாதம் கொழும்பில் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாகாநாட்டில் இந்தியப் பிரதமர் பங்குகொள்வதை உறுதி செய்யுமுகமாக இந்த ஒப்பந்தம் அவசர அவசரமாக இந்தியாவுக்கு சாதகமான முறையில் கைச்சாத்திடப்பட்டதாக குற்றச்சாட்டுகள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

2006இல் இராணுவ நடவடிக்கை மூலம் 1240 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன. அப்போது சம்பூரில் 9600 ஏக்கர் காணி அதி உயர் பாதுகாப்பு வலயமாக அரசு பிரகனடப்படுத்தியது. அதி உயர் பாதுகாப்பு வலையத்திற்கு அருகில் உள்ள பகுதிகளிலிருந்தும் மக்களை அப்புறப்படுத்துவது வட-கிழக்கைப் பொறுத்த மட்டில் சாதாரண நிகழ்வு. சம்பூரில் குடியிருப்புக்கள், விவசாயக் காணிகள், குளங்கள், மீன்பிடித் துறைகள், கோவில்கள், பொதுக் கட்டிடங்கள், பாடசாலைகள் யாவும் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ளன.

மக்களின் 540 ஏக்கர் நிலம் நிலக்கரி மின் நிலையத்திற்கும் 818 ஏக்கர் காணிகள் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்பட உள்ளது. இதன் முழு வேளைகளையும் இந்தியாவே மேற்கொள்ளும். அத்துடன் சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட பல்தேசியக் கம்பனிகளும் முதலிடும். மின் வலு, மின் சக்தி சம்பந்தப்பட்ட விடயங்களில் நிபுணத்துவ அறிவுடைய தேசிய மின் பாவனையாளர் இயக்கத்தின் செயலாளர் பந்துல சந்திரசேகர கருத்து தெரிவிக்கையில் '50 கோடி அமெரிக்க டொலர் (இலஙகை நாணயப்படி 675 கோடி ரூபாய்) பெறுமதியான சம்பூர் அனல் மின் நிலையம் செயற்படத் தொடங்கியதும் இலங்கை வருடந்தோறும் 260ல் இருந்து 490 கோடி ரூபாய் நட்டத்தை எதிர்கொள்ளும்' என்கிறார்.

பாவனையாளர் ஒவ்வொருவரும் வருடந்தோறும் மேலதிக தீர்வையாக குறைந்தது 1525 ரூபாவை செலுத்த வேண்டியேற்படும். சம்பூர் திட்டமானது ஒரு் கொள்ளை எனக் குறிப்பிடும் திரு.சந்திரசேகரா தேசிய மின்பாவனையாளர் இயக்கம் மின்சாரத்துறையைச் சேர்ந்த நிபுணர்களால் மேற்கொண்ட ஆய்வுகளின்படி மின் நிலையத்தின் செயுற்திறனானது 33 வீதமாகும். ஆனால் திட்ட சாத்தியக் கூற்று அறிக்கை செயற்திறன் 40 வீதமாயிருக்கும் என்று கூறுகிறது. எனவே இதன் மூலம் வருடந்தோறும் 490 கோடி ரூபாய் நட்டமேற்படும்.

'எமது ஆய்வின்படி சாம்பூர் அனல் மின் நிலையத்தின் வருடாந்த பராமரிப்பு செலவு 3 கோடி 25 இலட்சம் அமெரிக்க டொலர்களாகும். ஆனால் உடன்படிக்கையில் 2கோடி 5 இலட்சம் மட்டுமே பராமரிப்பு செலவு எனக் குறிப்பிட்டுள்ளது. இதன் பிரகாரம் பராமரிப்பு செலவு வருடந்தோறும் 156 கோடி ரூபாவால் அதிகரிக்கும். மேலும் திட்டத்தின் முதலீட்டிற்கான வருமானக் கொடுப்பனவானது வருடந்தோறும் 18 வீதமாயிருக்கும். இது இலங்கைக்கு சாதகமற்றதாக விளங்கப் போகிறது. தற்போது சந்தையில் நிலவும் வருமானக் கொடுப்பனவானது 12 வீதமாய் உள்ளதும் கவனிக்கத்தக்கது. முதலீட்டை இலங்கை 12 வீதத்தில் மீளளிக்குமானால் நட்டம் 120 கோடி ரூபாயளவில் இருக்குமென்கிறார் சந்திரசேகர.

மேலும் வலுக் கொள்வனவு உடன்படிக்கையில் திட்டத்திற்கு முதலீட்டு மூலதனம் எவ்வளவு எனக் குறிப்பிடப்படவில்லை. உடன்படிக்கையில் ஒரு பகுதி நிரப்பப்படாமல் வெற்றிடமாகவுள்ளது. தனிப்பட்ட லாபங்களுக்காக திருட்டுத்தனமாக மூலதன முதலீட்டை அதிகரிப்பதற்கு இது வழி ஏற்படுத்துகிறது. நாட்டின் நலனைக் கருத்திற்கொள்ளாமல் சக்தி, வலு அமைச்சும் இலங்கை மின்சார சபையானதும் இரண்டு உயர் அதிகாரிகளும் மேற்கொண்ட தன்னிச்சையான தீர்மானத்தால் இலங்கை மின்சார சபைக்கு வருடந்தோறும் 763 கோடி ரூபாய் செலவு ஏற்படும் என திரு. சந்திரசேகரா கூறுகிறார். இந்த ஒப்பந்தத்தை இலங்கை மின்சார சபைப் பொது முகாமையாளர் பார்க்கவோ அங்கீகரிக்கவோ இல்லையென்பதுவும் கவனிக்கப்படல் வேண்டும்.

மிக அவசரமாக ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டதற்கான காரணம் மன்மோகன்சிங்கை நவம்பரில் இடம்பெறும் பொதுநலவாய தலைவர்கள் மகாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஊக்கமளிப்பதாக மட்டுமே இருக்க முடியும் என பெயர் குறிப்பிட விரும்பாத நிபுணர்கள் கருதுகின்றனர். இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்களும் திரு.சந்திரசேகரா எழுப்பியுள்ள பிரச்சினைகள் கவனிக்கப்பட வேண்டியவை என்று கூறுகின்றனர். சக்தி வலுவின் துறைசார் நிபுணர்கள் ஆரம்பத்திலிருந்து இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது வரையான காலப் பகுதிவரை பாரிய அளவில் இந்தியாவிற்கு சாதகமாகவே இருந்ததென்பதை சுயாதீனமான விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென்றும் கூறுகின்றனர்.

இவ்வளவும் நடக்க நமது தமிழ் தேசிய பாதுகாவலர்கள் இதுப் பற்றி மற்ந்தும் வாய்த்திறப்பதில்லை. ஓட்டு பொறுக்கும் நேரம் தவிர்த்து இந்திய நலன் என்று வரும்போது பாதிக்கப்படும் தமிழர்கள் தமிழர்களாக இவர்களுக்கு தெரிவதில்லை. இந்த இந்திய அடிமை விசுவாசிகளிடம் தமிழர்கள் எதையும் எதிர்ப்பார்க்க நியாயமில்லை.

ஸ்ரீ

# சீனாவில் தேசிய இனங்களுக்கான சுயாட்சி அமைப்புகள்



1949ல் தோழர் மாஓ சேதுங் தலைமையில் சீன மக்கள் குடியரசு அமைந்த அன்றிலிருந்து சீனா சோஷலிசப் பாதையில் முன்னேற்றங்களைக் கண்டு வந்தது. அவற்றில் ஒன்றாக அந் நாட்டின் தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் தீர்வுக்குக் கொண்டுவரப்பட்டன. அரசியலமைப்பின் வாயிலாக, ஒற்றையாட்சியின் கீழ்த் தேசிய இனங்களுக்கான பிராந்திய சுயாட்சி அமைப்புக்கள் நிறுவப்பட்டன. சுயாட்சி அமைப்புச் சட்டத்தின் முகவுரையில் 'சீனா சகல தேசிய இனங்களாலும் கூட்டாக உருவாக்கப்பட்ட ஒற்றையாட்சியுடன் கூடிய பல்லின அரசு' என்றே கூறப்பட்டுள்ளது. சகல தேசிய இனங்களும் சமமானவை என்றே சீன அரசியலமைப்புக் கூறுகிறது.

சீனாவில் 55 தேசிய சிறுபான்மை இனங்கள் இருந்து வருகின்றன. பல பிரதேசங்களில் வெவ்வேறு இனங்களாக வும் பல்வேறு மொழிகள் பேசுவோராகவும் இருந்துவரும் அவர்களின் சனத்தொகை 1985ல் ஆறுகோடி எழுபது இலட்சமாகும். இது அப்போதைய சீனச் சனத்தொகை யான 100 கோடியில் 6.7 சதவீதமாயிருந்தது. சீனாவில் 90 சதவீதத்திற்கு மேலானவர்கள் ஹான் பெரும்பான்மை இனத்தவர்கள் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

சீனாவின் தேசிய சிறுபான்மை இனத்தவரின் 1985ம் ஆண்டுச் சனத்தொகை 1949ம் ஆண்டினதிலும் இரு மடங்காகும். அப்போது திபெத்திய தேசிய இனத்தவர்களின் தொகை முப்பத்தெட்டு இலட்சத்து எழுபதாயிரம். அவர்களில் 20 இலட்சம் பேர் மட்டுமே திபெத் சுயாட்சிப் பிரதேசத்தில் வாழ்ந்தனர். ஏனையோர் நாட்டின் பிற பிரதேசங்களில் வாழ்ந்தனர். 1964இல், 10 இலட்சத்திற்கு மேற்பட்ட சனத்தொகை கொண்ட சிறுபான்மை இனங்கள் 10 இருந்தன. அவ்வெண்ணிக்கை 1982ல் 15 ஆகியது. ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட சனத்தொகை கொண்ட 13 சிறுபான்மை இனங்களும் 10,000க்கு மேற்பட்ட சனத்தொகை கொண்ட 17 இனங்களும் இருந்தன. இப்போதும் அவை வளர் நிலையிலேயே இருந்து வருகின்றன. உதாரணமாக, 1949ல் சீனா விடுதலை அடைந்தபோது எட்டு லட்சத்து முப்பதினாயிரம் சனத் தொகையை கொண்டிருந்த மொங்கோலிய இனத்தவரின் சனத்தொகை 1985ல் முப்பத்து நான்கு இலட்சமாக அதிகரித்தது. ஹெசான் இனத்தவரின் எண்ணிக்கை 300ல் இருந்து 1400 ஆக அதிகரித்தது.

திபேத் சுயாட்சிப் பிரதேசம் 12 இலட்சம் சதுர கி.மீ. பரப்புடையது. இது சீனாவின் நிலப்பரப்பில் எட்டில் ஒன்றாகும். சீனாவிலேயே அதிகளவான செம்புப் படிவங்கள் திபேத்தில் உள்ளன. உள் மொங்கோலியாவிற்கு 4221 கி.மீ நீண்ட சர்வதேச எல்லையுண்டு. அதன் நிலப்பரப்பு 11 இலட்சத்து 80 ஆயிரம் சதுர கி.மீ. இது சீனாவின் மொத்த நிலப்பரப்பில் 12.3 சதவீதமாகும். இங்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆறுகளும், ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏரிகளும் உள்ளன. உள் மொங்கோலியா 35 நாடுகளுடனும் பிராந்தியங்களுடனும் பொருளாதாரத் தொடர்புகளைக் கொண்டுள்ளது. அங்கு இரும்புக் கனிமம் கூடுதலாக இருந்து வருகிறது. உள் மொங்கோலியா சீனாவின் சுயாட்சிப் பிரதேசங்களில் ஒன்றாகும். சிங்கியாங்-உய்குர் சுயாட்சிப் பிரதேசம் 1955ல் உருவாக்கப்பட்டது. அதன் நிலப்பரப்பு 16 இலட்சம் சதுர கி.மீ. அது நாட்டின் நிலப்பரப்பில் ஆறில் ஒன்றாகும். அங்கு 1985ல் 1 கோடி 28 இலட்சம் பேர் வாழ்ந்தனர். அவர்களில் 50 இலட்சம் பேர் உய்குர் இனத்தவராவர். 50 இலட்சம்பேர் ஹான் இனத்தவர். ஏனையோர் கசாக், மொங்கோலிய, உஸ்பெக், தஜிக், ரசிய, மஞ்சு உட்பட ஏனைய இனத்தவராவர்.

நமது நாட்டில் வடக்கு கிழக்கை இணைத்தால் நீண்ட கடல் எல்லையைத் தமிழர்களும், முஸ்லிம்களும் பெற்றுவிடுவார்கள் எனப் பேரினவாதம் காணி அதிகாரங்களை மறுக்கையில், எல்லைப் பகுதிகளில் உள்ள சீனாவில் சுயாட்சி அமைப்புகளுக்கு நியாயமான அளவு அதிகாரங்கள் ஒற்றை யாட்சியின் கீழேயே வழங்கப்பட்டுள்ளன. சீனாவின் சுயாட்சிக்கான சட்டம் சீன அரசியல் யாப்பின் ஒரு பகுதியென அதன் முதலாவது சரத்து கூறுகிறது. எங்கெல்லாம் தேசிய சிறுபான்மையினர் செறிந்து வாழ்கின்றனரோ அங்கெல்லாம் பிரதேச சுயாட்சி செயற்படுத்தப்படுமென இரண்டாவது சரத்து கூறுகிறது.

**சீனாவில் 55 தேசிய சிறுபான்மை இனங்கள் இருந்து வருகின்றன. 1985ல் இது அப்போதைய சீனச் சனத்தொகை யான 100 கோடியில் 6.7 சதவீதமாயிருந்தது.**

ஒரு சுயாட்சி அமைப்பின் தலைவர் அந்த சுயாட்சி அமைப்பில் வசிக்கும் சிறுபான்மை இனத்தவராய் இருத்தல் வேண்டும். வேறு இனங்கள் அப் பிரதேசத்தில் வசிக்கும் பட்சத்தில் இரண்டாவது பெரிய சிறுபான்மை இனத்தவர் உப-தலைவராய் இருப்பார். 20வது சரத்தின்படி மத்திய அரசினால் ஏற்படுத்தப்படும் சட்டங்கள் குறித்து எந்த ஒரு சுயாட்சி அமைப்பிற்காவது திருப்தி இல்லாவிடில், மத்திய அரசிற்கு அறிவித்து உரிய திருத்தங்களுடன் அதைச் செயற்படுத்தலாம். மத்திய அரசின் அனுமதியுடன் அதைச் செயற்படுத்தாமலும் விடலாம். உதாரணத்திற்கு, சீனாவில் பெரும்பான்மை இனத்தவரான ஹான் இனத்தவர் ஒரு குடும்பத்திற்கு ஒரு பிள்ளையை மட்டுமே பெறலாம் எனும் கட்டுப்பாடுள்ளது. ஆனால் சிறுபான்மை இனத்தவர்கட்கு இவ்விதி பொருந்தாது. சில சிறுபான்மை இனத்தவர்கட்கு ஒரு குடும்பத்திற்கு இரண்டு பிள்ளைகள் என்ற விதி உள்ளது.

நமது நாட்டில் மாகாண சபைக்குத் தனியான பொலீஸ் அமைப்பு இருக்கக் கூடாது எனப் பேரினவாதிகள் இனவெறியைக் கிளப்பியுள்ள நிலையில் சீனாவின் பிராந்திய சுயாட்சி சட்டத்தின் 24வது சரத்து, தேசிய சுயாட்சி நடைமுறையில் உள்ள பகுதிகளில் அரசாங்கத்தின் இராணுவ முறைமைக்கு அமைவாகவும், உள்ளூர் நடைமுறைத் தேவைகளுக்கு ஏற்புடையதாகவும், மத்திய அரசின் அனுமதியுடன் சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்த உள்ளூரில் பொதுப்பாதுகாப்பு படையை உருவாக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது.


28வது சரத்தின் படி தேசிய சுயாட்சி நிலவும் பகுதிகளில் புற்தரைகளையும் காடுகளையும் பேணவும் மரங்களையும் புற்தரைகளையும் வளர்க்கவும் சுயாட்சி அமைப்பு ஒழுங்கு செய்வதுடன் அவற்றை ஊக்குவிக்கவும் வேண்டும். புற்தரைகளையோ, காடுகளையோ எவ்வகையிலும் நாசமாக்க எந்த ஓர் அமைப்பிற்கும் தனி மனிதருக்கும் அனுமதி இல்லை. தேசிய சுயாட்சிப் பகுதிகள், மத்திய அரசின் அனுமதியுடன், தம் எல்லையோரமாயுள்ள அந்நிய நாடுகளுடன் எல்லைக்குக் குறக்கான வர்த்தகத்தை மேற்கொள்ளலாம். ஒரு தேசிய சுயாட்சி அமைப்பின் செலவீனங்கள் வருமானத்தை விட அதிகமானால் குறித்த சுயாட்சி அமைப்பிற்கு மேல்மட்டத்தில் உள்ள திணைக்களம் நிதி உதவி வழங்க வேண்டும். சிறுபான்மை இன மாணவர்கள் அதிகம்ாய் உள்ள பாடசாலைகளில் அவர்களின் சொந்த மொழியிலான பாட நூல்கள் பயன்பட வேண்டும். அவர்களின் மொழியிலேயே கல்வி வழங்கப்பட வேண்டும்.

38வது சரத்தின் படி, தேசிய சுயாட்சிப் பிரதேசங்கள் தத்தமது இலக்கியத்தையும் கலையையும் சுதந்திரமாக வளர்க்க அனுமதிகப்படும். அச்சகங்கள், வெளியீடுகள், வானொலி, ஒலி பரப்பு, சினிமா, கைத்தொழில், தொலைக்காட்சி, ஏனைய கலாசார நிகழ்வுகள் அனைத்தையும் கொண்டிருக்க அவை உரிமையுடையவை. 47வது சரத்தின் பிரகாரம் வழக்குகள் விசாரிக்கப்படும் போதும், சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யும்போதும் குறித்த பிரதேசத்தில் பயன்படுத்தப்படும் மொழியிலேயே அவை மேற்கொள்ப்படும். வேறு மொழி பேசுவோர் ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டால் அவரவர் மொழியிலேயே வாக்குமூலம் வழங்க அனுமதிக்கப்படுவர். பெரும்பான்மையினரான ஹான் இனக் கட்சி ஊழியர்கள் தாங்கள் செயற்படும் பிரதேசங்களிற் பேசப்படும் மொழியைக் கற்பது கட்டாயமானதுமாகும்.

இலங்கையில் தற்போது சுயாட்சி, உள்ளக சுயநிர்ணய உரிமை என்றெல்லாம் பேசப்படுகின்ற நிலையில் ஒற்றையாட்சி அமைப்பை கொண்ட சீனாவில் நடைமுறையில் உள்ள பிரதேச சுயாட்சி அமைப்பு முறைபற்றி மக்களுக்கு ஒரு தெளிவூட்டல் அவசியமானதாகும். தெற்கிலே சிங்கள பௌத்த பேரினவாதிகள் த்ம்மைச் சீனாவிற்கு நெருக்கமானவர்களாகவும் நம்பிக்கைக்கு உரியவர்களாகவும் காட்டிவருகின்றனர். ஆனால் சீனாவில் ஒற்றையாட்சியின் கீழ் தேசிய இனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிராந்திய சுயாட்சி முறை பற்றியும் அவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பற்றியும் காணவும் பேசவும் மறுத்து வருகின்றனர்.

அதே போன்று, வடக்கு கிழக்கிலே தமிழ்த் தேசியவாதிகள் என்போர் சீனாவின் தேசிய இனங்கள் பிரதேச சுயாட்சி அமைப்பில் எவ்வாறு வாழ்ந்து வருகின்றன எனக் காணமறுத்துச் சீன எதிர்ப்பு நிலைப்பாட்டுடன் இருந்துவருகிறார்கள். அவர்களிடையே இடதுசாரி நோக்கில் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வை வேண்டி நிற்கும் ஒருவர் சீனாவில் தேசிய இனங்கள் பற்றியும் அங்குள்ள பிராந்திய சுயாட்சி முறைமைகள் பற்றியும் புரிந்து கொள்வது பயன்தரும்.

# மகத்தான 1917 ஒக்ரோபர் புரட்சிபற்றி தோழர் மாவோவின் உரையிலிருந்து...



நமது புரட்சிகர ஆசான் லெனின் மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டியதைப் போல, நாற்பதாண்டுகளுக்கு முன்பு சோவியத் மக்களால் நடத்தப்பட்ட மாபெரும் புரட்சி உலக வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை துவக்கி வைத்தது. வரலாற்று ரீதியாக, பலவகையான புரட்சிகள் நடந்துள்ளன, ஆனால் அக்டோபர் சோசலிசப் புரட்சியுடன் அவை எவற்றையும் ஒப்பிடமுடியாது.

நமது புரட்சிகர ஆசான் லெனின் மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டியதைப் போல, நாற்பதாண்டுகளுக்கு முன்பு சோவியத் மக்களால் நடத்தப்பட்ட மாபெரும் புரட்சி உலக வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை துவக்கி வைத்தது. வரலாற்று ரீதியாக, பலவகையான புரட்சிகள் நடந்துள்ளன, ஆனால் அக்டோ பர் சோசலிசப் புரட்சியுடன் அவை எவற் றையும் ஒப்பிடமுடியாது.



பல ஆயிரம் ஆண்டுகளாக, உலகெங்கும் உள்ள உழைக்கும் மக்களும், முற்போக்கு மனித இனத்தவர் அனைவரும் மனிதனை மனிதன் சுரண்டுவது இல்லாத ஒரு சமுதாயத்தைக் கட்டியமைப்பது பற்றி கனவு கண்டு வந்திருக்கிறார்கள். அக்டோபர் புரட்சியின் மூலம் உலகப் பரப்பின் ஆறில் ஒரு பகுதியில் முதற் முறையாக இக்கனவு நனவாகியது. நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் இன்றி, மக்கள் ஒரு சுதந்திரமான, மகிழ்ச்சியான புதிய வாழ்க்கையைத் திட்டமிட்ட வகையில் கட்டியமைக்கக்கூடிய முழுமையான தகுதி பெற்றிருக்கிறார்கள் என்பதை இப்புரட்சி நிரூபிக்கிறது. ஏகாதிபத்திய ஒடுக்குமுறை இல்லையெனில், உலகில் உள்ள பல்வேறு நாடுகள் ஒன்று சேர்ந்து நட்போடு வாழ முழுமையான தகுதி படைத்திருக்கின்றன என்பதையும் இது நிரூபிக்கிறது.

கடந்த நாற்பதாண்டுகளில் (1917-1957) சோவியத் மக்கள் ஒரு கடினமான பாதையில் பயணம் செய்து வந்திருக்கிறார்கள். உலகின் முதலாவது சோசலிசக் குடியரசை அழித்துவிட ஏகாதிபத்தியவாதிகள் அனைத்து வழிகளிலும் முயற்சித்தார்கள். சோவியத் ஒன்றியத்தின் எதிரிகள் சோவியத் ஒன்றியத்தைவிடப் பலம் வாய்ந்தவர்களாக சிறிதுகாலம் தோன்றினார்கள். அதற்கு எதிராக இரண்டு முறை ஆயுதத் தாக்குதல் தொடுத்தார்கள். ஆனால் துணிச்சல் மிக்க சோவியத் மக்கள் புகழ்மிக்க கம்யூனிஸ்டுக் கட்சியினர் தலைமையில் ஆக்கிரமிப்பாளர்களின் தாக்குதல்களை முற்று முழுக்க முறியடித்தார்கள் (கைதட்டல்கள்).

சோவியத் ஒன்றியம் வெல்லப்பட முடியாததாக இருந்து வருகின்றது. ஏனெனில் அந்நாட்டில், முதலாளித்துவ அமைப்பை அகற்றி சோசலிச அமைப்பு வந்துள்ளது. சுரண்டும் வர்க்கங்களின் சர்வாதிகாரத்தை அகற்றி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் வந்துள்ளது. முதலாளித்துவ நாடுகளால் இயலாத வேகத்தில் அது தனது சமூக உற்பத்திச் சக்திகளை வளர்த்து வருகிறது. பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை உண்மையிலேயே கடைப்பிடிக்கக் கூடியதாகவும், தேசிய ஒடுக்குமுறையை உண்மையிலேயே எதிர்க்கக் கூடியதாகவும், ஒடுக்கப்பட்ட நாடுகள் தம்மைத்தாமே விடுவித்துக் கொள்ள உதவக் கூடியதாகவும் இந்நாடு இருந்து வருகிறது. அத்தகைய ஒரு நாடு, சொந்த மக்களின் உற்சாகமான ஆதரவையும் உலகெங்கும் உள்ள பிற நாடுகள் அனைத்தின் மக்களுடைய உற்சாகமான ஆதரவையும் பெற்று வருகிறது. நாடுகளின் வரலாற்றில் இதற்கு ஈடு இணையற்ற அளவில், சோவியத் ஒன்றியம் இவ்விருவகையான ஆதரவையும் பெற்று வருகிறது.

கடந்த நாற்பதாண்டுகளில் சோவியத் ஒன்றியத்தின் தோற்றம் முழுவதுமாக மாறிவிட்டது. புரட்சிக்கு முன்பு ரசியா ஒப்பீட்டளவில் பொருளாதார ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் பின்தங்கியிருந்தது. இப்பொழுது சோவியத் ஒன்றியம் உலகின் முதல்நிலை தொழில்துறை வல்லரசுகளில் ஒன்றாக ஆகியிருக்கிறது. சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரம் படிப்படியாக உயர்ந்து வருகின்றது. சோவியத் ஒன்றியத்திலுள்ள கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார நிறுவனங்களின் தரம் முதலாளித்துவ நாடுகளுடையதைக் காட்டிலும் வெகுதூரத்திற்கும் விஞ்சி நிற்கிற. சோவியத் ஒன்றியம் உலகின் முதல் அணு விசை நிலையத்தை நிறுவியுள்ளது. உலகின் முதல் வரிசை ஜெட் விமானங்களைத் தயாரித்துள்ளது. கண்டம் விட்டுக் கண்டம் தாவும் ஏவுகணைகளைத் தயாரித்துள்ளது. உலகின் முதலாவது மற்றும் இரண்டாவது புவிச் செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியுள்ளது.

இரண்டு நிகழ்வுகளில் புவிச்செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தி சோவியத் ஒன்றியம் பெற்றுள்ள வெற்றியை உலகமே அங்கீகரித்துள்ளது. இது இயற்கையை மனிதன் வென்று நிற்பதில் ஒரு புதிய சகாப்தத்தைத் துவங்கி வைத்துள்ளது. சோவியத் மக்கள் மட்டுமல்லாமல் உலகப் பாட்டாளி வர்க்கமும் மனித இனம் முழுவதும் இதற்காகப் பெருமைப்பட்டுக் கொள்ள முடியும் (கைதட்டல்). ஒரு சில பிற்போக்குவாதிகள் மட்டுமே இது குறித்து மகிழ்ச்சியின்றி இருக்கிறார்கள்.

நடைமுறை பணிகளைக் கையாள்வதில் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டு கட்சி மார்க்சிய லெனினியத்தை ஆக்கபூர்வமாகப் பிரயோகித்திருப்பதை சோவியத் மக்க

**சோவியத் மக்களால் நடத்தப்பட்ட மாபெரும் புரட்சி உலக வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை துவக்கி வைத்தது. வரலாற்று ரீதியாக, பலவகையான புரட்சிகள் நடந்துள்ளன, ஆனால் அக்டோபர் சோசலிசப் புரட்சியுடன் அவை எவற்றையும் ஒப்பிடமுடியாது**

ளின் கட்டுமானப் பணியில் முழுமையான வெற்றியை உறுதிப்படுத்தியிருக்கிறது. சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்டுக் கட்சியின் இருபதாவது பேராயம் சோவியத் ஒன்றியத்தில் கம்யூனிசக் கட்டுமானத்திற்காக முன் வைத்துள்ள போராட்டத் திட்டம் ஒரு நல்ல உதாரணமாகும். தனி நபர் துதிக் கலாச்சாரத்தை வெற்றி கொள்வது, விவசாயத்தை மேம்படுத்துவது, தொழில் மற்றும் கட்டுமானத்துறை, நிர்வாகத்தைச் சீரமைப்பது, ஒன்றியக் குடியரசுகள் மற்றும் உள்ளூர் அமைப்புகளின் அதிகாரத்தை விரிவுபடுத்துவது, கட்சி விரோதக் குழுக்களை எதிர்ப்பது, கட்சிக்குள் ஒற்றுமையைப் பலப்படுத்துவது, சோவியத் தரைப்படை மற்றும் கப்பற்படையில் கட்சி, அரசியல் பணிகளை மேம்படுத்துவது, ஆகிய மத்தியக்குழு எடுத்த புத்திசாலித்தனமான நடவடிக்கைகளை சோவியத் ஒன்றியத்தில் உள்ள அரசுடமையாக்கப்பட்ட அனைத்தையும் மேலும் மேலும் பலப்படுத்தி வளர்ச்சி பெறச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

சோவியத் பெற்ற வெற்றிகளினால், உலக அரங்கிலும், மக்கள் தமது சொந்த எதிர்காலத்தைப் பற்றி இன்னும் தெளிவாக சிந்திக்கத் துவங்கிவிட்டார்கள். இன்றியமையாத வகையில், சோவியத் ஒன்றியத்தின் பாதையே, அக்டோபர் புரட்சி பாதையே மனித இனமனைத்திற்கும் முன்னேற்றத்திற்கான பிரகாசமான, பொதுவான வழியாகும். (உற்சாகமான கைதட்டல்கள்), உலகம் முழவதிலும் உள்ள பெருந்திரளான மக்கள் அக்டோபர் புரட்சியின் நாற்பதாவது ஆண்டு நிறைவினை உளமாறக் கொண்டாடுகிறார்கள். ஏனெனில் கடந்த நாற்பதாண்டுகால வரலாறு, பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்தைத் தோற்கடிப்பது உறுதி, சோசலிசம் முதலாளித்துவத்தை தோற்கடிப்பது உறுதி. ஒடுக்கப்பட்ட நாடுகள் ஏகாதிபத்திய வாதிகளைத் தோற்கடிப்பது உறுதி என்பதை அவர்கள் நம்பும்படி செய்திருக்கிறது. உண்மையில், இடையூறுகளும் திடீர்த் திருப்பங்களும் இன்னும் மக்களை எதிர் கொண்டுள்ளன. ஆனால் முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்பாகவே லெனின் அழகாகச் சொன்னார்: 'முக்கியமான விசயம் பாதைகளை மூடியிருந்த பனிக்கட்டிகள் உடைக்கப்பட்டுவிட்டன, சாலை திறக்கப்பட்டுவிட்டது: பாதை காட்டப்பட்டுவிட்டது' (உற்சாகமான கைதட்டல்கள்).

சீனக் கம்யூனிஸ்டு கட்சியால் வழிநடத்தப்பட்ட மக்கள் புரட்சி, அக்டோபர் புரட்சியால் தொடங்கிவைப்பட்ட பாட்டாளி வர்க்கத்தின் உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பகுதியாகவே எப்போதும் இருந்து வந்திருக்கிறது. சீனப் புரட்சிக்கென்று அதன் சொந்த தேசியப் பண்பு நலன்கள் இருக்கின்றன. இவற்றைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டியது முழுவதும் அவசியமானதாகும். ஆனால் நமது சொந்தப் புரட்சியிலும் சோசலிசக் கட்டுமானத்திலும் நாம் சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்டு கட்சி மற்றும் மக்களின் செறிவான அனுபவத்தை முழுவதுமாகப் பயன்படுத்தியிருக்கிறோம். அக்டோபர் புரட்சியின் அனுபவத்தையும் சோவியத் ஒன்றியத்தின் சோசலிசக் கட்டுமான அனுபவத்தையும் சோவியத் ஒன்றியத்தின் சோசலிசக் கட்டுமான அனுபவத்தையும் பெற்றிருப்பது சீனமக்களுக்குப் பெரும் பேறாகும். இன்னும் பல இடையூறுகளை எதிர்கொண்ட போதும் தவறுகளைக் களையவும் பிற பல தவறுகளைத் தவிர்க்கவும் தமது லட்சியத்தை ஓரளவுக்கு இலகுவாகத் தொடரவும் உதவியிருக்கிறது.

அக்டோபர் புரட்சிக்குப் பிறகு, எந்த ஒரு நாட்டின் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளரும், ரசியப் புரட்சியின் அனுபவத்தைப் புறக்கணித்தாலோ அல்லது அதன் அனுபவத்தை தீவிரமாகக் கற்காவிட்டாலோ சோவியத் ஒன்றியத்தின் சோசலிசக் கட்டுமானம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அனுபவத்தைக் கற்காவிட்டாலோ அந்த அனுபவங்களைத் தனது சொந்த நாட்டின் குறிப்பான நிலைமைகளுக்கேற்ப பகுத்தாய்வு செய்து ஆக்கபூர்வ வழியிலும் பயன்படுத்தாவிட்டாலோ மார்க்சியத்தின் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற லெனினியத்தில் அவர் தேர்ச்சி பெற இயலாமல் போய்விடுவார். அவர் தனது சொந்தநாட்டில் புரட்சி மற்றும் கட்டுமானப் பிரச்சனைகளை சரியாகத் தீர்க்கவியலாதவராக ஆகிவிடுவார். அவர் வறட்டுச் சூத்திரவாதம் அல்லது திருத்தல் வாதத் தவறுகளைச் செய்துவிடுவார். நாம், இவ்விரு விலகல்களையும் ஒரே சமயத்தில் எதிர்க்க வேண்டும். ஆனால் தற்சமயம், திருத்தல்வாத விலகலை எதிர்ப்பது ஒரு குறிப்பான அவசரக் கடமையாகும்.

அக்டோபர் புரட்சியிலிருந்து சோவியத் ஒன்றியத்துடன் நட்புரீதியான உறவுகளுடன் இருக்க மறுக்கும் எந்த அரசாங்கமும் அதன் சொந்த நாட்டு மக்களின் உண்மை யான நலன்களுக்கு ஊறு செய்கிறது (நீண்ட, உற்சாகமான கைதட்டல்கள்) என்பது அதே அளவுக்குத் தெளி வாகிறது. இன்றைய உலகில், மொத்த மாக 900 மில்லியன் மக்கள் தொகை யைக் கொண்டிருக்கக் கூடிய பல ஐரோப்பிய நாடுகளும் ஆசிய நாடுக ளும் அக்டோபர் புரட்சியின் பாதையை வெற்றிகரமாகப் பின்பற்றி ஒரு சக்தி வாய்ந்த உலக சோசலிச அமைப்பை உருவாக்கியிருக்கின்றன. முதலாளித்துவம் அண்மைக் காலத்தில் தனது மேலாதிக்கத்தை இழந்துவிட்டது. சோசலிசம் வெல்லப்பட முடியாததாகிவிட்டது.

இறுதியில் சோசலிச அமைப்புமுறை முதலாளித்துவ முறையை அகற்றிவிடும். இது மனித விருப்புவெறுப்புக்கப்பாற்பட்ட ஒரு புறவய யதார்த்த விதியாகும். வரலாற்றுச் சக்கரத்தின் முன்னேற்றத்தைப் பிற்போக்குவாதிகள் எவ்வளவு தான் கடினமான முறையில் தடுத்து நிறுத்திவிட முயற்சித்தாலும் விரைவிலோ அல்லது பின்னரோ புரட்சி வந்தே தீரும். (நீண்ட உற்சாகமான

**முதல் உலகப் போருக்குப் பின்பு, ரசியாவில் மாபெரும் அக்டோபர் புரட்சி நடந்தது. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்பு கிழக்கு ஐரோப்பாவிலும் கிழக்கிலும் மிகுதியான புரட்சிகள் நடந்தேறின, ஏகாதிபத்திய படை வீரர்கள் ஒரு மூன்றாவது உலகயுத்தத்தை துவங்க தீர்மானித்தார்களானால் அவர்கள் உலக முதலாளித்துவ அமைப்பை முடிவுக்குக் கொண்டு வருவதைத் தவிர வேறு விளைவுகளை எதிர்பார்க்க முடியாது**

கைதட்டல்கள்) 'ஒரு பாறையைத் தூக்கி காலில் போட்டுக் கொள்வது' என்பது முட்டாள்களின் செயல்களை விவரிக்கும் ஒரு சீனப் பழ மொழியாகும். ஒவ்வொரு நாட்டின் பிற்போக்குவாதிகளும் அத்தகைய முட்டாள்களே, புரட்சிகர மனிதர்களை அவர்கள் தண்டிப்பது, மக்களை பரவலாக எழுச்சி கொள்ளச் செய்து, புரட்சியை மிகுதியான சீற்றம் கொண்டதாக ஆக்குவதிலேயே முடியும். (உற்சாகமான கைதட்டல்கள்). ரசிய ஜாரும் சியாங் கே ஷேக்கும் புரட்சியாளர்களைத் தண்டித்தபோது, அது மாபெரும் ரசியப் புரட்சிக்கும் சீனப் புரட்சிக்கும் சேவை புரிந்ததாக அமையவில்லையா?

சொந்த நாட்டிலும் காலனிய அரை-காலனிய நாடுகளிலும் மக்களை ஒடுக்குவது தமது உரிமை என்று கூறிக்கொண்டு ஏகாதிபத்தியவாதிகள் யுத்தத்தில் நம்பிக்கை வைத்தனர். ஆனால் யுத்தத்தில் அவர்கள் எதை எதிர்பார்க்க முடியும்? கடந்த அரை நூற்றாண்டில், நாம் இரண்டு உலக யுத்த அனுபவங்களைக் கண்டிருக்கிறோம். முதல் உலகப் போருக்குப் பின்பு, ரசியாவில் மாபெரும் அக்டோபர் புரட்சி நடந்தது. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்பு கிழக்கு ஐரோப்பாவிலும் கிழக்கிலும் மிகுதியான புரட்சிகள் நடந்தேறின, ஏகாதிபத்திய படை வீரர்கள் ஒரு மூன்றாவது உலகயுத்தத்தை துவங்க தீர்மானித்தார்களானால் அவர்கள் உலக முதலாளித்துவ அமைப்பை முடிவுக்குக் கொண்டு வருவதைத் தவிர வேறு விளைவுகளை எதிர்பார்க்க முடியாது. (உற்சாகமான கைதட்டல்கள்)

(மிகுதி அடுத்த இதழில்)

**தோழர் மாவோ மாபெரும் அக்டோபர் சோசலிசப் புரட்சியின் நாற்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் நடந்த சோவியத் ஒன்றியக் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்தின் இரண்டு சோவியத்துக்களின் கூட்டுக் கூட்டத்தில் ஆற்றிய உரை, மக்கள் சீனம் இதழ், பெய்ஜிங், டிசம்பர் 1, 1957**

# மலாலா என்ற தேவதையும் ஸ்னோடன் என்ற சாத்தானும்

## ஊடகங்கள் சொல்லாத கதை



'பயங்கரவாதத்தை ஒழிக்கப் பெண்கள் கல்வி கற்க வேண்டும்' என்ற கோஷத்தை அவர்கள் முன்வைக்கிறார்கள். சமூகத்தில் பெண்களுக்கெதிராக நிலவும் ஒடுக்குமுறையை இல்லாதொழிக்குமாறு அவர்கள் கோரவில்லை. அவர்கள் பெண்களுக்காகக் குரல் கொடுக்கிறார்களாயின், பெண்கள் வரையறையின்றி உரிமைகள் மறுக்கப்பட்டு அடக்குமுறைக்காளாகும் பாகிஸ்தானைப் பற்றிப் பேசுவார்களா?

தலிபான்களை எதிர்த்ததற்காக பாகிஸ்தானின் 16 வயதுச் சிறுமி மலாலா யூசு∴ப்சை*(Malala Yousafzai)* இன்று பலராலும் போற்றப்படுகிறார். மேற்குலக ஊடகங்கள் அவரைத் தலையில் தூக்கிக் கொண்டாடுகின்றன. பெண்களின் கல்வி உரிமையை முன்னிறுத்தி தலிபான்களுக்கு எதிராக மலாலா குரல் கொடுத்ததும் தொடர்ந்தும் அதற்காகப் போராடுவதும் மெச்ச வேண்டியன என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால் மலாலா இன்று மேற்குலக ஊடகங்களின் செல்லத் தேவதையாக்கப் பட்டிருக்கிறார். ஐக்கிய நாடுகள் சபை அவரது பிறந்த தினத்தை மலாலா தினமாக பிரகடனப்படுத்துகிறது. மலாலா அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐ.நாவின் கூட்டமொன்றில் சிறுவர்களின் உரிமைகள் பற்றிப் பேசிப் பலத்த கரகோஷத்தைப் பெறுகிறார். ஒபாமா தம்பதிகளுடன் இரவுணவு உண்கிறார். சிறுவர் உரிமைகளின் அவசியம் பற்றியும் அமெரிக்க ஜனாதிபதி அதற்கான தனது சேவையைத் தொடர வேண்டுமெனவும் மலாலா அவரிடம் கோரியதாகவும் ஊடகங்கள் முரசறைகின்றன. இதில் உள்ள சோகம் யாதெனில் சிறுவர்களுக்கான உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச சமவாயத்தில் கையொப்பமிடாத இரண்டு நாடுகளில் ஒன்று அமெரிக்கா. மனித உரிமைகள் பேசும் அமெரிக்காவின் யோக்கியம் இதுதான்.


அதே வேளை, அமெரிக்கா தன் சொந்த மக்களுக்கெதிராக செய்யும் வஞ்சகங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்ததற்காகத் தனது சொந்த நாட்டின் அரசால் தேடப்படுபவராக எட்வர்ட் ஸ்னோடன் மாறியுள்ளார். ஸ்னோடன் தலிபானின் கொடுமைகளை வெளியிட்டிருந்தால் ஐ.நா. ஒருவேளை ஸ்னோடன் தினத்தையும் அறிவித்திருக்கவும் கூடும்.

பாகிஸ்தானில் மலாலாவைப் பாதுகாக்க வக்கற்ற மேற்குலகில் வாழும் பாகிஸ்தானிய மேட்டுக்குடியினர் இன்று மலாலாவின் பாதுகாவலர்கள் ஆகியிருக்கிறார்கள். தான் பெனாசீர் பூட்டோவினுடைய சால்வையை அணிந்திருப்பது தனக்குப் பெருமையளிக்கிறது என்று மலாலா தனது ஐ.நா. உரையைத் தொடங்குகிறார். அதேவேளை, மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்ற மலாலாவைப் பார்க்க வந்த பெனாசீர் பூட்டோவினுடைய கணவரும் பாகிஸ்தான் சனாதிபதியுமாகிய சர்தாரி பெண்களின் கல்விக்காக 10 மில்லியன் அமெரிக்க டொலர்களை யுனெஸ்கோ நிறுவனத்திற்கு அளிப்பதாகச் சொன்னார். அவர் அதை பாகிஸ்தானில் பெண்களின் கல்விக்கோ அல்லது மலாலா கற்ற பள்ளிக்கோ தருவதாகச் சொல்லவில்லை. அவருக்குத் தேவை சர்வதேச கவனம் மட்டுமே.

மலாலா தனியாகத் தலிபான்களுக்கெதிராகப் போராடவில்லை. தனது தோழிகளுடன் இணைந்தே அவர் பெண்களுக்காக கல்வியை வலியுறுத்தி ஸ்வாட் பள்ளத்தாக்கில் போராடினார். மலாலா சுடப்பட்டபோது அவரது தோழிகளும் சுடப்பட்டனர். இன்று அந்தத் தோழிகள் எங்கே? அவர்களுக்கான பாதுகாப்புக்கு யார் பொறுப்பு? இன்று மேற்குலகுக்கும் ஊடகங்களுக்கும் தேவைப்படுவது, பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போராடிய வீராங்கனை என்ற ஒரு விக்கிரகம் மட்டுமே.

"பயங்கரவாதத்தை ஒழிக்கப் பெண்கள் கல்வி கற்க வேண்டும்" என்ற கோஷத்தை அவர்கள் முன்வைக்கிறார்கள். சமூகத்தில் பெண்களுக்கெதிராக நிலவும் ஒடுக்குமுறையை இல்லாதொழிக்குமாறு அவர்கள் கோரவில்லை. அவர்கள் பெண்களுக்காகக் குரல் கொடுக்கிறார்களாயின், பெண்கள் வரையறையின்றி உரிமைகள் மறுக்கப்பட்டு அடக்குமுறைக்காளாகும் பாகிஸ்தானைப் பற்றிப் பேசுவார்களா?

பாகிஸ்தானின் குற்றவியல் நீதி அமைப்பு, பெண்களுக்கு எதிரான அத்து மீறல்களை சரியாக விசாரிப்பதும் இல்லை, குற்றங்களுத் தண்டனையை வழங்குவதுமில்லை. தப்பித்தவறி நீதிமன்ற வாசலைத் தாண்டிவரும் வழக்குகள் பொதுவாக 'ஆணுக்கு கொலை செய்யும் உரிமை உண்டு' என்ற மத அனுமதிச் சீட்டுடன் வெளியேற்றப்படுகின்றன.



பெண்களுக்கெதிராக வன்முறைகள் வரன்முறையாக சமூகக் கட்டமைப்பின் அம்சமாக இருக்கும் பாகிஸ்தானின் சிறுமி எவ்வாறு பயங்கரவாதிகளுக்கெதிராக மட்டும் பேசமுடியும்? பயங்கரவாதம் பற்றியே பேச வேண்டும் என்பதுதான் மேற்குலகின் தேவை.

சரியாக ஒரு தசாப்த காலத்துக்கு முன் 15 வயது நிரம்பிய கனடியப் பிரசையான ஓமர் குவாண்டனாமோ சிறையில் அடைக்கப்பட்டிருந்த செய்தி வெளியானபோது இதே சிறுவர் உரிமைக் காவலர்களும் மனித உரிமைப் போராளிகளும் எங்கே போனார்கள்? மலாலா சுடப்பட்ட போது அவருக்கும் வயது 15 தான். மலாலாவை சிறுவர் உரிமைப் போராளியாகக் கொண்டாடும் அமெரிக்கா ஓமரை சிறுவனாக ஏற்றுக் கொள்ளவே இல்லை. வாழ்க அமெரிக்க ஜனநாயகம்

மலாலா தனது உரையில் சிறுவர் உரிமைகள் பற்றியும், சிறுவர்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது என்றும் பேசினார். யார் யாரதோ தேவைகளுக்குகாகவே தான் இவ்வாறெல்லாம் உரையாற்றுகிறார் என்பதை அவரே உணரவில்லை என்பது முரண்நகை.

**உலகோன்**

# அதிகரிக்கும் ஐரோப்பியப் பொருளாதார நெருக்கடியும் உள்விளைவுகளும்

"இரும், சற்றுப் பொறும், எல்லாஞ் சரிவரும்" என்று கடந்த பல ஆண்டுகளாக ஐரொப்பாவின் பொருளாதார நெருக்கடிப் பற்றி பொருளியலாளர்கள், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஐரொப்பிய ஒன்றியம், அரசியல் தலைவர்கள் எல்லோரும் சொல்லி வருகிறார்கள். ஆனால் எதுவும் மாறவில்லை. அண்மையில் ஒக்ஸ்பாம் *(Oxfam)* நிறுவனம் வெளியிட்ட "ஒரு எச்சரிக்கைக் கதை- ஐரோப்பாவின் சிக்கன நடவடிக்கைகளதும் சமதுவமின்மையினதும் உண்மைச் செலவு" என்ற தலைப்பிட்ட அறிக்கை, 2025ம் ஆண்டளவில் ஐரோப்பா முழுவதிலும் மேலும் 25 மில்லியன் ஐரோப்பியர்கள் வறுமையில் வாழநேரும் என்று எச்சரிக்கிறது. ஐரோப்பாவில் மக்கள் நலத்திட்டங்கள் எவ்வளவு தூரத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளன என்பதையும் சமூக நலத்திட்டங்களுக்கு பெயர் போன அரசுகளைக் கொண்டிருந்த ஐரோப்பா எவ்வாறு இன்று தயவுதாட்சணியமின்றிச் சமூக நலத்திட்டங்களைக் குறைப்பதன் ஊடாக மக்களை வறுமையில் தள்ளுகிறது என்பதையும் அவ் அறிக்கை கோடிட்டுக் காட்டுகிறது. பிரித்தானியாவில் 2018க்குள் 1.1 மில்லியன் அரச ஊழியர்கள் வேலை இழக்கும் அதேவேளை பிரித்தானியாவில் பொதுச் செலவுகள் 11.5% வெட்டப்பட்டுள்ளன. இவை அயர்லாந்தில் 40%மும் ஸ்பெயினில் 12%மும் வெட்டப்பட்டுள்ளன. வேலையின்மை பாரிய பிரச்சனையாகியுள்ளது. நீண்டகால வேலையின்மை, இளையோர் வேலையின்மை, பொதுவான வேலையின்மை ஆகிய மூன்றும் மோசமாக அதிகரித்துள்ளன. கிரேக்கத்திலும் ஸ்பெயினிலும் வேலையின்மை 24%. ஆதில் இளையோர் வேலையின்மையே பாரிய நெருக்கடிகளை உருவாக்கும் என்று அஞ்சுகிறார்கள். இளையோர் வேலையின்மை கிரேக்கத்தில் 59% ஸ்பெயினில் 56% போத்துக்கலில் 42% இத்தாலியில் 39%.




சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும், கட்டமைப்புச் சீராக்கத் திட்டங்கள் *(Structural Adjustment Programmes)* எவ்வாறு பொருளாதார நெருக்கடியிலிருந்து பாதுகாக்கும் என ஆபிரிக்காவுக்கும் இலத்தீன் அமெரிக்காவுக்கும் தென்கிழக்கு ஆசியாவுக்கும் 1980களிலும் 1990களிலும் அவற்றைப் பரிந்துரைத்து நாடுகளைத் திவாலாக்கின.

இப்போது ஐரோப்பாவெங்கும் முன்னெடுக்கப்படும் சிக்கன நடவடிக்கைகள் சமூக நலத் திட்டங்களை இல்லாமல் ஒழிப்பதிற் குறியாக உள்ளன. குறிப்பாக இளைஞர்கள் தங்கள் திறமைக்கேற்ற ஊதியமோ வேலையோ கிடைப்பதில்லை என உணர்கிறார்கள். இது நீண்டகாலத்தில் ஐரொப்பாவில் நிகழவுள்ள அமைதியின்மையின் ஊற்றுமூலமாக இருக்கும். 24 வயதான ஆன் என்ற பட்டப்பின்படிப்பு மாணவி பின்வருமாறு சொல்லியிருந்தார். "எனக்கொரு வேலை வேண்டும். அது எதுவென்றாலும் பரவாயில்லை- சட்டைக் கடையில், உணவு விடுதியில், பல்பொருள் அங்காடியில், சுத்தம் செய்தல் எதுவென்றாலும். நான் பட்டம் பெற்றவள் என்பதையும் நான் பட்டப்-பின்படிப்புக் கற்கிறேன் என்பதையும் எனது சுயவிபரக்கோவையிலிருந்து எடுத்துவிட்டேன். ஏனெனில் பட்டதாரிகள் மலசலகூடத்தைச் சுத்தம் செய்வதைத் தொழில் தருநர்கள் விரும்புவதில்லை. எனக்கு இப்போது வேண்டுவது வேலையொன்றே".

சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும், கட்டமைப்புச் சீராக்கத் திட்டங்கள் *(Structural Adjustment Programmes)* எவ்வாறு பொருளாதார நெருக்கடியிலிருந்து பாதுகாக்கும் என ஆபிரிக்காவுக்கும் இலத்தீன் அமெரிக்காவுக்கும் தென்கிழக்கு ஆசியாவுக்கும் 1980களிலும் 1990களிலும் அவற்றைப் பரிந்துரைத்து நாடுகளைத் திவாலாக்கின. அவர்களது மருந்தையே இன்று அவர்களே அருந்துகிறார்கள். ஐரோப்பாவின் இன்றைய பொருளாதார நெருக்கடி தீவிர வலதுசாரிக் கட்சிகட்கான ஆதரவை அதிகரிக்கிறது. அத்துடன் நவ-நாஜிக் குழக்கள் அதிகரிப்பதோடு வெள்ளை இனவாதமும் தீவிரமாகப் பரப்பப்படுகிறது. பல் இனக் குழமங்களையும் மனித உரிமைகளையும் கொண்ட நாடுகள் என்று சொல்லிக்கொண்ட நாடுகள் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளன. ஐரோப்பாவில் வாழ்கின்ற கறுப்பினத்தோர் மீதும் ஆசியர்கள் மீதும் வன்மம் கட்டவிழ்த்து விடப்படுகிறது. தீவிர வலதுசாரிக் கட்சிகள் தேர்தல்களில் வென்று ஆட்சியைக் கைப்பற்றுகின்றன. இவையெல்லாம் நடந்தும் பிரச்சனை இப்போதைக்குத் தீரப்போவதில்லை என்பது மட்டும் வெள்ளிடைமலை. கார்ல் மார்க்ஸ் சொன்னது போல முதலாளித்துவம் தனக்கான புதைகுழியைத் தானே தோண்டுகிறது.

## 01>>>மலையக தமிழ் பிரதிநிதி...

மாகாணசபையில் 14 தமிழர் பிரதிநிதித்துவம் உள்ளன. தெரிவு செய்யப்பட்ட அநேகமானோர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் நெருக்கமாக இருந்து அதன் வெற்றிலைச் சின்னத்தில் வெற்றி பெற்றவர்கள். இ.தொ.காவினர், தமது சேவல் சின்னத்தில் கண்டி மாத்தளை மாவட்டங்களில் போட்டியிட்டு வென்றிருப்பினும் அவர்களும் அரசாங்கப் பங்காளிகளாகவே உள்ளனர்.

தனித்துவம் பேசும் மலையக மக்கள் முன்னணி தம்து மண்வெட்டிச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருப்பினும் அவர்களும் அரசாங்க ஆதரவு நிலைப்பாடுடையோராகவே உள்ளனர். பேரினவாதக் கட்சிகளைச் சார்ந்தும் அவற்றின் அரசாங்கங்களில் பங்கு கொண்டும் வருகின்ற தொடர்ச்சியே மலையகத்தில் தொடரப்படுகிறது. இம்முறை மாகாணசபைத் தேர்தலிலும் அத்தகைய நிலைப்பாட்டினையே மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகள் என்பன முன்னெடுத்திருந்தனர். இதில் தமிழர் பிரதிநித்துவம் என்பது மக்களையும் தொழிலாளர்களையும் ஏமாற்றுவதற்கான வெறும் சொற்றொடர் மட்டுமே. இதனை மலையகத்தின் புதிய தலைமுறையினர் உணர்ந்து கொள்வதன் ஊடாகவே மாற்று அரசியலை மக்களுக்கான வழிகளில் முன்னெடுக்க இயலும். தற்போதைய தொழிற்சங்க அரசியல் ஆதிக்க சக்திகள் முன்னெடுத்துவரும் அரசியல் என்பத சுயலாப, சுயநல பதவி அனுபவிப்பிற்கான அரசியல் என்பது மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் நடைமுறைகளின் ஊடாக விளங்கவைத்தல் வேண்டும். அதன் மூலமே சரியானதும் உறுதியானதுமான மக்கள் இயக்கம் மத்தியில் கட்டியெழுப்ப முடியும்.

# நரபலி நரேந்திர மோடி
## இந்தியாவின் அடுத்த பிரதமரா!



பாசிசக் கொலைகாரன் நரேந்திரமோடி, பாரதிய ஜனதா கட்சியின் பிரதமர் பதவிக்கான வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் என்று கூறுவதை விட, சதித்தனமான காய் நகர்த்தல்கள், மிரட்டல்கள், நிர்ப்பந்தங்கள் மூலம் தன்னைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர வேறு எந்த முடிவையும் எடுக்க முடியாத நிலையை உருவாக்கி, தன் சொந்தக் கட்சியினரைப் பணிய வைத்திருக்கிறார் என்று கூறுவதே பொருத்தமானது.

1980-களின் பிற்பகுதியில் பாரதிய ஜனதா தனது வாக்குகளை அதிகரித்துக் கொள்வதற்கு, அதற்கு 'ராமனின் தயவு' தேவைப்பட்டது. 1998-99இல் பதவிக்கு வருவதற்கு 17 கட்சிகள் கொண்ட தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தயவு தேவைப்பட்டது. அன்று கூட்டணியின் பலத்தால் 25.6% வாக்குகளையும் 182 இடங்களையும் கைப்பற்றிய பா.ஜ.க.வின் வாக்கு எண்ணிக்கை 2009-இல் 18.8% ஆகும், நாடாளுமன்ற எண்ணிக்கை 116 ஆகவும் வீழ்ச்சியடைந்தன.

தற்போது கூட்டணியில் இருப்பவர்கள் சிவசேனாவும், அகாலிதளமும் மட்டுமே. பாரதிய ஜனதா தனது வாக்குகளை அதிகரித்துக் கொள்வதற்கு இனி ராமன் பயன்படமாட்டான் என்பதும் கல்லின் மேல் எழுத்தாகி விட்டது. கூட்டணியும் இல்லை, இராமனும் இல்லை. மன்மோகன் அரசின் மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பினை அறுவடை செய்துகொள்வதற்கு, இந்த அரசுக்கு மாற்றான மீட்பனாக மோடியை முன்நிறுத்தியிருக்கிறது பாரதிய ஜனதா கட்சி.

2002 படுகொலை தொடர்பான வழக்குகளில் மோடியின் அமைச்சர் கோத்னானி உள்ளிட்டோர் இரட்டை ஆயுள் தண்டனை பெற்றிருந்தபோதும், மோடியால் அரங்கேற்றப்பட்ட போலி மோதல் கொலைகளுக்காக 32 போலீசு அதிகாரிகள் சிறையில் இருந்தபோதும், மோடியின் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதிய ஆதாரங்கள் உள்ளன என்று உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட அமைகஸ் கியூரி, வழக்குரைஞர் ராஜு ராமச்சந்திரன் கருத்து தெரிவித்து, அந்த வழக்கு விசாரணையில் இருந்த போதும், இஷ்ரத் ஜகான் கொலை வழக்கினை முடக்குவதற்கும், சம்பந்தப்பட்டவர்களை விலை பேசுவதற்கும் மோடியின் தனி உதவியாளர், அமைச்சர்கள், அட்வகேட் ஜெனரல் உள்ளிட்டோர் சதித் திட்டம் தீட்டியதற்கான ஒலிப்பதிவு தற்போது அம்பலமாகியுள்ளபோதும், இத்தனையும் தாண்டி, தண்டிக்கப்பட வேண்டிய ஒரு கிரிமினல் குற்றவாளி, தன்னை இந்த தேசத்தின் மீட்பனென்று பிரகடனப் படுத்திக் கொள்வதை நாம் காண்கிறோம். இது எப்படி சாத்தியமானது?

முஸ்லிம் படுகொலை குறித்த. குற்றவுணர்வின்றி மீண்டும் மீண்டும் குஜராத் மோடியைத் தேர்ந்தெடுத்தது. அம்மாநிலத்தின் இந்துப் பெரும்பான்மையினர் இந்துத்துவக் கருத்தியலுக்கு அடிமையாக்கப்பட்டிருப்பது அதற்கு ஒரு முக்கியமான காரணமாக இருந்து வருகிறது. எனினும், அது மட்டுமே காரணமல்ல. தன்னுடைய கொலைக்குற்றத்தை நியாயப்படுத்துவதற்கு இந்துத்துவக் கருத்தியலை மட்டுமே நம்பி இருப்பது போதுமானதல்ல என்பதுடன், பொருத்தமானதும் அல்ல என்று புரிந்து கொண்ட மோடி, முஸ்லிம் படுகொலை குறித்த விமர்சனங்களை குஜராத்துடைய கவுரவத்தின் மீதான தாக்குதல் என்றும், குஜராத் சாதித்திருக்கும் 'வளர்ச்சியின் மீதான தாக்குதல்' என்றும் திசை திருப்பினார்.

இப்போது இந்த விமர்சனங்களுக்கு மோடி மட்டுமே பதில் சொல்லிக் கொண்டிருக்கும் நிலை மாறிவிட்டது. மாற்றியமைக்கப்பட்டுவிட்டது என்பதே சரியானது. 90-களில் பாபர் மசூதிதான் ராம ஜென்மபூமி என்ற கருத்துக்காக ஒரு சராசரி இந்து எப்படி முட்டாள்தனமாகவும், மூர்க்கமாகவும் வாதாடினானோ, அதைப்போலவே, இன்று 'மோடியே மீட்பன்' என்ற கருத்துக்காக இந்து நடுத்தர வர்க்கம் வாதாடுகிறது. ஆவியெழுப்புதல் கூட்டத்தில் ஆராதனைக்கு ஆட்பட்டவர்களைப் போலவும், ஐ.பி.எல். ஆட்ட மைதானத்தின் ரசிகர்களைப் போலவும் மோடி பக்தர்கள் அலறுகிறார்கள்.

இந்தியர்கள் அனைவருக்கும் சம உரிமை என்பதுதான் தனது கொள்கையென்றும், சிறுபான்மையினருக்கான சலுகைகள், மொழி வழி மாநிலங்கள், சாதி அடிப்படையிலான இட ஒதுக்கீடு என்பவையெல்லாம் இந்தியாவை பிளவுபடுத்தும் அரசியல் என்றும் (திருச்சி பொதுக்கூட்டத்தில்) பிரகடனம் செய்கிறார் மோடி.

இதன்படி,' இந்து, ஹிந்தி, இந்தியா என்ற ஆர்.எஸ்.எஸ். கொள்கையை ஏற்காதவர்கள், அதாவது, சாதிய, இன, மத, வர்க்க, பாலின ஏற்றத்தாழ்வுகளை இயல்பானவை என்று ஒப்புக் கொள்ளாதவர்கள் தேச விரோதிகள் ஆக்கப் பட்டு விடுகிறார்கள்.

மோடி கூறுகின்ற வளர்ச்சி யாருக்கானது என்பதை, உழைக்கும் வர்க்கம் அல்லது ஒடுக்கப்பட்ட சாதி என்ற முறையிலோ, இனம் அல்லது சிறுபான்மை மதம் என்ற முறையிலோ கேள்வி கேட்டால், அவ்வாறு கேள்வி எழுப்புவதை தேசவிரோத நடவடிக்கையாக ஆர்.எஸ்.எஸ். கும்பல் சித்தரிக்கிறது. வளர்ச்சி எனும் சித்தாந்த போதைக்கு ஆட்பட்டிருக்கும் நடுத்தரவர்க்கமோ, இவ்வாறு கேள்வி எழுப்புபவர்களை பத்தாம்பசலிகளாகவும் திறமைக்குப் பதிலாக சலுகையைக் கோருகின்ற புல்லுருவிகளாகவும் கருதுகிறது.

இன்று மோடியை முன்நிறுத்துக்கின்ற இந்தியத் தரகு முதலாளிய வர்க்கமாக இருக்கட்டும், மோடியைத் தீவிரமாக ஆதரிக்கின்ற மேட்டுக்குடி வர்க்கத்தினர் மற்றும் ஊடகத்தினராகட்டும் அல்லது இதயம் இருக்கவேண்டிய இடத்தில் வயிற்றைப் பெற்றிருக்கும் தனியார்மயத்துக்குப் பிறந்த நடுத்தர வர்க்க அடிமைகளாகட்டும் இவர்கள் பலரது சிந்தனையிலும் வாழ்க்கையிலும் முதலாளித்துவமும் இந்துத்துவமும் இரண்டறக் கலந்துதான் நிலவுகின்றன. இதன் காரணமாகத்தான் வளர்ச்சி என்ற சொல்லை இவர்கள் உச்சரிக்கும்போது, அது ஒரு சித்தாந்தத்துக்குரிய வீரியத்தைப் பெற்று விடுகிறது.

ஒழுக்கம், நீதி, அறம் ஆகியவற்றுக்குப் பொருந்தியதாக வளர்ச்சி இருக்க வேண்டும் என்று வாயளவில் சொல்லிக் கொள்கின்ற பாசாங்கு கூட இவர்களிடம் இல்லை. தன்னுடைய தனிப்பட்ட வளர்ச்சியையோ, இவர்கள் கேட்கும் நாட்டின் வளர்ச்சியையோ எந்த வழி சாதித்துக் கொடுக்கிறதோ அந்த வழி நீதியானது என்பதே இவர்களது அறக்கோட்பாடு.

**இணைய வெளியிலும், ஊடகத்துறையிலும் இவர்க ளால் ஏவிவிடப்பட்டிருக்கும் அறிவுத்துறைக் காலாட் படை முன் எப்போதும் இல்லாத தைரியத்துடன் பார்ப் பன பாசிசக் கருத்துகளை நஞ்சாக கக்குகிறது. ஒரு கோய பல்சின் இடத்தில் இப்போது பல இலட்சம் கோயபல்சு குஞ்சுகள்.**



இங்ஙனம் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும், அதன் விளைவாக ஏற்படும் வெற்றி தோல்விகளையும் ஆட்டத்தின் விதியாக ஒப்புக்கொண்டு அடங்கிப் போகச் சொல்லுகின்ற முதலாளித்துவ சித்தாந்தமும், சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வை இயல்பானதாக எடுத்துக்கொண்டு மனப்பூர்வாமாக இசைந்து வாழச் சொல்லுகின்ற பார்ப்பனிய இந்துத்துவக் கொள்கையும் இரண்டறக் கலந்து விடுகின்றன.

'வளர்ச்சி-சிறந்த அரசாளுமை' என்ற இந்த மந்திரச் சொற்றொடர்கள் 'மோடி மஸ்தானின்' சொந்தக் கண்டுபிடிப்புக்களல்ல. இவை உலக வங்கியிடமிருந்து உருவப்பட் டவை. தனியார்மயம்-தாராளமயக் கொள்கைகள் தம்மளவில் உன்னதமானவை, மாற்றீடு செய்ய முடியாதவையென்றும், அக்கொள்கைகளை ஊழலின்றியும் திறமையாகவும் அமுல்ப்படுத்தும் ஆற்றல் பெற்ற தலைவர்களோடு அரசு பல நாடுகளில் இல்லாமலிருப்பதுதான் வறுமைக்கும், வேலையின்மைக்கும் பிற சமூகப் பிரச்சினைகளுக்கும் காரணம் என்பதும் உலக வங்கி கடைவிரித்து வரும் புளுகுமூட்டை.

பத்தாண்டுகளுக்கு முன் இதே கருத்தின் அடிப்படையில்தான் ஆளும் வர்க்கங்கள் மன்மோகன் சிங்கை மீட்பனாகச் சித்தரித்தன. சிறந்த நிர்வாகி, பொருளாதார வல்லுநர், கறைபடியாத கரம் என்றெல்லாம் கொண்டாடப்பட்ட மன்மோகன், தனியார்மயக் கொள்கைகள் தோற்றுவித்த பாதிப்புகளின் காரணமாகவும், அடுக்கடுக்கான ஊழல்கள் காரணமாகவும் இப்போது மக்கள் மத்தியில் மதிப்பிழந்துவிட்டார். ஆளும் வர்க்கங்களிடமும் மதிப்பிழந்துவிட்டார்.

பண்டைக்காலத்தில் சத்திரியன் என்ற பிறப்புச் சான்றிதழ் வழங்கி மன்னனாகப் பட்டம் சூட்டிவிடும் அதிகாரத்தைப் பெற்றிரந்த பார்ப்பானின் இடத்தில், இன்று கோப்ரேட் முதலாளிகளால் கட்டுப்படுத்தப்படும் ஊடகங்கள் இருக்கின்றன. தாங்கள் விரும்புகின்ற வேகத்தில் தனியார்மய-தாராளமயக் கொள்கைகளை அம்பலப்படுத்தும் 'அரசியல் உறுதி' அவரிடம் இல்லை என்பதால் மன்மோகனை அட்டைப்படத்தில் போட்டு 'லாயக்கில்லாதவர்' ***(Under performer)*** என்று எழுதுகின்றது அமெரிக்காவின் 'டைம்' வார ஏடு. அதே 'டைம்' ஏடு மோடி படத்தைப் போட்டு 'மோடி என்றால் காரியத்தில் உறுதி' ***(Modi Means Business)*** என்று கொண்டாடுகிறது.

எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் தனியார்மய- தாராளமயக் கொள்கைகளை உறுதியாக அமுல்படுத்தக்கூடிய ஒரு வலிமையான பாசிஸ்டையே ஆளும் வர்க்கங்கள் இப்போது எதிர்பார்க்கின்றன. 2002இல் ஈவிரக்கமற்ற முஸ்லிம் படுகொலையை தொலைகாட்சி காமராக்களுக்கு முன்பே நடத்திவிட்டு, அந்தப் படுகொலைகள் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டவை என்பது உலகத்துக்கே தெரிந்த பின்னரும், மோடியின் அமைச்சர்களும், போலீசு உயரதிகாரிகளும் சிறையிலிடப்பட்ட பின்னரும், ஒரு வார்த்தை வருத்தம் கூட தெரிவிக்காமல் மோடி காட்டிவரும் உறுதி, ஆளும் வர்க்கங்களைக் கவர்ந்திருக்க வேண்டும்.

மேற்கு வங்கத்திலிருந்து துரத்தப்பட்ட டாடாவை வரவேற்று, 2900 கோடி ரூபாய் முதல் போட்ட டாடாவுக்கு சுமார் 30,000 கோடி ரூபாய்க்கு சலுகைகளை வாரி வழங்கியதாகட்டும், மாருதி தொழிலாளர் போராட்டத்தை நாடே அனுதாபத்துடன் ஆதரித்தபோதும், சுசுகி முதலாளியின் மீது அனுதாபம் கொண்டு ஜப்பானுக்கே நேரில் சென்று, மாருதி நிறுவனத்தை குஜராத்துக்கு இழுத்து வந்ததாக இருக்கட்டும்; நிர்மா, அதானி, மிட்டல், அம்பானி போன்ற பல முதலாளிகளுக்கும் பல்லாயிரம் கோடி மதிப்புள்ள நிலம், மானியங்கள், கடன்கள், வரி விலக்குகள் ஆகியவற்றை வாரி வழங்கியதாக இருக்கட்டும்; இத்தகைய நடவடிக்கைகள் அனைத்திலும் முதலாளி வர்க்கத்தின் நலனைத் தனது சொந்த நலனாகவே உணர்ந்து செயல்பட்ட மோடியின் துணிச்சல் அவர்களைப் பெரிதும் ஈர்த்திருக்க வேண்டும். அதன் காரணமாகத்தான் 'எகனாமிக் டைம்ஸ்' நாளேடு நடத்திய சர்வேயில் இந்தியாவின் 100 முன்னணி நிறுவனங்களின் தலைவர்களில் 74 பேர் மோடி பிரதமராக வரவேண்டுமென விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள்.

இப்படி முதலாளி வர்க்கத்தால் ஆதரிக்கப்படுகின்ற ஒரு நபர் உழைக்கும் வர்க்கத்தின் வாழ்வில் வளர்ச்சியைக் காட்ட முடியுமா என்ற சிறிய சந்தேகம் கூட மோடி பக்தர்களுக்கு எழுவதில்லை. கம்யூனிச எதிர்ப்பு என்ற ஊறுகாய்ப் பானைக்குள் ஆண்டுக் கணக்காக ஊறப் போட்டு வளர்க்கப்பட்ட அமெரிக்க மக்களே 'முதலாளித்துவம் ஒழிக' என்று உலக முதலாளித்துவத்தின் கருவறையான வால் ஸ்ட்ரீட்டில் முழங்கிவரும் இந்தக் காலத்திலும்கூட, முதலாளிகளால் ஆதரிக்கப்படுவதை மதிப்புக்குரியதாகவும், கூடுதல் தகுதியாகவும் கருதுகிறார்கள் மோடி பக்தர்கள்.

வரலாற்று விவரங்கள், தொல்லியல் ஆய்வுகளை வைத்துக் கொண்டு ராமன் கோயிலை இடித்துத்தான் பாபர் மசூதியைக் கட்டினார் என்று முதலில் வாதாடுவது, அதனை அறிவியல் பூர்வமாக நிலைநாட்ட முடியாத போது, மறுத்து வாதிடுபவர்கள் மீது களங்கம் கற்பிப்பது, அதுவும் முடியாதபோது, 'எங்கள் மத நம்பிக்கையை அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்த முடியாது' என்று தமது முட்டாள்தனத்தை தெனாவெட்டாகப் பிரகடனம் செய்வது என்ற வழிமுறைகளைத்தான் அத்வானி முதல் அடிமட்டத் தொண்டன் வரையிலான அனைவரும் அன்று அயோத்தி விவகாரத்தில் செய்தார்கள்.

அதையேதான் மோடி விவகாரத்திலும் செய்கிறார்கள். இணைய வெளியிலும், ஊடகத்துறையிலும் இவர்களால் ஏவிவிடப்பட்டிருக்கும் அறிவுத்துறைக் காலாட் படை முன் எப்போதும் இல்லாத தைரியத்துடன் பார்ப்பன பாசிசக் கருத்துகளை நஞ்சாக கக்குகிறது. ஒரு கோய பல்சின் இடத்தில் இப்போது பல இலட்சம் கோயபல்சு குஞ்சுகள். பல்லாயிரக்கணக்கான மக்களைத் திட்டமிட்டுப் படுகொலை செய்த ஒரு கிரிமினல், தன்னுடைய குற்றங்களை நியாயப்படுத்திக் கொள்ளவும், தனது பிம்பத்தை உயர்த்திக் கொள்ளவும் அடுக்கடுக்கான போலி மோதல் கொலைகளை அரங்கேற்றிய ஒரு வஞ்சகன், தான் அதிகார ஏணியில் மேலேறுவதற்காகத் தனது கூட்டாளிகளைக் காவு கொடுக்கவும் தயங்காத ஒரு கயவன், 'நானே உங்களது மீட்பன்' என்று முழங்குகிறான்.

பாசிசத்தின் தலையை நசுக்கிக் கொல்ல விரும்புகிறவர்கள் நாட்களைத் தள்ளிப் போடவியலாது. இந்தக் கணமே களத்தில் இறங்க வேண்டும்.

சூரியன்

*(நன்றி: புதிய ஜனநாயகம், அக்டோபர் 2013)*

## புனர்வாழ்வு ?

ஒரு கழுதை வயதுக்கு
கம்பிக் கூட்டுக்குள் அடைத்து
பலதையும் கற்பித்து காட்டாட்சி

புரட்சிக்காரர்களை
கம்யூனிஸ்டுக்களை
இல்லை! இல்லை!
பயங்கரவாதிகளை

பிடித்தோம், அடித்தோம்,
அடக்கினோம், பணித்தோம்,
கொல்லவில்லை நாம்.

இப்போது கற்பிக்கிறோம்
எம் செருப்பை நக்கித் துடைக்க,
எமக்கு சலாம் சொல்ல

'அந்நிய செலாவணிக்காய்'
அவனிக்குச் சொல்லி
மார்தட்டிக் கொண்டது.

கூட்டுக்குள் உள்ளவன்
கம்யூனிஸ்ட்
என்பதை மறந்து
...

*சுதந்திரன்*



# வியட்நாம் விடுதலை தளபதி கியாப் 102 வயதில் இயற்கை எய்தினார்.

2013 ஒக்டோபர் 4ம் திகதி தனது 102வது வயதில் வியட்நாம் விடுதலைப் போராட்ட ராணுவத் தளபதி கியாப் இயற்கையெய்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தளபதி கியாப்பின் இறப்பைத் தொடர்ந்து உலகம் முழுவதும் உள்ள இராணுவ அரசியல் தலைவர்கள் கியாப்பின் சாதனைகள் பற்றி தத்தமது கண்ணோட்டங்களில் கருத்து வெளியிட்டு வருகிறார்கள்.

தளபதி கியாப்பின் முழுப்பெயர் 'வோ நூயென் கியாப்' ***(Vo Nguyen Giap)***. ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த கியாப் சிறுவயதிலேயே அரசியலில் ஈடுபட்டார். பதினெட்டு வயதில் புரட்சிகர நடவடிக்கையில் ஈடுபட்டதால் சிறை வைக்கப்பட்ட அவர், ஒரு கலாநிதிப் பட்டத்திற்கும் உரியவர். இராணுவ மூலோபாய விடயங்களில் அவர் உணர்வு பூர்வமாகப் பற்றுக் கொண்டிருந்தார் என ராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜோன் மக்கெய்ன் ஒரு அமெரிக்க விமானி. வியட்நாம் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்புப் போரில் அவரது விமானத்தை வியட்நாமிய போராளிகள் சுட்டு வீழ்த்தியபோது கைதான அவர் வட வியட்நாமில் ஐந்து வருடங்கட்கு மேலாகச் சிறையிலிருந்தார். பிற்காலத்தில் அமெரிக்க அரசு அவரை ஒரு செனெட்டராக்கியது. மக்கெயின் போராளி கியாப்பின் மரணச் செய்தி கேட்டு ட்விட்டர் மூலம் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தார்; 'தளபதி வோ நூயென் கியாப் இறந்து விட்டார். அவர் ஒரு மிகச் சிறந்த இராணுவ மூலோபாய நிபுணர். அவர் என்னிடம் ஒரு சமயம் "நீங்கள் (அமெரிக்கர்) ஒரு மதிப்பிற்குரிய எதிரி" என்று கூறினார். இராணுவங்கள் மட்டும் யுத்தத்தில் வெற்றிபெறுவதில்லை, நாடுகளும் வெற்றி பெறுகின்றன எனக் கூறும் மக்கெயின், இறப்புக்களால் அமெரிக்கர்கள் களைப்படைந்திருந்தனர் எனவும் கூறுகிறார். 'வியட்நாமிய தளபதி கியாப் சளையாத வசீகரமான தளபதி' என மக்கெயின் வர்ணிக்கிறார். மேலும் பிரெஞ்சுக்காரரையும், அமெரிக்கரையும் துரத்திய கியாப் என்கிறார்.

1954ம் ஆண்டு மே மாதம் 7ம் திகதி இந்தோசீனத்தில் யுத்தம் அதன் இறுதிக் கட்டத்தை அடைந்தது. டியென் பியென் ஃபூ என்பது டியென் பியென் மாகாணத்தின் தலைநகரம். வியட்நாமின் வடமேற்கில் லாவோஸ் எல்லைக்கருகில் இந்த நகரம் இருக்கிறது. பிரான்ஸ் ஆக்கிரமிப்பு படையுடனான கோரச் சமர் 169 நாட்கள் நீடித்தது. 1954 மார்ச் மாதம் டியென் பியென் ஃபூ நகரத்தில் பிரெஞ்சுப் படையினர் மீதான 55 நாள் முற்றுகையை கியாப் தலைமையிலான கம்யூனிஸ்ட் விடுதலைப் போராளிகள் மேற்கொண்டிருந்தனர். பாரிய இழப்புகளிலும் இடைவிடாத பீரங்கித் தாக்குதல்களாலும் விமானம் மூலம் இராணுவத் தளபாடங்கள், உணவு விநியோகம் என்பவற்றைப் பெற முடியாததாலும் பிரெஞ்சுப் படையினர் 1954 மே மாதம் 7ம் திகதி விடுதலைப் போராளிகளிடம் சரணடைந்தனர். இறுதியில் பிரஞ்சுப் படைகள் வியட்நாமை விட்டு வெளியேறின. அவர்கள் வியட்நாமை விட்டு வெளியேறியதும் வியட்நாம் துண்டாடப்பட்டது. வட வியட்நாமில் கம்யூனிஸ்ட்டுகள் ஹோ சி மின்***(Ho Chi Minh)*** தலைமையில் ஆட்சி அமைத்தனர். தென் பகுதியில் அமெரிக்க பொம்மை அரசு நிறுவப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையிலான வட வியட்நாமின் பாதுகாப்பு அமைச்சராகவும் இராணுவத் தளபதியாகவும் தளபதி கியாப் நியமிக்கப்பட்டார்.

வியட்நாமில் பிரஞ்சுப் படைகளை எதிர்த்துப் போரிட்டு வெளியேற்றியதிலும் அமெரிக்கவுடனான 20 வருட யுத்தத்தை வழிநடத்தி வெற்றிக்கு இட்டுச்சென்றதிலும் தளபதி கியாப்பிற்கு பாரிய பங்குண்டு. மக்கள் யுத்தத்திலும் கெரில்லாத் தாக்குதல்களிலும் அவரது ராணுவ ஆற்றல் அளப்பரியது. தெற் தாக்குதல்***(Tet Offensive)*** எனப்படுவது, 1968 ஜனவரி 30ம் திகதி (சந்திர வருடப்) புத்தாண்டு நாளிற் தொடக்கப்பட்ட கெரில்லாத் தாக்குதலாகும். அது அமெரிக்காவுக்கு எதிரான போரின் திருப்புமுனையானது. சந்திர புதுவருட (தெற்) விடுமுறையன்று தொடங்கிய இச் சமரில், ஒரே சமயத்தில் நூற்றுக்கு மேற்பட்ட நகரங்களை மையப்படுத்தி ஒருங்கிணைந்த தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன. வியற்கொங் என அறியப்பட்ட வியட்நாம் விடுதலை முன்னணியின் படைகளும் வட வியட்நாமியப் படையினருமாக 70,000 பேர் இணைந்து இத்தாக்குதல்களை மேற்கொண்டனர்.

ஆரம்பத்தில் கெரில்லா யுத்த தந்திரத்தைக் கடைப்பிடித்த கியாப் தலைமையிலான படையினர், காலப்போக்கிற், கிராமங்களைத் தம் வசமாக்கி ஐந்து இலட்சம் அமெரிக்கப் படையினரைத் தென் வியட்நாமின் தலைநகரான சைகோனுக்குள் (இன்றைய ஹோ சி மின் நகரம்) முடக்கியிருந்தனர். 1954 தொடக்க 1975 வரை இடம்பெற்ற வியட்நாம் போரின் போது 20 இலட்சம் போராளிகளும் பொது மக்களும் கொல்லப்பட்டனர். அமெரிக்கப் படையினர் 55,000 பேர் கொல்லப்பட்டனர். தென் கொரியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளைச் சேர்ந்த அமெரிக்க ஆதரவுப் படையினர் 6,000 பேரும் கொல்லப்பட்டனர். அமெரிக்காவின் தலைமையிலான அனைத்துப் பிற்போக்குவாதிகளாலும் அவர்களது ராணுவங்களாலும் விடுதலைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் போராடிய வியட்நாமியரை வெல்ல முடியவில்லை. வியட்நாம் மக்களது வீரம் செறிந்த அர்ப்பணிப்பு மிக்க போராட்டம் வரலாற்றில் என்றும் மறக்க முடியாததாகும். அதில் தளபதி கியாப்பின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும்.

# வடக்கின் வாக்களிப்பு ராணுவ ஒடுக்குமுறைக்கு எதிரானதாகும்

## பு.ஜ.மா.லெ.கட்சியின் ஊடக அறிக்கை

தமிழ் மக்கள் மீதான பேரினவாத ஒடுக்குமுறைக்கும், வடக்கு கிழக்கில் தொடரப்படும் இராணுவத் தலையீட்டுக்கும், ஜனநாயக மறுப்புகளுக்கும், இயல்பு வாழ்வு மீதான குறுக்கீடுகளுக்கும் எதிரான தமது உறுதிமிக்க எதிர்ப்பை வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ் மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர். அதனூடாக தமக்கான அரசியல்தீர்வையும் அடிப்படை வாழ்வாதார உரிமைகளையும் இழக்கத்தயாரில்லை என்பதனையும் இவ்வாக்களிப்பின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். எனவே மக்கள் வழங்கியுள்ள இத்தேர்தல் ஆணையை மகிந்த சிந்தனையின் கீழான ராஜபக்ச சகோதரர்களது ஆட்சியானது ஏற்று நியாயமான அரசியல் தீர்வை முன்வைப்பதற்கு முன்வரவேண்டும். அவ்வாறு செயல்படுத்துவதற்கு ஜனாதிபதியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமும் முன்வராது தொடர்ந்தும் தமது பேரினவாத இராணுவ ஒடுக்குமுறையினை முன்னெடுக்க முனைந்தால் மீண்டும் நாட்டை அழிவுப்பாதையில் இட்டுச் செல்வதற்கே வழிவகுக்கும்.

இவ்வாறு புதிய- ஜனநாயக- மாக்சிச- லெனினிசக் கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் அவ்வறிக்கையில், யுத்தம் முடிவடைந்தபின் கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ் மக்கள் இழப்புகளையும் அவலங்களையும் அனுபவித்ததால் ஏற்பட்ட அரசியல் விரக்தியில் இருந்து வந்தனர். அதனால் முன்னைய தேர்தல்களில் குறைந்தளவு மக்களே பங்குகொண்டு வந்தனர். அதேவேளை இராணுவ அச்சுறுத்தல்கள் பல நிலைகளிலும் தொடர்ந்து வந்தன. அதனால் இராணுவ செயல்பாடுகள், ஜனநாயக மறுப்புகள், நிலப்பறிப்புகள், சிறைப்படுகொலைகள், அரசியல்கைதிகளின் தடுப்பு போன்றவற்றுக் கெதிரான கவனயீர்ப்புப் போராட்டங்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் வீதிக்கு கொண்டுவரப்பட்டன. இவற்றில் தமிழ்தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி, நவசமசமாயக்கட்சி மற்றும் பொது அமைப்பகள் இணைந்து இத்தகைய போராட்டங்களை துணிவுடன் முன்னெடுத்தன.

கடந்த இரண்டு வருடங்களில் இத்தகைய வெகுஜனப்போராட்டங்கள் அரசியல் விரத்தியுடன் இருந்து வந்த மக்கள் மத்தியில் படிப்படியான நம்பிக்கையை ஏற்படுத்திவந்தன. மக்கள் சக்தி அணிதிரட்டப்படுவதன் அவசியம் மக்கள் மத்தியில் உணர்த்தப்பட்டது. அவற்றின் தொடர்ச்சியாகவே தற்போது இடம்பெற்ற வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் தமது வன்மையான எதிர்ப்பை துணிவான வாக்குப்பதிவின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளனர், அதேவேளை அபிவிருத்தி சலுகைகள் இராணுவ அச்சுறுத்தல்கள் மூலம் மக்களை ஏமாற்றி வாக்குப் பெற்று பேரினவாத ஒடுக்குமுறையினைத் தொடரலாம் என்ற ஆட்சித்தரப்பின் அகங்காரத்திற்கும் மக்கள் தமது உறுதியான பதிலடியை வழங்கியுள்ளனர், அதேவேளை இத்தேர்தலில் மூன்றில் இரண்டு ஆசனங்கள் பெற்றுக்கொண்டமையை 1977ம் ஆண்டு தேர்தல் வெற்றியுடன் ஒப்பிட்டு தவறான கொள்கைகளிலும் பிழையான அரசியல் அணுகுமுறைகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தொடர்ந்தும் செல்லுமாக இருந்தால் தமிழ் மக்களுக்கு மீண்டும் அழிவுகள் அவலங்களை தேடித்தருவதாகவே அமைந்து கொள்ளும்.

எனவே மாகானசபைத் தேர்தல் வெற்றியை நிதானமாக அணுகி பரந்துபட்ட தமிழ்மக்களின் பிரச்சனைகளை உள்ளடக்கிய நேர்மையான அரசியல் சக்திகளை உள்வாங்கிய பொதுவேலைத்திட்டத்தின் அடிப்படையில் முன்செல்வதற்கு தமிழர் தரப்புக் கட்சிகளும் முற்போக்கு ஜனநாயக இடதுசாரி சக்திகளும் இணைந்து முன்செல்ல முன்வரவேண்டும். அல்லாது விடின் கடந்தகாலங்களின் தேர்தல் வெற்றிகளை வைத்து தவறான திசையில் பயனித்தது போன்று "வேதாளம் மீண்டும் முருங்கையில்" என்ற கதையாகிக் கொள்ளக்கூடாது. அத்துடன் தமிழ் மக்கள் வாக்களித்ததோடு மட்டும் நின்றுவிடாது அரசியல் விழிப்புடன் இருந்து சரியான அரசியல் மார்க்கத்தில் வழிநடக்கவும் முன்வரவேண்டும்.



புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி மக்கள் எதிர்நோக்கும் 26 கோரிக்கைகளை முன்வைத்து வவுனியாவில் நடாத்திய 35வது ஆண்டு நினைவுப் பொதுக் கூட்டத்தில் கட்சியின் தலைமைத் தோழர்கள் உரையாற்றுவதையும் கீழே கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.





புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி மாத்தளை பிரதேசத்தில் மத்திய மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு மலையக மக்களும் மாகாண சபைத் தேர்தலும் எனும் தலைப்பில் தோட்டத் தொழிளாலர்கள் மத்தியில் மேற்கொண்ட அரசியல் விழிப்புணர்வு விளக்கக் கூட்டங்களில் சில...



ரத்வத்த தோட்டம் மாஷாகலை உடுபிஹில்ல பைரோல் தோட்டம் - தலைக்கொய